விலை ரூபா: 15.00

Registered as a Newspaper in Srilanka

# வலம்புரி

Valampurii

பக்கங்கள்: இருபது

சங்கு 11 வள்ளுவர் ஆண்டு 2041 பங்குனி 12 வெள்ளிக்கிழமை (26.03.2010) தொலைபேசி 222 3378, 222 7829 ஒலி 97

ரா ம் கோ
MADRAS CEMENTS LTD
RAMCO CEMENT
ஆசியாக் கண்டத்தில் முதலாந் தர தொழிற்சாலையிலிருந்து தயாரிக்கப்பட்டது ராம்கோ சீமெந்து
RAMCO

## 25 ஆவது பட்டமளிப்பு விழா இன்று கைலாசபதி கலையரங்கில் ஆரம்பம்

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தின் 25-வது பட்டமளிப்பு விழா இன்று முதல் மூன்று நாள்களுக்குக் கோலாகலமாக நடைபெறவுள்ளது.

நவீன முறையில் வடிவமைக்கப்பட்ட குளிரூட்டப்பட்ட கைலாசபதி கலையரங்கில் இப் பட்டமளிப்பு விழா நடைபெறவுள்ளது.

இதில் 2005,2006 மற்றும் 2007 ஆகிய வருடங்களில் கற்கை நெறிகளைப் பூர்த்திசெய்த 3.ஆயிரத்து 972 பேர் பட்டம் பெறவுள்ளனர்.

யாழ்.பல்கலைக்கழக வேந்தர் பேராசிரியர் ம.சிவசூரிய தலைமையில் நடைபெறும் பட்டமளிப்பில் ஒவ்வொரு நாளும் 15 அமர்வுகள் நடைபெறும். (20 ஆம் பக்கம் பார்க்க)

## ஆலோசனைக் குழு தொடர்பாக நம்பியார்-கோஹன்ன பேச்சு!

(கொழும்பு)

இலங்கையில் நடைபெற்ற போர்க் குற்றங்கள் தொடர்பாக ஐ.நாவின் செயலாளர் நாயகம் அமைக்கவுள்ள ஆலோசனைக் குழுவுக்கான பணிகள் தொடர்பில் ஐ.நாவின் அதிகாரி விஜய் நம்பியார் மற்றும் இலங்கை பிரதிநிதி பாலித கோஹன்ன ஆகியோர் பேச்சுக்களை நடத்தி வருவதாக ஐ.நா. வட்டாரங்கள் தெரிவித்துள்ளன.

இது தொடர்பில் மேலும் தெரிய வருவதாவது;

இலங்கை தொடர்பில் ஆலோசனைக் குழுவை அமைப்பதில் ஐ.நாவின் அதிகாரி விஜய் நம்பியார் மற்றும் ஐ.நாவுக்கான இலங்கைப் பிரதிநிதி பாலித கோஹன்ன ஆகியோர் (20 ஆம் பக்கம் பார்க்க)

# நாடாளுமன்ற உறுப்பினர்கள் அனைவரும் தீர்மானம் எடுக்கும் வகையில் புதிய சட்டம்

## அமைச்சர் பீரிஸ் தகவல்

(கொழும்பு)

சகல நாடாளுமன்ற உறுப்பினர்களும் தீர்மானங்களை மேற்கொள்ளக் கூடிய வகையில் சட்ட திட்டங்களில் திருத்தங்கள் கொண்டு வரப்படும் என அமைச்சர் ஜி.எல்.பீரிஸ் தெரிவித்துள்ளார். இலங்கையின் ஏழாவது நாடாளுமன்றத்தில் இந்தப் புதிய சட்டங்கள் நடைமுறைப்படுத்தப்படும் என அவர் குறிப்பிட்டார். (20 ஆம் பக்கம் பார்க்க)

## சுத்தமான சுவாசம் கிடைக்காததால் பொன்சேகாவின் உடல் நிலை பாதிப்பு

### அவரது மனைவி தெரிவிப்பு

(கொழும்பு)

இராணுவத்தினரால் கைது செய்யப்பட்டு கடற்படைத் தலைமையகத்தில் தடுத்து வைக்கப்பட்டுள்ள ஜெனரல் சரத் பொன்சேகாவுக்குச் சுத்தமான சுவாசம் கிடைக்காததன் காரணமாக அவரது உடல் மோசமடையும் ஆபத்து ஏற்பட்டுள்ளதாக ஜனநாயக தேசியக் கூட்டணியின் தேசிய பட்டியல் வேட்பாளர் அநுரகுமார திஸநாயக்க அச்சம் வெளியிட்டுள்ளார்.

கொழும்பில் நேற்று நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் அவர் இதனைக் குறிப்பிட்டுள்ளார்.

சரத் பொன் (20 ஆம் பக்கம் பார்க்க)

## ஜே.வி.பி. எம்.பியிடம் பொலிஸார் விசாரணை

(கொழும்பு)

அரசாங்கத்திற்கு எதிராக சதித் திட்டம் தீட்டிய குற்றச்சாட்டின் அடிப்படையில் ஜே.வி.பியின் நாடாளுமன்றக் குழுத் தலைவர் அநுரகுமார திஸநாயக்கவிடம் இரகசியப் பொலிஸார் வாக்குமூலம் ஒன்றைப் பெற்றுக் கொண்டுள்ளதாக ஜனநாயகத் தேசியக் கூட்டணி விடுத்துள்ள அறிக்கை ஒன்றில் தெரிவித்துள்ளது.

அரசாங் (20 ஆம் பக்கம் பார்க்க)

## ஐ.நா.சபை நிபுணர்கள் குழுவில் அங்கம் வகிக்க யப்பான் மறுப்பு

(கொழும்பு)

இலங்கை விவகாரம் தொடர்பில் நியமிக்கப்படவுள்ள நிபுணர்கள் குழுவில் அங்கம் வகிக்குமாறு ஐக்கிய நாடுகள் அமைப்பு விடுத்த கோரிக்கையை யப்பானியப் பிரதிநிதி நிராகரித்துள்ளார்.

இலங்கை மனித உரிமை நிலவரம் தொடர்பில் ஆராய்ந்து தமக்கு ஆலோசனை வழங்கும் நோக்கில் ஐக்கிய நாடுகளின் பொதுச் செயலாளர் பான் கீ மூன் விசேட நிபுணர்கள் குழுவொன்றை நியமிக்கத் திட்டமிட்டுள்ளார்.

இந்த விசேட நிபுணர்கள் குழுவில் அங்கம் வகிக்குமாறு யப்பானிய ராஜதந்திரி ஒருவருக்கு விடுக்கப்பட்ட அழைப்பே இவ்வாறு நிராகரிக்கப் (20 ஆம் பக்கம் பார்க்க)

## முல்லைத்தீவு வைத்தியசாலை மீளவும் சொந்த இடத்தில்

(கொழும்பு)

முல்லைத்தீவு மாஞ்சோலையில் உள்ள முல்லைத்தீவு மாவட்ட வைத்தியசாலை மீண்டும் நேற்று முதல் இயங்கத் தொடங்கியுள்ளதாகத் தெரிவிக்கப்படுகின்றது.

முல்லைத்தீவு நகரத்தில் முதல்முதலாக ஆறு குடும்பங்களைச் சேர்ந்த 16 பேர் தற்போது மீள்குடியேற்றம் செய்யப்பட்டுள்ளனர்.

இதுவரையில் 3 ஆயிரத்து 334 பேர் மீள்குடியேற்றம் (20 ஆம் பக்கம் பார்க்க)






## தவறிவிட்டது

திருஞானசம்பந்த சர்மா சோதிநாதன் குருக்கள் என்பவருடைய தேசிய அடையாள அட்டை இல.570373021V அத்துடன் மோட்டார்சைக்கிள் புத்தகம், லைசன்ஸ்,இன்சூரன்ஸ் ,வாகன வரியுடன் சில திறப்புகள் கோர்வையுடன் கறுப்பு நிற பாக் கோண்டாவில் சந்திக்கும் ,வண்ணார்பண்ணை சிவன் கோவிலுக்குமிடையில் தவறிவிடப்பட்டுள்ளது. கண்டெடுத்தவர்கள் தொடர்பு கொள்ளவும். முகவரி சிவகிரி,சிவன் வீதி சிவபூதவ ராயர் கோவிலடி, கோண்டாவில் வடக்கு தொ.பே. இல.0777110629. (956)

# பெண்ணின் சடலம் கிணற்றிலிருந்து மீட்பு

(யாழ்ப்பாணம்)


கோப்பாய்ப் பகுதியில் கிணற்றுக்குள் இருந்து பெண் ஒருவர் சடலமாக மீட்கப்பட்டுள்ளார்.

நேற்று இடம் பெற்ற இச்சம்ப வத்தில் கோப்பாய் தெற்கைச் சேர்ந்த கணேசலிங்கம் தவமலர் (வயது 54) என்பவரேசடலமாகமீட்கப்பட்டுள்ளார்.

குறித்த பெண் அவரது சகோதரரது வீட்டில் வசித்துவந்ததாகவும் அவர்கள் உறவினர் ஒருவரது வைபகத்துக்குச் சென்று விட்டு வந்த போது அவ்பெண்ணைக் காணாத நிலையில் தேடியபோது அப் பெண்ணினது சடலம் கிணற்றுக்குள் காணப்பட்டதாகவும் உறவினர்கள் தெரிவித்ததாக வைத்தியசாலைத் தகவல்கள் தெரிவித்துள்ளன. (ச-14)

## மரண அறிவித்தல்கள்

### வைத்திலிங்கம் சிவபாதம்



மாதகல் மேற்கைப் பிறப்பிடமாகவும் தற்போது இவான் வீதி தொல்புரம் கிழக்கு சுழிபுரத்தை வசிப்பிடமாகக் கொண்டவரும், பண்டத்தரிப்பு பரிஸ் ப.நோ.கூ.சங்க முன்னாள் காசாளரும் வட பிராந்தியக் கூட்டுறவு ஊழியர் தொழிற்சங்க முன்னாள் செயலாளருமாகிய வைத்திலிங்கம் சிவபாதம் 25.03.2010 வியாழக்கிழமை அன்று காலமானார். அன்னா ரின் இறுதிக் கிரியைகள் பற்றிய விபரம் பின்னர் அறிவிக்கப் படும்.

இவான் வீதி,
தொல்புரம் கிழக்கு, சுழிபுரம்

தகவல்:
சி.முருகதாஸ் (மகன்) (962)

### அரியதாஸ் கிருபாரஞ்சினி



நீர்வேலி தெற்கை பிறப்பிடமாகவும் சுவிஸை வசிப்பிடமாகவும் கொண்ட வேதநாயகம் இராசமலர் தம்பதியினரின் புதல்வி அரியதாஸ் கிருபாரஞ்சினி 20.03.2010 அன்று காலமானார்.

அவரது இறுதிக்கிரியைகள் 26.03.2010 இன்று வெள்ளிக்கிழமை சுவிஸில் நடைபெறும். இவ் அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

நீர்வேலி தெற்கு,
நீர்வேலி.

தகவல்
சித்தப்பா, அன்ரி (960)

‘விராட் விஸ்வப் பிரம்மனே நமஹ’

சுழிபுரம் வீரபத்திர சுவாமி உடனுறை பத்திரகாளி அம்பாள் மீது பாடப்பட்ட

## ‘பத்திரகாளி கீதங்கள்’ -பாவுடைத்தட்டு-

## ‘வெளியீட்டுவிழா’

காலம்: 28.03.2010 ஞாயிற்றுக்கிழமை பி.ப. 1.00 மணி

தலைமையுரை: திரு.கு.பொன்னுத்துரை-ஆசிரியர்
தேவஸ்தான பொதுச் செயலாளர்

வெளியீட்டுரை: திருமதி நாச்சியார் செல்வநாயகம்
முதுநிலை விரிவுரையாளர், யாழ் பல்கலைக்கழகம்

வாழ்த்துரை: சிவத்தமிழ் வித்தகர் சிவமகாலிங்கம் அவர்கள்

ஆசியுரை: செஞ்சொற் செல்வர் ஆறுதிருமுருகன் அவர்கள்
(தலைவர்-துர்க்கை அம்மன் தேவஸ்தானம்)

நன்றியுரை: திரு. சிவநேசன் ஆசிரியர்

### பாவுடைத் தட்டு ஆக்கக் கலைஞர்கள்

- பாடலாக்கம் :துரை கணேசமூர்த்தி,ஆசிரியர்
- இசை :சத்தியன்
- ஒலிப்பதிவு :சப்தமி கலையகம்
- பாடியவர்கள் :

Dr. நா.வி.மு. நவரத்தினம் - தலைவர் இசைத்துறை, யாழ் பல்கலைக்கழகம்.
த.றொபேட்- விரிவுரையாளர், யாழ் பல்கலைக்கழகம்
எஸ். குமாரசாமி- விரிவுரையாளர், ஆசிரியர் பயிற்சிக்கல்லூரி
ஜே.ம.ஜோசப் மேரின்-ஆசிரியர்
ந.தனசொரூபி-விரிவுரையாளர், யாழ் பல்கலைக்கழகம்
ஓ.நுசந்தா- இசை ஆசிரியை

(சு-4781)

வெளியீட்டு விழா சிறப்புற வாழ்த்துவோர்

கந்தன் ஸ்ரோர்ஸ் ,பிரதான வீதி, பண்டத்தரிப்பு.

## ‘SUBRA’

### பாராட்டி வாழ்த்துகிறோம்

எமது கல்வி நிறுவனத்தின் கணக்கியல் ஆசான்!

**A.சுபேசன் B.B.A (Hons)**

இன்று யாழ். பல்கலைக்கழகத்தில் நடைபெறும் பட்டமளிப்பு விழாவில் பொது நிர்வாக முதுகலைமாணி பட்டம் பெறுவதையிட்டு மட்டற்ற மகிழ்ச்சி அடைந்து பாராட்டி வாழ்த்துகின்றோம்.

இயக்குநர், ஆசிரியர்கள்-மாணவர்கள், "SUBRA" கல்விநிறுவனம், சித்தன்கேணி, வட்டுக்கோட்டை. (961)


## அன்புள்ள எமது தபால் மூல வாக்காளப் பெருமக்களே!

- தமிழனது ஒரேயொரு சொத்து கல்வி.
- இழந்ததை ஈடு செய்ய வழிகாட்டும் ஒரேயொரு ஆயுதம்.
- பெற்றோர் அறிகை, மாணவர் பொறுப்பு, ஆசிரியர் வாண்மை விருத்தி, அதிபர்கள் முகாமைத்துவப் பயிற்சி, கல்விசாரா ஊழியர்களின் பிரச்சினைகளுக்கு தீர்வு காண.
- மீள்குடியேற்றம், மீள் நிர்மாணம், நிவாரணம்.
- அனைத்து மக்களதும் சமூக, பொருளாதார நலன்பேண

பட்டதாரி ஆசிரியராக (வட்டு, யாழ்.இந்து), அதிபராக (பூநகரி, குப்பிளான்), வட்டாரக் கல்வி அதிகாரியாக (பரந்தன், கிளிநொச்சி), கோட்டக்கல்விப் பணிப்பாளராக (ஊர்காவற்றுறை, பண்டத்தரிப்பு), மாவட்டக் கல்விப் பணிப்பாளராக (முல்லைத்தீவு, யாழ்), மாகாணக் கல்விப் பணிப்பாளராக (வடக்கு), கல்வி அமைச்சின் முதுநிலை ஆலோசகர் (இலங்கை முழுவதும்), கல்வி நிர்வாக வருகை விரிவுரையாளராக (யாழ், வவுனியா பல்கலைக் கழகம், தேசிய கல்வி நிறுவகம், திறந்த பல்கலைக் கழகம், தொழில் நுட்பக் கல்லூரி), 45 வருடங்கள் அரச சேவையில் பணிபுரிந்து தமிழ் சமூகத்திற்கு பட்டறிவு கொண்டு அடி மட்டப் பிரச்சினைகளுக்கு களத்தில் இறங்கி தீர்வு கண்ட ஏழைகளின் கல்வியாளன் கல்வியியல் கலாநிதி நாகமுத்து தணிகாசலம்பிள்ளை.



Dr.S.N. Thanihasalampillai
B.A, M.A, PhD.
SLEAS Class I,Dip. in Ed,Dip. in Ed Management.
Senior Consultant

சுயேட்சைக்குழு-10  X 5

யாழ்ப்பாணம் கல்விச் சமூகத்தினர்

## திறப்பு விழா அழைப்பிதழ்

அன்புடையீர்,

பருத்தித்துறையின் ஆபரண உலகின் தொன்மைசேர் நிறுவனம் சுசீலா நகை மாளிகை புதிய உதயமாக மீண்டும்

### ஸ்ரீ சுசீலா ஆபரண மாளிகை

இல.239, பிரதான விதி, பருத்தித்துறை

மங்களகரமாக நாளை (2010.03.27) சனிக்கிழமை அன்று காலை 7.00 மணிமுதல் 8.40 மணிவரை கூடியுள்ள சுப நேரத்தில் திறந்து வைக்க இருப்பதனால் வாடிக்கையாளர் அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.

உரிமையாளர்: தெ.தர்மகுலேந்திரன்

(சு-4785)

## வேலை வாய்ப்பு

வேலை வாய்ப்பை நாடி நிற்கும் துடிப்பான இளைஞர், யுவதிகளுக்கு சிரேஷ்ட அமைப்பாளரின் கீழ் குடாநாட்டில் சகல பகுதிகளிலும் காப்புறுதி ஆலோசகராக யாழ். மண்ணில் 45 வருடங்களாக தொடர்ந்து நிலைத்திருந்து சேவையாற்றி வரும் அரச காப்புறுதி நிறுவனம் ஒன்றில் பணியாற்ற அரிய வாய்ப்பு.

### வேலை பற்றி

- 1 மாத பயிற்சி காலத்தை உடையது.
- பயிற்சி நெறியின் நிபந்தனைகள் பூர்த்தியாகும் பட்சத்தில் நிரந்தரமாக்கப்படுவீர்கள்.
- பயிற்சிக் கால முடிவில் தொழில் தகைமை தொடர்பான அரச அங்கீகாரம் பெற்ற சான்றிதழ் வழங்கப்படும்.

### அடிப்படைத் தகைமை

- G.C.E.O/L பரீட்சையில் கணிதம் உட்பட 6 பாடசித்தி
- 18 வயதுக்கு மேற்பட்டவராக இருத்தல் வேண்டும்.

தொலைபேசி இலக்கம் உள்ளடங்கலாக சுயவிவரக் கோவையை (BIO DATA) 05.04.2010 க்கு முன்னர் கிடைக்கக் கூடியவாறு கீழ்வரும் விளம்பர இலக்கத்துக்கு அனுப்பவும்.

விளம்பர இல.942
மே/பா.வலம்புரி,
இல.03, 2ஆம் ஒழுங்கை,
பிறவுண் வீதி, யாழ்ப்பாணம். (942)

# இன்று ஒரு தகவல்

## அன்பும் அறிவும்

ஒரு அம்மாவுக்கு அவருடைய வீட்டுக்காரர்மீது அளவு கடந்த அன்பு.· அந்த அன்பை அவர் காட்டும் விதம் எப்படித் தெரியுமா?

தேநீர் தயாரிக்கும் போது அதில் சீனியை அதிகம் போட்டுக் கொடுப்பார். அந்த அப்பாவி மனுஷனும் அதை மிகவும் விருப்பத்தோடு வாங்கிக் குடிப்பார். வெளியிலும் அதை மிகவும் பெருமையாக சொல்லிக் கொள்வார்.

“என் மனைவிக்கு வரவர என்மீது அன்பு அதிகமாகிக் கொண்டே வருகிறது” என்பார்.

“எப்படிச் சொல்றீங்க?” என்று கேட்டால்,

“முன்னாடியெல்லாம் இரண்டு கைப்பிடி சீனி போடுவார். இப்பவெல்லாம் மூன்று கைப்பிடி அளவுக்குப் போடுகிறார். அப்படியானால் அன்பு வரவர அதிகமாகிக்கொண்டு வருகிறது என்றுதானே அர்த்தம்” என்பார்.

அந்த அம்மாவிடம் அன்பு அதிகமாக இருப்பது உண்மையோ இல்லையோ, இவருக்கு அறிவு குறைவென்பது உண்மை. அதில் சந்தேகமே வேண்டியதில்லை.

அன்பு மட்டும் ஒருத்தரிடம் இருந்தாலும் பிரயோசனம் இல்லை. அறிவு மட்டும் ஒருத்தரிடம் இருந்தாலும் பிரயோசனம் இல்லை.

மகிழ்ச்சியான வாழ்வுக்கு மிகவும் முக்கியமாகத் தேவைப்படுவது இரண்டு விடயங்கள்.

ஒன்று – அன்பு, இரண்டு – அறிவு.

இந்த இரண்டில் ஒன்று இல்லையென்றால் கூட மகிழ்ச்சி போய்விடும் என்கிறார் தத்துவ மேதை பெட்ரண்ட் ரஸ்ஸல்.

அதை விளக்குவதற்கு அவர் உதாரணமெல்லாம் கொடுக்கிறார். இரண்டாவது உலக யுத்தம் நடந்த சமயத்தில் பல நாடுகளில் ஏராளமான இராணுவத் தளபாடங்கள் எல்லாம் தயார் பண்ணினார்கள்.

வெடிமருந்து தொழிற்சாலைகளெல்லாம் உருவாக்கினார்கள். நவீன போர்க் கருவிகளெல்லாம் தயார் பண்ணினார்கள்.

அவர்களிடமிருந்த தொழில்நுட்ப அறிவுதான் இவ்வளவும் தயாராவதற்குக் காரணம். இருந்தும் இதெல்லாம் எதற்கு உபயோகப்பட்டது? உலகத்திற்கு கெடுதல் பண்ணுவதற்குத்தான் உபயோகப்பட்டது.

யுத்தத்தை ஆரம்பித்த ஜேர்மனியர்களும் சரி, மற்ற நாட்டுக்காரர்களும் சரி, தாங்கமுடியாத கஷ்டங்களை அனுபவித்தார்கள்.

இதற்கு என்ன காரணம்? அன்பு இல்லாமல் போனதுதான் காரணம்.

அறிவு ஆயுதங்களைத் தயாரித்தது. அன்பில்லாததால் அது அவர்களுக்கு இடைஞ்சலாகி விட்டது. அன்பு சேராத வெறும் அறிவு மட்டும் மகிழ்ச்சியைக் கொடுக்க முடியவில்லையே.

அதே மாதிரித்தான், அறிவு சேராத அன்பினாலும் மகிழ்ச்சியைக் கொடுக்க முடியாது. அறிவு சேராத அன்பும் ஆபத்தை உண்டாக்கிவிடும்.

இந்த நூற்றாண்டின் ஆரம்பத்தில் இந்தியாவிலும் அயல் நாடுகளிலும் ‘பிளேக்’ என்ற ஒரு பயங்கரமான நோய் பரவியது.

அது அதிகமாக பரவியதற்கு காரணம் என்னவென்று நினைக்கிறீங்க? அன்புதான் அதற்குக் காரணமாம்.

எப்படித் தெரியுமா? அன்பு காரணமாக உறவினர்களும் நண்பர்களும் நோயாளிகளைக் கட்டித் தழுவி தங்களுடைய அன்பைத் தெரிவித்துக் கொண்டார்களாம். இது, நோய் அதிகமாகப் பரவுவதற்குச் சாதகமாக போய்விட்டது.

அறிவு சேராத அன்பினால் இந்த நிலைமை. ஆக மொத்தத்தில் நாம் தெரிந்து கொள்ள வேண்டியது என்னவெனில்,

அறிவு இல்லாத அன்பும் ஆபத்து. அன்பு இல்லாத அறிவும் ஆபத்து.

நாம் சந்தோஷமாக இருக்க வேண்டுமானால் இது இரண்டும் கலந்திருக்க வேண்டியது அவசியம்.

*தென்கச்சி கோ சுவாமிநாதன்*

# யாழ் நகரில் இடம்பெறும் அநாகரிகமான செயற்பாடுகள்

## சீ.வி.கே. சிவஞானம் கண்டனம்

யாழ். நகரில் தொடரும் விஷமச் செயல்கள் குறித்து தமிழ்தேசிய கூட்டமைப்பு வேட்பாளரும் முன்னாள் மாநகர சபை ஆணையாளருமான சி.வி.கே. சிவஞானம் தனது கண்டனத்தை வெளியிட்டுள்ளார்.

அவர்விடுத்துள்ள கண்டன அறிக்கையில் மேலும் தெரிவித்துள்ளதாவது, கடந்த 23 ஆம் திகதி நடைபெற்ற இரண்டு விஷமச் செயல்கள் பற்றி எமது கண்டனத்தைத் தெரிவித்துக்கொள்ள விரும்புகின்றோம்.

முதலாவதாக ஒரு ஆயுத போராட்ட இயக்கத்திலிருந்து உருவெடுத்த அறவழிப்போராளி தான்வரித்துக் கொண்ட தமிழ் தேசிய விடுதலைக்காக உண்ணா நோன்பிருந்து தன் இன்னுயிரை ஈகை செய்த தியாகி திலீபனின் நினைவுத் தூபி இடித்து தரைமட்டமாக்கப்பட்டமை சம்பந்தமானது. இந்த நினைவுத் தூபி 1988 ஆம் ஆண்டு எமது முன்முயற்சிமூலம் நிறுவி திறந்து வைக்கப்பட்டது.

பின்னர் 1995 ஆம் ஆண்டு இடப்பெயர்வோடு சேதமாக்கப்பட்ட இந்தத்தூபி மீண்டும் 1998 ஆம் ஆண்டளவில் திரும்பவும் எமது முன் முயற்சியால் திருத்தி அமைக்கப்பட்டது.

எமது மண்ணில் இராணுவ கட்டுப்பாடுகளும் கெடுபிடிகளும் நிலவி வந்த காலத்தில் கூட அகிம்சை வழிக்கு கட்டியம் கூறுவது போல இந்த நினைவுத்தூபி சேதமின்றி நிலைத்து நிமிர்ந்து நின்றது. ஆனால் இராணுவ நடவடிக்கைகள் கணிசமாக குறைந்துவிட்ட இப்பொழுது இந்த நினைவுத் தூபியை இடித்து அழித்தது மிக மோசமான விஷமச் செயலாகும்.

இந்த நடவடிக்கைகளுக்கு எமது தீவிர கண்டனத்தை தெரிவித்துக் கொள்ளுகின்றோம்.

இரண்டாவதாக எமது இருப்பிடத்துக்கு அருகாமையில் ஐக்கிய மக்கள் கூட்டமைப்பு வேட்பாளர் அங்கஜன் இராமநாதனின் கட்டவுட் முழுமையாக சேதப்படுத்தப்பட்டமை சம்பந்தமானது. இதைச் செய்தது யாராக இருந்தாலும் இது படுமோசமான உள்நோக்கம் கொண்ட குரோத செயலாகவே பார்க்க முடிகிறது.

யாழ்ப்பாண தேர்தல் களம் வரலாற்று ரீதியாக ஒரு சில விதிவிலக்குகள் தவிர அமைதியானதும் அரசியல் நாகரீகம் கொண்டதாகவே இருந்து வந்துள்ளது.

நாகரீகமான அரசியல் செயற்பாடுகளை பின்பற்றுபவன் என்ற முறையில் இந்தச் செயலை கடுமையாக கண்டிப்பதுடன் இவ்வாறான செயல்களில் ஈடுபடாமலிருக்கும்படி அனைவரையும் வேண்டிக்கொள்ளுகின்றேன்

அரசியல் கருத்து வேறுபாடுகள் கருத்து மோதலின் மூலம் தீர்க்கப்படலாமே தவிர கட்அவுட்டுகளை கிழிப்பதினாலேயோ சுவரொட்டிகளை கிழிப்பதனாலேயோ சாதிக்க முடியாது என்பதைத் தெரிவித்துக் கொள்ளுகின்றேன் என்று தெரிவித்துள்ளார். (ஓ)

## மஹோற்சவ கால விசேட அபிஷேக ஆராதனைகள்

(யாழ்ப்பாணம்)

மானிப்பாய் மருதடி விநாயகர் ஆலயத்தின் மஹோற்சவ காலமான எதிர்வரும் 29 ஆம் திகதி முதல் ஏப்ரல் மாதம் 15 ஆம் திகதி வரை விசேட அபிஷேக ஆராதனைகள் நடைபெறவுள்ளது.

இவ் உற்சவ காலத்தில் காலை 6.30 மணிக்கு காலைப் பூசையும், 11 மணிக்கு அபிஷேகமும்; நண்பகல் 12 மணிக்கு மதியப் பூசையும் நடைபெறவுள்ளதுடன் மாலை 5.30 மணி பூஜையைத் தொடர்ந்து தினமும் கொக்குவில் பிரம்மஸ்ரீ சிவ. வை நித்தியானந்தசர்மா வழங்கும் “விநாயகபுராணம்” என்னும் விடயம் பற்றிய தெய்வீக தொடர் இசைப் பேருரையும் நடைபெறவுள்ளது. (ஓ-09)

## இராசி பலன்

26-03-2010
(பங்குனி 12 , வெள்ளிக்கிழமை)
ஏகாதசி மாலை 5.36 மணிவரை
ஆயிலியம் பின்னிரவு 4.01 மணிவரை
இராகுகாலம் 10.45-12.15 மணிவரை
சுபநேரம் 6.15-7.45 மணிவரை
யோகர் சுவாமிகள் குருபூசை.
ஏகாதசி விரதம்.

| | |
|---|---|
| மேடம் | மனச்சஞ்சலம், ரோகநிலை, நண்பர்கள் சந்திப்பு, சுபகாரியச் செலவு. |
| இடபம் | சகோதரர் வழி நன்மை, எடுத்த காரியம் கைகூடும், தெய்வ தரிசனம், கீர்த்தி. |
| மிதுனம் | கடினவார்த்தை, பணவிரயம், தெய்வசிந்தை, முயற்சி தாமதம். |
| கடகம் | தெய்வ சிந்தை, அதிக பிரயாசை, உறவினர் வருகை, போசன சுகம். |
| சிங்கம் | காரிய தாமதம், தெய்வ தரிசனம், சுபசெலவு, இடமாற்றம். |
| கன்னி | எடுத்த காரியம் கைகூடும், பொருள் சேர்க்கை, தெய்வ தரிசனம், போசன சுகம். |
| துலாம் | நல்ல செய்தி, அதிகாரம், எடுத்த காரியம் கைகூடும், போசன சுகம். |
| விருச்சிகம் | கட்டுப்பாடு, பிரயாண நன்மை, பித்த ரோகம், முயற்சி தாமதம். |
| தனுசு | வீண்பகை, காரிய தடங்கல், போசன சுகம், ஆரோக்கிய குறைவு. |
| மகரம் | காரிய அனுகூலம், தொழில் நன்மை, தெய்வ தரிசனம், நல்ல செய்தி. |
| கும்பம் | சுவாரஸ்யம், தொழில் முன்னேற்றம், தேகநலன், முயற்சி கைகூடும். |
| மீனம் | ரோக நிலை, குடும்பக் கவலை, பணவிரயம், முயற்சி தாமதம். |

வளவன்

## பொதியிடல் முறைகள் தொடர்பான பயிற்சிப் பட்டறை

(யாழ்ப்பாணம்)

விஞ்ஞான தொழில்நுட்பவியல் அமைச்சின் ஏற்பாட்டில் மாவட்ட மட்டத்தில் நடாத்தப்படும் சிறந்த பொதியிடல் முறைசார் பற்றிய பயிற்சிப் பட்டறை ஒன்று இன்று வெள்ளிக்கிழமை மு.ப 9 மணி தொடக்கம் மாலை 4 மணிவரை நல்லூர் விதாதா வளநிலையத்தில் நடைபெறவுள்ளது.

நல்லூர் பிரதேச செயலக விஞ்ஞான தொழில்நுட்ப உத்தியோகத்தர்கள் எம். தபேந்திரன் தலைமையில் இடம்பெறும் இப் பயிற்சிப் பட்டறையின் போது யாழ். மாவட்ட உற்பத்தியாளர்களுக்கு பொதியிடல் முறைபற்றிய விளக்கத்தை இலங்கை பொதியிடல் நிறுவன திணைக்களத்தைச் சேர்ந்த உதவி பணிப்பாளர் இந்திரகீர்த்தி வழங்கவுள்ளார்.

இந்நிகழ்விற்கு நல்லூர் உதவிப் பிரதேச செயலர் அ. சோதிநாதன் பிரதம விருந்தினராகவும் நல்லூர் பிரதேச செயலக உதவித் திட்டமிடல் பணிப்பாளர் இ – சுரேந்திரநாதன், வட மாகாண விஞ்ஞான தொழில்நுட்ப உத்தியோகத்தர் யு. எல். அப்துல் மஜீட் ஆகியோர் சிறப்பு விருந்தினர்களாகவும் கலந்து கொள்ளவுள்ளனர். (2-30)

## குடாநாட்டு சந்தைகளில் நேற்றைய விலை விபரம்

| மரக்கறி வகைகள் 1 Kg | திருநெல்வேலி ரூபா | யாழ்ப்பாணம் ரூபா | சாவகச்சேரி ரூபா |
|---|---|---|---|
| கத்தரிக்காய் | 70 | 80 | 70 |
| உருளைக்கிழங்கு | 50 | 60 | 60 |
| பச்சைமிளகாய் | 80 | 90 | 90 |
| தக்காளி | 40 | 50 | 40 |
| மரவள்ளிக்கிழங்கு | 25 | 35 | 40 |
| கோவா | 40 | 50 | 50 |
| கரட் | 100 | 110 | 80 |
| பூசணி | 30 | 40 | 40 |
| புடோல் | 50 | 60 | 50 |
| வாழைக்காய் | 30 | 40 | 50 |
| சின்ன வெங்காயம் | 40 | 50 | 40-50 |
| பெரிய வெங்காயம் | 60 | 70 | 60 |
| பாகற்காய் | 80 | 90 | 90 |
| வெண்டிக்காய் | 60 | 70 | 60 |
| கரணைக் கிழங்கு | 30 | 40 | 50 |
| பயிற்றங்காய் | 80 | 90 | 90 |
| லீக்ஸ் | 100 | 110 | 90 |
| பீற்றூட் | 50 | 60 | 70 |
| கறிமிளகாய் | 100 | 110 | 100 |
| முருங்கைக்காய் | 200 | 220 | 200 |
| போஞ்சி | 80 | 90 | 80 |
| கத்தரிதம்புள்ள | 60 | 70 | 60 |
| கீரை – 1 பிடி | 30 | 30 | 25 |
| தேசிக்காய் | 100 | 120 | 100 |
| தேங்காய் (ஒன்று) | 35 | 35 | 30 |

# ஊடக சுதந்திரத்தை ஒழிக்க முடியாது

## ரணில் தெரிவிப்பு



ஊடக சுதந்திரத்தைப் பாதுகாக்கும் அரசாங்கமொன்றை உருவாக்குவதாக ஐக்கிய தேசியக் கட்சியின் தலைவர் ரணில் விக்கிரமசிங்க தெரிவித்துள்ளார். கொழும்பில் நேற்று முன்தினம் நடைபெற்ற கூட்டமொன்றில் கலந்து கொண்டு பேசும் போது அவர் இவ்வாறு தெரிவித் துள்ளார்.

இது தொடர்பில் மேலும் தெரிவிக்கும் போது,

இந்த நாட்டின் அரச ஊழியர்களின் கௌரவத்தைப் பாதுகாப்பதற்கு சுயாதீன அரச ஆணைக்குழு, சுயாதீன பொலிஸ் ஆணைக்குழு, சுயாதீன தேர்தல் ஆணைக்குழு, ஆகியவற்றை இயங்கச் செய்வதற்கு நடவடிக்கை எடுக்கவுள்ளதாகவும் அரச ஊழியர்கள் அரசியலுக்குத் தலை சாய்க்காமல் தொழில் புரியக்கூடிய சூழலைத் தங்களால் உருவாக்க முடியுமெனவும் ஊடக சுதந்திரத்தை ஒழிக்க முடியாதெனவும் இதற்கமைய ஊடக சுதந்திரத்தைப் பாதுகாக்கக்கூடிய அரசாங்கத்தையே ஏப்ரல் மாதம் 8 ஆம் திகதி தாங்கள் உருவாக்கப் போவதாகவும் ரணில் விக்கிரமசிங்க அங்கு மேலும் தெரிவித்தார். (ஓ-6)






# நாட்டின் அபிவிருத்தி திட்டங்களுக்கு வெளிநாட்டு உதவிகள் அதிகரிப்பு

## அமைச்சர் ஜீ.எல்.பீரிஸ்

(கொழும்பு)

அரசாங்கம் முன்னெடுத்துச் செல்லும் செயற் திட்டங்களை வெளிநாடுகள் வரவேற்பதுடன் நாட்டின் அபிவிருத்தித் திட்டங்களுக்கு மேலதிகமாக உதவி வழங்கவும் வெளிநாடுகளும், சர்வதேச அமைப்புகளும் முன்வந்துள்ளதாக அமைச்சர் பேராசிரியர் ஜீ.எல்.பீரிஸ் தெரிவித்தார்.

தகவல் திணைக்களத்தில் நேற்றுக் காலை நடைபெற்ற அமைச்சரவை முடிவுகளை அறிவிக்கும் வாராந்த ஊடகவியலாளர் சந்திப்பின் போதே அமைச்சர் இவ்வாறு குறிப்பிட்டார்.

இது தொடர்பில் மேலும் தெரிவித்துள்ளதாவது,

முன்னர் செய்யப்பட்ட உடன்படிக்கைகளுக்குப் புறம்பாகவே அந்த நாடுகள் இவ்வாறு பாரிய அளவில் நிதியுதவி செய்ய முன்வந்துள்ளன. இவ்வாறு கிடைக்கப் பெறும் நிதியுதவிகள் மூலம் அடிப்படை வசதிகளை அபிவிருத்தி செய்யும் திட்டங்களை அரசாங்கம் மேற்கொண்டு வருகின்றது.

கடந்த வருடம் சீன அரசாங்கம் 294 மில்லியன் அமெரிக்க டொலரை வழங்கியுள்ளதுடன் ஜப்பான் 311 மில்லியன் டொலரை வழங்கியுள்ளது.

ஆசிய அபிவிருத்தி வங்கி 283 மில்லியன் டொலரையும் உலக வங்கி 202 மில்லியன் டொலரையும் மேலதிகமாக வழங்கியுள்ளன.

இதேவேளை சீனாவும் இந்தியாவும் அண்மையில் மேலும் பல திட்டங்களுக்கு உதவ முன்வந்துள்ளன.

மத்தல சர்வதேச விமான நிலைய அபிவிருத்திப் பணிகளுக்கு சீனா 194 மில்லியன் அமெரிக்க டொலரை வழங்க முன்வந்துள்ளதுடன் கொழும்பு மாத்தறை ரயில் பாதை அபிவிருத்தித் திட்டத்துக்கு இந்தியா 147 மில்லியன் டொலரை உதவியாக வழங்க முன்வந்துள்ளது.

அவற்றுக்கான உடன்படிக்கைகளில் நிதியமைச்சின் செயலாளர் கலாநிதி பீ.பி.ஜயசுந்தர இலங்கை சார்பாக கைச்சாத் திட்டதாக அமைச்சர் மேலும் தெரிவித்தார். (2-6)

# போட்டி முடிவுகள்

(சாவகச்சேரி)

தென்மராட்சி வலயப்பாடசாலைகளுக்கிடையே நடத்தப்பட்ட மாலைகட்டல் மற்றும் கோலப்போட்டிகளில் வெற்றி பெற்ற மாணவர்களின் விபரங்களை தென்மராட்சி வலயக்கல்விப் பணிப்பாளர் கு.பிறேமகாந்தன் வெளியிட்டுள்ளார்.

இப்போட்டிகளில் முதல் மூன்று இடங்களை பெற்ற மாணவர்களின் பெயர் விபரம் வருமாறு,

**மாலை கட்டுதல் போட்டி**

ச.சிவசுந்தரம்- சரசாலை ஸ்ரீகணேசா வித்தியாலயம், மு.அபிராமி சாவகச்சேரி டிறிபேக் கல்லூரி , இ.யஜந்திரா உசன் இராமநாதன் ம.வித்தி,

**கோலம் போடுதல் போட்டி**

சி. பிந்துஜா மிருசுவில் அ.த.க. பாடசாலை, செ.நிசாந்தினி கச்சாய் அ.த.க.பாடசாலை. இருவர் மூன்றாமிடத்தை பெற்றுள்ளனர். க.டிலகஸ்ஷனா –கொடிகாமம் திருநாவுக்கரசு ம.வித்தி, கு.நிதூஷனா- நாவற்குழி ம. வித்தி. (ஓ-4)


# மாபெரும் பொதுக்கூட்டம்



K.N.டக்ளஸ் தேவானந்தா



கந்தசாமி கமலேந்திரன்



சில்வெஸ்த்திரி அலென்ரின்

காலம்: 27.03.2010 (சனிக்கிழமை)
இடம்: அனலைதீவு சதாசிவம் மகா வித்தியாலய முன்றல்
நேரம்: காலை 11.00 மணி

கந்தசாமி கமலேந்திரன் (தோழர் கமல்) EPDP தீவக அமைப்பாளர்
சில்வெஸ்த்திரி அலென்ரின் (தோழர் உதயன்) அமைப்பாளர் யாழ். மாவட்டம்

அனைத்துப் பொதுமக்களையும் கலந்து கொள்ளுமாறு அன்புடன் அழைக்கின்றோம்.

அனுசரணை
அனலைதீவு பொது அமைப்புக்கள், சங்கங்கள்

EPDP ஊர்காவற்றுறைப் பொறுப்பாளர்
-காந்தன்
EPDP அனலைதீவு பொறுப்பாளர்
-காண்டீபன்

**வீ.ஆனந்தசங்கரி 12.03.2009 அன்று பிரபாகரனுக்கு எழுதப்பட்ட கடிதம்**

# ஆயுதப் போராட்டத்திற்கு முடிவு கட்டிவிட்டு சமாதான வழிக்குத் திரும்புங்கள்



அன்புள்ள பிரபாகரன்,

**எம் மக்களைக் காப்பதற்கான இறுதிச் சந்தர்ப்பம்.**

உமது கட்டுப்பாட்டின் கீழ் நீர் வைத்திருக்கும் 81,000 குடும்பங்களைச் சேர்ந்த மூன்று இலட்சத்து முப்பதாயிரத்திற்கு மேற்பட்ட மக்களின் சாபம் உம்மை நிம்மதியாக வாழவிடாது. உம்மையும் உமது சந்ததியினரையும் தொடர்ந்து கொண்டேயிருக்கும். இன்றும் உம்மை தொடர்ந்து ஆதரிப்பவர்களையும் அவர்களின் சாபம் விட்டுவைக்காது. இப்போதாவது உமது மனதை மாற்றி நீர் தடுத்து வைத்திருப்பவர்களை விடுதலை செய்யும் படி கேட்கின்றேன். அம்மக்கள் பட்டினியால் இறக்க ஆரம்பித்து விட்டனர். அதற்கு முழுப்பொறுப்பையும் நீரே ஏற்க வேண்டும்.

என்னசெய்வது என அறியாது உமது தற்போதைய இருப்பிடம் தெரியாதமையால் இதை ஓர் பகிரங்க கடிதமாகவே எழுதுகின்றேன். இக்கட்டத்திலேனும் நீர் உருவாக்கிவைத்த சிலவற்றையேனும் மாற்றயமைக்க முடியாதாவென கேட்க விரும்புகின்றேன். வழமைபோல் இதற்கும் உம்மிடமிருந்து எதுவித பதிலையும் எதிர்பார்க்கவில்லை. என்றாலும் நீர் இந்த நிலைமைக்கு ஆளாக்கிய மக்களை காப்பதற்கு உறுதியான சில நடவடிக்கைகளை எடுப்பீர் என நான் உண்மையாக நம்புகின்றேன். நல்ல எண்ணத்துடன் என்னால் எழுதப்பட்ட கடிதங்களை, அவற்றில் அனேகமானவை உம்முடைய உமது போராளிகளுடைய நடவடிக்கைகளை கண்டித்திருந்தும் அவற்றை நீர் பாரதூரமாக கருதாதமை துர்பாக்கியமே.

இவ்வாறு செய்வதற்கு எனக்கு எதுவித சுயநல நோக்கமும் இருக்கவில்லை. நான் எவருடைய முகவராகவும் செயற்படவில்லை. நான் என்றும் உமது ஆயுத போராட்டத்தை ஆதரித்தவனுமில்லை. எப்போதும் வன்முறையற்ற போராட்டத்திலேயே நம்பிக்கை கொண்டவனாகவே வாழ்ந்தேன். எவரையும் பகைக்காமல் அகிம்சை வழியில் எமது பிரச்சினையை வெற்றிகரமாக அணுகியிருக்கலாம் என இன்றும் எண்ணுகின்றேன். நான் உம்மை கண்டித்து எழுதி வந்தமைக்கு இரு காரணங்கள் பிரதானமாக இருந்தன. அதில் ஒன்று தொடர்ந்து உமது குற்றங் களை சுட்டிக்காட்டிவந்தால் உம்மை அதன் மூலம் ஜனநாயக வழிக்குத் திருப்பலாம் என எண்ணினேன். எமக்கு எதுவித அந்தஸ்தும் கோராது உமக்கு முழு ஆதரவு தந்ததன் நோக்கமும் அதுவே. மறு காரணம் உமது கட்டுப்பாட்டில் கால் நூற்றாண்டுக்குமேல் நிரந்தர பயத்துடனும், பீதியுடனும் விபரிக்கமுடியாத கஸ்டங்களை அனுபவித்து வந்த மக்களை விடுதலையடையச் செய்யலாம் என கருதினேன். அம்முயற்சியில் உம்மனதை பெருமளவில் நோகடித்து உமது வெறுப்பையும் உமது போராளிகளின் கோபத்தையும் சம்பாதித்திருப்பேன். அது பற்றி நான் கவலைப்படவில்லை. என் முயற்சி சுயநலமற்ற உண்மையானதும் நேர்மையானதுமென நான் முழுக்க நம்பியதால் எனது உயிருக்கு ஏற்படக் கூடிய எந்த ஆபத்தையும் எதிர் நோக்க தயாராயிருந்தேன்.

எனது உண்மையான அக்கறை தமிழ் மக்களின் நன்மை தழுவியதையே பிரதிபலித்துக் காட்டியது என்பதை நீரும் பாராட்டுவீர் என திடமாக நம்புகின்றேன். இந்த நிலைப்பாட்டை எடுத்தமையால் உமக்கு ஆதரவை உலகம் முழுவதிலும் செயற்படும் அச்சு , மின் ஊடகங்கள் மூலமாக ஏற் படுத்திய அபகீர்த்தியும் மன உளைச்சலும் ஒரு மனிதனின் பொறுமையின் எல்லையை தாண்டியவையாகும். அவை மிகவும் கீழ்த்தரமானவை என்றாலும் அவற்றைத் தாங்கிக்கொண்டேன்.

அரசியல் பிரமுகர்களாகிய இந்திய முன்னாள் பிரதமர் ராஜீவ்காந்தி, ஜனாதிபதி ஆர்.பிறேமதாஸா ,ஜனாதிபதி வேட்பாளர் காமினி திஸாநாயக்க அவருடன் பல அமைச்சர்கள், பாராளுமன்ற உறுப்பினர்கள் ஆகியோரின் படுகொலைகள் ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்க கொலை முயற்சிகள் ஆகியவற்றில் நீர் சம்பந்தப்பட்ட கால கட்டத்திற்கு உமது சிந்தனையை பின்னோக்கி விட்டுப்பாரும். இச் செயல்களால் நீர் அடைந்தலாபம் தான் என்ன? தமிழ் நாடு உட்பட முழு இந்தியாவினதும், சிங்கள மக்களினதும் கடும் வெறுப்பை சம்பாதித்தீர்.

தமிழர் விடுதலைக்கூட்டணி செயலாளர் நாயகம் திரு அ.அமிர்தலிங்கம், யாழ். மாவட்ட சபைத் தலைவர் திரு எஸ். நடராசா , யாழ். மேஜர் திரு பொ.சிவபாலன் , அரசியல் சட்டவல்லுநர் கலாநிதி நீலன் திருச்செல்வம் , யாழ். நகர மேஜர் சறோஜினி யோகேஸ்வரன் இன்னும் பல அரச அதிகாரிகள் கல்வி மான்கள் ,தலைமை ஆசிரியர்கள், ஆசிரியர்கள், பாராளுமன்ற உறுப்பினர்கள் , உள்ளூர் அரசியல் வாதிகள் இது போன்று இன்னும் பல பிரமுகர்கள் உம்மால் படுகொலை செய்யப்பட்டுள்ளனர். உமது கொலைகள் தமிழ்த்தலைமையில் பெரும் இடைவெளியை ஏற்படுத்தியது. உயர்மட்டத் தலைவர்கள் பலர் கொலை செய்யப்பட்டமையால் தமிழர் மத்தியில் காளான்கள் போல பல புதிய தலைவர்கள் உருவானார்கள். எக்குழுவினருடனும் முரண்படாது செயற்பட்ட மிதவாதக் கட்சியான தமிழர் விடுதலைக்கூட்டணியைக் கூட நீர் விட்டு வைக்கவில்லை. சில கூட்டணித் தலைவர் களை கொன்றீர் ஏனையவர் சிலரை பாராளுமன்ற பதவியைக்கொடுத்து விலைக்கே வாங்கி விட்டீர் . எந்தவொரு சிங்களவராலோ அல்லது இஸ்லாமியராலோ என்றும் எதுவித தீங்கும் விளைவிக்கப்படாத இந்த தமிழ் தலைவர்களை, பூரணமாக அற்றுப்போகச் செய்ய அந்த தமிழ்த் தலைவர்கள் உமக்கு என்ன தீங்கு செய்தார்கள்?

இஸ்லாமியரான இந்து சமயத்தில் மிக பாண்டித்தியம் பெற்றிருந்த மன்னார் அரச அதிபராய் இருந்த என் நண்பன் ஜனாப் மக்சூல் அவர்களை நினைத்து இன்னும் அழுகின்றேன். அவரைக் கொன்றதாலேயோ அல்லது ஒரு சிங்களவர் இஸ்லாமியர் எதுவித தீங்கு விளைவிக்க எண்ணாத மற்றத்தலைவர்களை கொன்று என்ன இலாபத்தை அடைந்தீர் படிப்படியாக உமது பெறுமதியினை இழந்ததைத் தவிர தமிழ் மொழியை தாய்மொழியாகக் கொண்ட இஸ்லாமிய சகோதரர்களை பத்தாம் திகதி நபிநாயகம் அவர்களின் பிறந்த தினத்தைக்கூட கொண்டாடவிடாது 15 அப்பாவி மக்களை பலியெடுத்தும் 40ற்கும் மேற்பட்டோரை காயப்படுத்தியும் உள்ளீர் .இப்போதாவது உமது இரத்த வெறி அடங்கியதா ? எப்படியேனும் ஓர் இனக் கலவரத்தை ஏற்படுத்த வேண்டும் என நீர் எடுத்துவரும் முயற்சியில் இதுவும் ஒன்று. உமது பொறிக்குள் இனியும் இந்நாட்டு மக்கள் விளத்தயார் இல்லை என்பதை உணர்ந்து கொள்ளவும். எத்தனை அப்பாவி சிங்களவர்கள், தமிழர்கள், இஸ்லாமியர்களை நீர் இரத்தத்தால் குளிப்பாட்டியுள்ளீர்? பள்ளிவாசல்களில் தொழுகையில் ஈடுபட்டிருந்த அப்பாவி இஸ்லாமிய சகோதரர்களை ஒரு தடவைக்கு மேல் படுகொலை செய்துள்ளீர். பௌத்த மதத்தினருக்கு மிகவும் புனித நகராகிய அனுராதபுரத்தில் வைத்து பௌத்த யாத்திரிகளை படுகொலை செய்தீர். உலகப் பிரசித்திபெற்ற புத்தபெருமானின் புனித தந்தங்களைக்கொண்டுள்ள கோவிலை அழிக்க முற்பட்டீர் .ஓர் பேருந்தில் நிறைந்திருந்த பௌத்த குருமாராக பிரதிக்கினை செய்யப்பட்ட சிறுவர்களை படுகொலை செய்ய உமது உள்ளம் எவ்வாறு இடம்கொடுத்தது.வடபகுதியில் வாழ்ந்த இஸ்லாமிய சகோதரர்களை ஈவிரக்கமின்றி அவர்களின் சகல சொத்துக்களையும் பறி முதல் செய்துவிட்டு வெறும் 500 ரூபாய் கொடுத்து வெளியேற்றினீர். எல்லைக்கிராமங்களில் வாழ்ந்த சிறுபாலகர்களைத் தன்னும் விட்டு வைத்தீரா? பல அப்பாவி சேனை விவசாயிகளை காரணமின்றி சுட்டுத்தள்ளினீர் .

எத்தனை கிளைமோர் பொறி, நிலப் பொறி, கைக்குண்டுத்தாக்குதல்கள் மூலம் பல்லாயிரக்கணக்கான பெருமளவு அப்பாவி சிங்கள மக்களையும் அவர்களுடன் அப்பாவித் தமிழர்களையும் இஸ்லாமியர்களையும் கொன்றுகுவிக்க காரணமாக இருந்திருக்கின்றீர்.

இத்தனை வாழ்விழந்த ஆண்,பெண்கள் எத்தனை அநாதைகள் ஆகியோரை உருவாக்கியுள்ளீர் . எத்தனைபேரைக் கால், கைகள், கண்பார்வையைக் இழக்கச் செய்துள்ளீர் எத்தனை பணக்காரர்களை ஒரே இரவில்... அவர்களுக்கு எதைத்தான் விட்டு வைத்துள்ளீர். அவர்களின் விவசாயமும், கைத்தொழிலும் எங்கே? அவர்கள் வீடுகள், வீட்டுத்தளபாடங்கள், வாகனங்கள் எல்லாம் எங்கே? அவர்களின் கல்வி எங்கே? அத்தனையும் அழிந்துவிட்டன. இதுதான் ஊழ்வினையா? என மக்கள் கேட்கின்றார்கள்.

இவையும் இன்னும் பல விடயங்கள் நடந்துவிட்டன. உமது செயற்பாடுகள் பல தொகுப்புக்களாக எழுதலாம். அவற்றின் சுருக்கத்தின் ஒரு துளியே நான் எழுதியுள்ளவை.

நான் எழுதிய கடிதங்கள் உம்முடம் இருப்பின், அல்லது நான் எழுதியது உமக்கு ஞாபகம் இருப்பின், உமது முன் சிந்தனையற்ற செயற்பாடுகளில் விளைவுகள் புரியும். ஆயுதங்களைக் கைவிட்டு பேச்சு வார்த்தைக்கு போகுமாறு எத்தனை தடவை மன்றாடி கேட்டிருந்தேன். ஏதா வது ஒரு கட்டத்திலே யேனும் எனது புத்தி மதிகளைக்கேட்டு சரியாக செயற்பட்டிருந் தால் எல்லாத் தமிழ் மக்களுக்கும் ஏதாவது மிஞ்சியிருந்திருக்கும் இப்போது கால் நூற்றாண்டுக்கு மேல் ஆயுதப் போராட்டம் நடத்தி பல்லாயிரக்கணக்கான மக்களை பலிகொடுத்து எம் அனைவரையும் ஒட்டாண்டியாக்கியதுதான் மிச்சம். வட பகுதி மக்களில் எத்தனை பேர் தம் உடமைகள் அனைத்தையும் இழந்த நிலையில் இன்று உணவுப் பொட்டலங்களைப் பெற வரிசையில் காத்து நிற்கின்றனர். எனது ஞாபகத்திற்கு எட்டிய வரையில் வன்னிப்பகுதியில் பிச்சைக்காரரை நான் சந்தித்ததேயில்லை.

உமது குழுவைப் பிரதிநிதித்துவப்படுத்துவதாக கூறிக்கொண்டு உமக்கு முறையான புத்திமதி கூறத்தவறியவர்களும் தமிழ் நாட்டில் சில தலைவர்களால் மிகத்தவறாக வழி நடத்தப்பட்ட மக்கள் சிலரையும் தவிர முழு உலகமும் உங்க ளுக்கு மாறாக திரும்பிவிட்டது. மக்களை மிக மோசமாக நடத்துகிறீர் என சர்வதேச சமூகம் உம் மீது குற்றம் சுமத்துகிறது. உமது செயற்பாடு களை ஐக்கிய நாடுகள் சபையும் ஐரோப்பிய ஒன்றியமும் வன்மையாக கண்டித்துள் ளனர். ஐக்கிய நாடுகள் சபையின் மனித உரிமைகளுக்கான உயர்ஸ்தானிகர், மனித உரிமை கண்காணிப்பு அமைப்பு போன்ற பல அமைப்புகள் கூட நீங்கள் அப்பாவி மக்களை பலாத்காரமாக தடுத்து வைத் திருப்பதாகவும் குற்றஞ்சாட்டியுள்ளன. பல் வேறு நாடுகளின் தலைநகர்களில் ஒன்றுகூடிய மக்கள் எம்மக்களை விடுவிக்க வேண்டும் என கேட்டார்களேயன்றி உமக்காக

## உங்களோடு நிற்கும் கழுகுக்கூட்டத்தை நம்பாதீர்கள்

பேசவில்லை. உமக்குஅவர்கள் விடுத்த செய்தி எமது மக்களை விடுவிக்க வேண்டும் என்பதே தமிழ் மக்களை காப்பாற்றும் முழுப்பொறுப்பும் இப்போது உமது கையிலேயே. அவர்களை இந்த நிலைக்கு ஆளாக்கியவர் நீரே. ஆகவே எதுவித தாமதமுமின்றி மக்கள் எங்கே போக விரும்புகிறார்களோ அங்கே போக அனுமதிக்கவும் உம்மை ஆண்டவனின் பெயரால் கேட்கின்றேன். தயவு செய்து சுயநலத்துடன் செயற்படும் உமது இடத்தைப் பிடிக்க ஆவலுடன் காத்திருக் கும் அரசியல் கழுகுகளிடம் மக்களைப் பாரம் கொடுத்து போதிய கஷ்டங்களை அனுபவித்த மக்களின் துன்பமான வாழ்க்கையை மேலும் நீடிக்க விடாது சுதந்திரமாக வாழ விரும்பும் மக்களை அவர்கள் வழியிலேயே விட்டுவிடுங்கள். துப்பாக்கிகளை திரும்பிப்பார்க்கவே அவர்கள் இப்போது விரும்புகிறார்கள் இல்லை. விளையாட்டு துப்பாக்கிகள் உட்பட. இக் கட்டத்திலேனும் துப்பாக்கிகளை கை விட்டு யுத்தத்தை முடிவிற்கு கொண்டு வரவும். சர்வதேச ஆதரவுடன் கண்ணிவெடிகளை அகற்ற அதிக காலம் எடுக்காது. விரைவில் வன்னிப்பகுதி மக்கள் தமது இல்லங்களுக்கு திரும்பி, எஞ்சியுள்ள தமது பொருட்களையும் மீட்டெடுக்க முடியும். இப்போது கூட நீர் எனது புத்தி கேட்கத்தவறின் ஏற்கனவே மக்கள் இழந்தது போக அவர்களின் எஞ்சியுள்ள பல்லாயிரம் கோடி பெறுமதியான சொத்துக்களை அவர்கள் இழப்பதற்கு நீரே பொறுப்பேற்க வேண்டும். அவர்கள் தமது வீடுகளுக்கு திரும்ப நீண்ட காலம் எடுக்குமாயின் அவர்களின் சொத்துக்கள் எதுவும் அவர்களுக்கு இல்லாமல் போய்விடும். இதுவே நான் உமக்கு நம்பிக்கை அத்தனையையும் இழந்த நிலையில் விடுக்கும் இறுதி வேண்டுகோளாகும். மிக தாழ்மையாக விடுக்கும் வேண்டுகோள் நாம் அனைவரும் சிங்களவர்,தமிழர், இஸ்லாமியர்,பறங்கியர்,மலாயர்கள் உடன் ஏனைய இன மக்களும் சமாதானமாகவும் அமைதியாகவும் ஒன்றுபட்ட ஐக்கிய இலங்கைக்குள் சம உரிமையுடன் வாழ வேண்டும் என்பதே. இந்த நாட்டின் அமைதி யைக் குலைத்த நீரே நிரந்தர சமாதானத்தையும் தரக்கூடிய தனி நபராகும்.

நன்றி
அன்புடன்
வீ.ஆனந்தசங்கரி
தலைவர்
தமிழர் விடுதலைக் கூட்டணி

(கு-4825)

தமிழர் விடுதலைக் கூட்டணி

X X

# 2009ல் உறுப்பினர் நிலுவைகளுக்கு அதிகரித்த வட்டியை ஊழியர் சேமலாப நிதியம் வழங்குவதாக அறிவிப்பு

ஊழியர் சேம நிதியம் 2009இல் அதன் உறுப்பினர் நிலுவைகளுக்கு முன்னெப் போதுமில்லாத 13.75 சதவீத வட்டி வீதத்தை அறிவித்திருக்கிறது. இது முன்னைய ஆண்டின் 13.20 சதவீதத்துடன் ஒப்பிடுகையில் 55 அடிப்படைப் புள்ளிகள் கூடியதாகும் என இலங்கை மத்திய வங்கி அறிவித்துள்ளது.

இது தொடர்பில் மத்திய வங்கி வெளியிட்டுள்ள செய்திக் குறிப்பில் தெரிவிக்கப் பட்டுள்ளதாவது,

2009 இறுதியில், உறுப்பினர் கணக்குகளின் மொத்த எண்ணிக்கை 2008இன் 12.5 மில்லியனிலிருந்து 12.7 மில்லியனுக்கு அதிகரித்தது. 2009 இறுதியில், நிதியம் (அதாவது உறுப்பினர்களுக்கான மொத்தப் பொறுப்பு) ரூ.752.2பில்லியனாக விளங்கி 2008 இறுதியிலான ரூ.645 பில்லியனிலிருந்து 16.6 சதவீதம் கொண்ட கணிசமான அதிகரிப்பைப் பதிவு செய்தது. உறுப்பினர்கள் மற்றும் அவர்களது சட்ட ரீதியான வாரிசுகளுக்கான மீளளிப்புக்களின் மொத்தத் தொகை 2009இல் ரூ.31.9. பில்லியனாக விளங்கியதுடன் இது 2008இல் ரூ.25.9 பில்லியனுடன் ஒப்பிடுகையில் 23.2. சத வீத அதிகரிப்பாகும்.

முன்னைய ஆண்டுடன் ஒப்பிடுகையில், செயற்படுத்தப்பட்ட மீளளிப்பு விண்ணப்பங்களின் எண்ணிக்கை 2009இல் 108, 066 விண்ணப்பங்களுக்கு 5.4 சதவீதத்தால் அதிகரித்தது. தேறிய பங்களிப்புக்கள் (நன்மைகளின் மீளளிப்புக்களைக் கழித்த பங்களிப்புக்கள்) 2008இன் ரூ.20.0 பில்லியனுடன் ஒப்பிடுகையில், இவ்வாண்டில் ரூ. 16.3 பில்லியனாக விளங்கியது.

நிதியத்தின் முதலீட்டுக் கொள்கை யானது மீளளிப்புக் கொடுப்பனவுகளுக்கான போதி யளவு திரவத்தன்மையைப் பேணுவதிலும் நிதியத்தின் செலவினத்தை ஈடுசெய்யும் வேளையில் நிதியத்தின் பாதுகாப்பை உறுதிப்படுத்துவதில் உறுப்பினர்களுக்குமான உண்மை இலாபத்தின் நீண்டகால நேர்க்




கணிய இலாப வீதத்தில் தொடர்ந்து கவனஞ் செலுத்துவதாக இருந்தது. 2009 இறுதியில் நிதியத்தின் மொத்த முதலீட்டுச் சொத்துப் பட்டியல் 2008 இறுதியிலான ரூ.627.3. பில்லியனுடன் ஒப்பிடுகையில், ரூ.738.1பில்லியனாக அமைந்து 17.7 சதவீத வளர்ச்சியைப் பதிவு செய்தது.

இத் தொகையில் 97.1. சதவீதம் அரச பிணையங்களிலும் அதேவேளையில் 2.4 சதவீதம் கம்பனித் தொகுதிக்கடன் மற்றும் பங்குகளிலும் முதலிடப்பட்டன. எஞ்சிய 0.5 சதவீதமும் திரவத்தன்மையைப் பேணுவதற்காக அரச பிணையங்கள் மீதான நேர் மாற்று மீள்கொள்வனவுகள் போன்ற கூடிய திரவத் தன்மையுள்ள சொத்துக்களில் முத லிடப்பட்டது.

2009இல் நிதியத்தின் மொத்த வருமானம் 2008இன் ரூ.79.5 பில்லியனிலிருந்து ரூ.109.6 பில்லியனுக்கு 37.9 சதவீதத்தால் அதிகரித்தது. சராசரி சொத்துப் பட்டியல் மீதான இலாப வீதம் 2008இன்13.8 சதவீதத்திலிருந்து 2009இல், 16 சதவீதத்திற்கு அதிகரித்தது.

நிதியத்தின் மொத்த தொழிற்பாட்டுச் செலவினம் 2008இன் ரூ.637 மில்லியனிலிருந்து 2009இல் ரூ.763 மில்லியனுக்குத் 19.8சதவீதத்தால் அதிகரித்தது. இருப்பினும் நிதியம் அதன் மொத்த தொழிற்பாட்டுச் செலவினத்தை 2009இல் அதன் மொத்த வருமானத்தின் 0.7 சதவீதத்தில் பேணக் கூடியதாக இருந்தது. தொழிற்பாட்டுச் செலவினத்தை மொத்த வருமானத்தின் ஒரு சதவீதத்திற்கும் குறைவாகப் பேணுவது கடந்த பல ஆண்டுகளாக நிதியத்தின் முக்கிய பண்பாக இருந்து வந்துள்ளது.

2009 நிதியத்தின் உறுப்பினர்களுக்கு வட் டியாகப் பகிர்ந்தளிப்பதற்கு கிடைக்கத் தக்கதாகவுள்ள தொகை ரூ.90,709 மில்லியனாக விளங்கியது. இதன்படி உறுப்பினர் நிலுவைகளுக்கான வட்டிக் கொடுப்பனவுகள் மொத்த உறுப்பினர் நிலுவைகளின் மீது 13.75 சத வீதமாகக் காணப்பட்டது. 2009 இல் ஆண்டுச் சராசரிப் பணவீக்கம் 3.4 சதவீதத்திற்கு வீழ்ச் சியடைந்தது.

எனவே இது ஊழியர் சேம இலாப நிதிய உறுப்பினர்களுக்கு 10.01 சதவீதம் கொண்ட உண்மைவீத வட்டியை உருவாக்கியது. கடந்த பதினைந்து ஆண்டு காலப்பகுதியில் நிதியம் 1.42 சதவீதம் கொண்ட நேர்க்கணிய உண்மை வீதத்தைச் சம்பாதித்துள்ளது என அதில் குறிப்பிடப்பட்டுள்ளது.

# வடக்கு, கிழக்கு மாகாண மக்களின் வாழ்வாதார விருத்திக்கு NDB உதவி

நாட்டின் வடக்கு, கிழக்கு பகுதிகளில் சென்ற வருடம் நடைபெற்ற யுத்தத்தினால் பாதிககப்பட்ட மக்களுக்கு உதவவென தொழிற்பயிற்சி அதிகார சபையின் அனுசரணையுடன் NDB வங்கி நடவடிக்கைகளை மேற்கொண்டுள்ளதாக வங்கியின் இயக்குநர் சபை அறிவித்துள்ளது. இது தொடர்



பில் NDB வங்கியின் இயக்குநர் சபை விடுத்துள்ள செய்திக்குறிப்பில் தெரிவிக கப்பட்டுள்ளதாவது,

புதிய தொழிலை ஆரம்பிக்கவும் அலலது தொழில் வாய்ப்பைப் பெறவும் தேவையான அறிவையும் அனுபவத்தையும் வழங்கவென தொழிற்பயிற்சி அதிகாரசபை தற்சமயம் தொழிற்பயிற்சி நடவடிக்கைகளை நடத்தி வருகிறது. வடக்கு மற்றும் கிழக்கு மாகாணங்களில் இடம்பெறும் விரிவான மற்றும் பல்நோக்கு கொண்ட பயிற்சிகளில் மேசன் வேலை, தச்சு வேலை, மின் உபகரணங்களில் பயிற்சி, ஆடைத் தயாரிப்பு, தையல் வேலை, ஒட்டு வேலை, அலுமீனியம் தொழில் என்பன அடங்கும்.

இடம்பெயர்ந்த மக்களுக்கான நம்பிக்கை நிதியத்தை NDB வங்கி 2009 ஆம் ஆண்டில் 10 மில்லியன் ரூபா மூலதனத்துடன் ஆரம்பித்தது. மேலும் பெருமளவு நிதியை வர்த்தக வங்கிகள், தனியார் நிறுவனங்கள், உதவி வழங்கும் அமைப்புக்கள் மூலம சேகரிப்பது வங்கியின் நோக்கமாகும். இவற்றுக்கு மேலதிகமாக சர்வதேச நிறுவனங்களிடம் இருந்தும் மக்களிடம் இருந்தும் நிதியுதவியைப் பெற்றுக்கொள்ள வங்கி உத்தேசித்துள்ளது. NDB வங்கியின் இடம பெயர்ந்த மக்களுக்கான நிதியத்தின் மூலம் ஏற்கனவே தொழிற்பயிற்சியைப் பூர்த்தி செய்தவர்களுக்கு உபகரணப் பொதிகளும், இயந்திரசாதனங்களும் வழங்கப்படுகின்றன.

இந்தத் திட்டத்தின் ஆரம்பநடவடிக்கையாக அதிகார சபையினால் நடத்தபபட்ட பயிற்சி நெறிகளைப் பூர்த்தி செய்தவர்களுக்கு வவுனியாவில் தையல் இயந்திரஙகளையும் 250 உபகரணப் பொதிகளையும் வங்கி வழஙகியுள்ளது. NDB வங்கியின் பிரதம நிறைவேற்று அதிகாரி இரான் விக்கிரமரத்ன இந்த நிகழ்ச்சியின் போது உரைநிகழ்த்துகையில்,

இங்கு வாழும் மக்கள் இராணுவ நடவடிக்கை காரணமாகப் பாதிக்கப்படுவதற்கு முன்னர் தங்களது வழமையான வாழ்ககையை நடத்தி வந்தார்கள் என்று கூறினார். சந்தர்ப்பங்களை அவர்கள் இழந்த போதிலும், திறமைகளை அவர்கள் இழக்கவில்லை. அளிக்கப்பட்ட பயிற்சியின் மூலம் தங்களது திறமைகளை வளர்த்துக்கொண்ட அவர்கள் தாங்கள் விரும்பிய தொழிலைச்செய்ய முடியும். இதன் பலனாக, அவர்களது பிரதேசம் அபிவிருத்தியடைவது மாத்திரமல்லா மல், தங்களுக்கும் ஏனையோருக்கும் தொழில் வாய்ப்புக்களையும் அவர்கள் உருவாக்க முடியும் என்றும் அவர் மேலும் கூறினார்.

பயிற்சியைச் சிறந்த முறையில் பூர்த்தி செய்தவர்களுக்கே முதல் கட்டமாக உபகரணப் பொதிகள் வழங்கப்படவிருக்கின்றன. பயிற்சியில் பங்குபற்றிய சகலருக்கும் உபகரணப் பொதிகளை வழங்குவதற்கு பெருமளவு நிதி தேவை. எவ்வாறாயினும், உதவி வழங்குவோரிடம் இருந்து பெருமளவு தொகை பெற்றுக்கொள்ளப்பட்டதும், பயிற்சி நடவடிக்கைகளைப் பூர்த்தி செய்த சகலருக்கும் உபகரணப் பொதிகளை வழங்க முடியும் என அதில் தெரிவிக்கப்பட்டுளளது.

## நாணய மாற்று வீதம் -25.03.2010

| நாணயம் | வாங்கும் விலை (ரூபாய்) | விற்கும் விலை (ரூபாய்) |
|---|---|---|
| ஐக்கிய அமெரிக்க டொலர் | 113.38 | 114.98 |
| ஐக்கிய இராச்சியம் பவுண் | 168.29 | 171.79 |
| யூரோ (யூரோ வலயம்) | 150.35 | 153.97 |
| சுவிற்சர்லாந்து பிராங்க்ஸ் | 104.09 | 108.22 |
| டொலர் (கனடா) | 109.76 | 113.39 |
| டொலர் (அவுஸ்திரேலியா) | 102.45 | 105.54 |
| டொலர் (சிங்கப்பூர்) | 80.25 | 82.17 |
| யென் (ஜப்பான்) | 1.2280 | 1.2607 |


யாழ். வணிகர் கழகத்தின் ஏற்பாட்டில்

மாபெரும் வர்த்தக கண்காட்சி -2010

இடம்:- யாழ். மத்திய கல்லூரி, யாழ். வேம்படி மகளிர் கல்லூரி
காலம்:- 27 , 28 , 29 மார்ச் 2010 (சனி,ஞாயிறு, திங்கள்)
நேரம்:- காலை 9.00 மணி முதல் இரவு 9.00 மணி வரை

அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.

அனுமதி இலவசம்

யாழ்ப்பாண வணிகர் கழகம்.

## வலயமட்ட தமிழ்த் தினப் போட்டி

(யாழ்ப்பாணம்)

யாழ். வலய மட்ட தமிழ்த் தினப் போட்டி எதிர்வரும் ஆறாம் திகதி செவ்வாய்க்கிழமை காலை 8 மணி தொடக்கம் யாழ். மத்திய கல்லூரியில் இடம்பெறவுள்ளது.

இப் போட்டியில் நல்லூர், யாழ்ப்பாணம், கோப்பாய் ஆகிய கோட்ட மட்டங்களில் இடம் பெற்ற தமிழ்த் தினப் போட்டிகளில் 1,2ஆம் இடங்களை பெற்ற மாணவர்களை கலந்து கொள்ளுமாறு யாழ். வலயக் கல்விப் பணிப் பாளர் திருமதி அ. வேதநாயகம் தெரிவித் துள்ளார். (ஓ-7)

## பன்ன வேலைப்பயிற்சி

(யாழ்ப்பாணம்)

யாழ். வலய முறைசாராக் கல்விப் பிரிவில் யாழ். கல்வி வலயத்திற்குட்பட்ட யுவதிக ளுக்கு, பனம்பொருள் அபிவிருத்திச் சபை யின் அனுசரணையுடன் பன்னவேலைப் பயிற்சி வழங்கப்படவுள்ளது.

இப்பயிற்சி எதிர்வரும் 31 ஆம் திகதி புதன்கிழமை யாழ். பண்ணை மீனாட்சி மாதர் கிராம அபிவிருத்தி நிலையத்தில் இடம்பெற வுள்ளதாக யாழ். வலயக் கல்விப் பணிப் பாளர் திருமதி அ. வேதநாயகம் தெரிவித் துள்ளார். (ஓ-7)




## புத்தாடைகள் வழங்கல்

(யாழ்ப்பாணம்)

உரும்பிராய் குரும்பசிட்டி கிராம அபிவி ருத்திச் சங்கத்தின் வன்னியிலிருந்து இடம் பெயர்ந்து வந்தோருக்கான மூன்றாவது கட்டக் கொடுப்பனவு வழங்கலும் புது வரு டத்தை முன்னிட்டுப் புத்தாடைகள் வழங்க லும் நிகழ்வு நாளை மறுதினம் ஞாயிற்றுக் கிழமை காலை 9.30 மணிக்கு வயாவிளான் மத்திய மகாவித்தியாலயத்தில் ஆ.சி. நடராஜா தலைமையில் நடைபெறவுள்ளது.

இந்நிகழ்வில் பிரதம விருந்தினராக யாழ். பல்கலைக்கழக பேராசிரியர் ப. சிவநாதன் கலந்து சிறப்பிப்பதுடன் சிறப்பு விருந்தி னராக வயாவிளான் ம.ம. வித்தியாலய அதிபர் க. கனகராஜா, கௌரவ விருந்தினராக க. தர் மலிங்கம் ஆகியோர் கலந்து கொள்ள வுள்ளனர். (ஓ-4)

## வெப்பநிலை குறைய வாய்ப்புள்ளது

தற்போதைய வெப்பநிலை ஏப்ரல் வரை தொடருமென முன்னர் அறிவிக்கப்பட்ட நிலையில் இன்னும் ஓரிரு தினங்களில் மழை வருவதற்கான சந்தர்ப்பங்கள் காணப்படு வதனால் வெப்பநிலை குறைய வாய்ப்புள்ள தாக திருநெல்வேலி வளி மண்டல ஆய்வுத் திணைக்களம் தெரிவித்துள்ளது. (2)

## இலங்கை வங்கியின் யாழ். 2 ஆம் மேற்தரக் கிளையின் சனிக்கிழமைக்கான வங்கிச்சேவை

(யாழ்ப்பாணம்)

இலங்கை வங்கியின் யாழ்ப்பாணம் 2 ஆம் மேற்தரக் கிளையின் சனிக்கிழமை வங்கிச் சேவை ஆரம்ப நிகழ்வு நாளை சனிக் கிழமை காலை 8.30 மணிக்கு நடைபெற வுள்ளது.

இந்நிகழ்வில் பிரதம விருந்தினராக இலங்கை வங்கியின் வடபிராந்திய பதில் உதவிப் பொதுமுகாமையாளர் வி. எஸ். சிவ நாதன் கலந்துகொண்டு இச்சேவையினை ஆரம்பித்து வைக்கவுள்ளார்.

மேலும் சிறப்பு விருந்தினராக மாவட்ட முகாமையாளர் கே.பி. ஆனந்தநடேசன் கலந்து சிறப்பிக்கவுள்ளார்.

மேலும் வாடிக்கையாளர்கள் தங்கநகை அடகுக்கடன் சேவைக்காகவும் வாடிக்கை யாளர் கொடுக்கல் வாங்கல்களை மேற்கொள் வதற்காகவும் பிரதி சனிக்கிழமை தோறும் காலை 8.30 மணிமுதல் பிற்பகல் 1 மணி வரை வங்கி திறந்திருக்கும் என வங்கியின் 2 ஆம் மேற்தரக்கிளை முகாமையாளர் அறி வித்துள்ளார். (ஓ-4)

## பருத்தித்துறை பிரதேச செயலக பிரிவுக்கான உள்ளூர் அபிவிருத்தித் திட்டம் தொடர்பான பயிற்சிப் பட்டறை

(அல்வாய்)

பருத்தித்துறை பிரதேச செயலக பிரிவுக் கான ஒருங்கிணைந்த உள்ளூர் அபிவிருத் தித் திட்டம் (ILDP) தொடர்பான பயிற்சிப் பட்டறை எதிர்வரும் 30 ஆம் திகதி செவ்வாய்க் கிழமை முற்பகல் 9 மணிமுதல் 4 மணிவரை கரவெட்டி பிரதேச சபை மாநாட்டு மண்டபத் தில் நடைபெறவுள்ளது.

உள்ளூராட்சிக்கான தேசிய கொள்கைப் பிரகடனம் மற்றும் உள்ளூராட்சி மறுசீர மைப்பு அதிகாரசபைகள், பிரதேச செயல கங்கள் ஏனைய துறைசார் நிறுவனங்கள் ஆகியன இணைந்து இப்பிரதேசத்திற்கான மூலவளத்திரட்டு 4 வருட அபிவிருத்தி திட் டத்தினை தயாரித்து அமுல்படுத்துவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டு வருவதாக குறிப் பிடப்படுகிறது.

மேலும் வடமாகாண ஆளுநர் யாழ். மாவட்ட அரசாங்க அதிபர் ஆகியோரது அறிவித் தல்களுக்கமைய ஒருநாள் பயிற்சிப் பட்டறை ஒழுங்கு செய்யப்பட்டுள்ளதாகவும் இதில் பருத்தித்துறை பிரதேச செயலக பிரிவிலுள்ள சகல துறைகளிலும் உள்ளவர்கள் தங்களது ஆலோசனைகளை முன்வைக்குமாறு வட மராட்சி வடக்கு பிரதேச செயலர் இ. வரதீஸ் வரன் அறிவித்துள்ளார். (ஓ-4-19)

## செயலமர்வு பிற்போடப்பட்டது

(யாழ்ப்பாணம்)

நாளை சனிக்கிழமை யாழ் வண்ணை நாவலர் மகா வித்தியாலயத்தில் நடைபெற விருந்த ஆரம்பக்கல்வி உதவி ஆசிரியர்க ளுக்கான செயலமர்வு தவிர்க்க முடியாத காரணத்தால் பின் போடப்பட்டுள்ளதாக தீவக வலயக் கல்விப் பணிப்பாளர் வி. இராதா கிருஷ்ணன் அறிவித்துள்ளார். (ஓ)

## வர்த்தக கண்காட்சி

(யாழ்ப்பாணம்)

யாழ். வணிகர் கழகத்தின் மாபெரும் வர்த்தக கண்காட்சி நாளையும் நாளை மறுதினமும் 29 ஆம் திகதி திங்கட்கிழமையும் காலை 9 மணிமுதல் மாலை 8 மணிவரை யாழ். வேம்படி மகளிர் கல்லூரியிலும் யாழ். மத்திய கல்லூரியிலும் ஆரம்பமாகி நடை பெறவுள்ளது.

இந்நிகழ்வில் பிரதம விருந்தினராக யாழ். மாநகர சபை முதல்வர் யோ. பற்குணராஜா கலந்து சிறப்பிக்கவுள்ளார். (ஓ-4)

## புதிய தேர்முட்டி திறப்புவிழா

(வேலணை)

வேலணை மண்கும்பான் வெள்ளைப் புற்றடி வீரகத்தி விநாயகர் ஆலயத்திற்காக புதிதாக நிர்மாணம் செய்யப்பட்ட தேர்முட்டி நாளை சனிக்கிழமை திறந்து வைக்கப்பட வுள்ளது.

இப்புதிய தேர்முட்டி அமரர் ஐயம்பிள்ளை நடராசா ஞாபகார்த்தமாக அவரது குடும்பத் தினரால் நிர்மாணிக்கப்பட்டுள்ளதாக தெரி விக்கப்படுகின்றது.

இவ்வாலயத்தில் எதிர்வரும் ஏப்ரல் மாதம் நடைபெறவுள்ள வருடாந்த மஹோற்சவத் தில் சித்திரை புத்தாண்டு தினத்தன்று தேர்த் திருவிழா நடைபெறவுள்ளது. (ஓ-22)

## செயலமர்வு

(யாழ்ப்பாணம்)

மாகாணக் கல்வித் திணைக்களத்தினால் நடத்தப்படும் பாடசாலை அபிவிருத்தி நிதி தொடர்பான செயலமர்வு எதிர்வரும் 30 ஆம் திகதி காலை 8.30 மணியளவில் யாழ். இந்து மகளிர் கல்லூரியில் இடம்பெறவுள் ளது.

இச் செயலமர்வில் 1ஏபி1சி, வகை - 2 பாட சாலைகளைச் சேர்ந்த அதிபர், பிரதி அதிபர், தர உள்ளீட்டு பொறுப்பாசிரியர் ஆகியோரை தவறாது கலந்து கொள்ளுமாறு யாழ். வலயக் கல்விப் பணிப்பாளர் திருமதி அ. வேதநாயகம் தெரிவித்துள்ளார். (ஓ-7)

## திருவூஞ்சல் பாமாலை வெளியீடும் சிறப்புச் சொற்பொழிவும்

(யாழ்ப்பாணம்)

காரைநகர் ஊரியபேதி ஸ்ரீ பழனி வேல் முருகப் பெருமான் மீது பாடப்பட்ட திருவூஞ் சல் பாமாலை வெளியீடும் சிறப்புச் சொற் பொழிவும் இன்று வெள்ளிக்கிழமை இரவு 7 மணிக்கு ஆலய மண்டபத்தில் நடைபெற வுள்ளது.

திருவூஞ்சல் வெளியீட்டினையும் "கந்த புராணத்தில் முருக வழிபாடு" எனும் தலைப் பில் சிறப்புச் சொற்பொழிவினையும் மதுர கவி காரை.எம்.பி. அருளானந்தன் நிகழ்த் தவுள்ளார். (ஓ)

## டெங்கு ஒழிப்பு வாரத்தை முன்னிட்ட போட்டிகள்

(யாழ்ப்பாணம்)

எதிர்வரும் 29 ஆம் திகதி முதல் ஏப்ரல் மாதம் 4 ஆம் திகதி வரையிலான டெங்கு ஒழிப்பு வாரத்தை முன்னிட்டு ஆளுநர் அலு வலகத்தால் யாழ். மாவட்ட பாடசாலைகளுக் கிடையிலான டெங்கு ஒழிப்பு சம்பந்தமான சித்திரப் போட்டி மற்றும் கட்டுரைப் போட்டிகள் நடத்தப்படவுள்ளன.

இப்போட்டிகள் தரம் 6-9 வரை ஒரு பிரிவாகவும் தரம் 10-13 வரை மற்றொரு பிரிவாகவும் நடத்தப்படவுள்ளது.

இதற்கான ஆக்கங்களை எதிர்வரும் 3 ஆம் திகதிக்கு முன்னர் மேலதிக மாகாணக் கல்விப் பணிமனைக்கு அனுப்பி வைக்குமாறு கேட்டுக் கொள்ளப்படுகின்றனர்.

அத்துடன் டெங்கு ஒழிப்பு சம்பந்தமான 5-10 நிமிடம் வரையுள்ள நாடகத்தில் பங்கு பற்றும் பாடசாலைகளின் விபரங்களை எதிர் வரும் 4 ஆம் திகதிக்கு முன்னர் அனுப்பி வைக் குமாறு கேட்டுக் கொள்ளப்படுகின்றனர். (ஓ-7)







ஈ சொவ்ற் கணனி நிறுவனத்தில் டிப்ளோமா முடித்த மாணவர்களுக்கான சான்றிதழ் வழங்கும் நிகழ்வு நேற்று நாவலர் கலாசார மண்டபத்தில் நடை பெற்றது. இந்நிகழ்வில் யாழ். பல்கலைக்கழக வணிகத்துறை பீடாதிபதி பேராசிரியர் க. தேவராஜா மங்கல விளக்கேற்றுவதையும் ஈ சொவ்ற் கணனி நிறு வனத்தின் வடகிழக்கு பிராந்திய பணிப்பாளர் பி. ஜெயக்குமார் ஈசொவ்ற் கணனி நிறுவன நிர்வாக இயக்குநர் டயான் ராஜபக்ஷ ஆகியோர் உரையாற்றுவதையும் நிகழ்வில் கலந்து கொண்ட ஒரு தொகுதியினரையும் படங்களில் காணலாம்.

# கருணாநிதிக்குப் பின் யார் தலைவர்?

# தீவிரமடையும் வாரிசுப் போர்



தி.மு.கவில் கட்சித் தலைவர் கருணாநிதிக்குப் பின்னர் யார் தலைவர் என்பது குறித்த சர்ச்சை முற்றுவதாகத் தெரிகிறது.


தமிழ்நாட்டை ஆளும் தி.மு.கவில் மீண்டும் வாரிசுப் போர் தீவிரமடைந்திருப்பது போன்று தோன்றுகிறது.

முதல்வர் கருணாநிதியின் மகனும் மத்திய உள்துறை அமைச்சருமான அழகிரி தமிழக சஞ்சிகை ஒன்றுக்கு அளித்துள்ள பேட்டியில், கருணாநிதிக்குப் பிறகு தான் எவரையும் தலைவராக ஏற்க முடியாது எனக்கூறியிருக்கிறார்.




87 வயதான கருணாநிதி தான் அரசுப் பொறுப்புக்களிலிருந்து ஓய்வு பெற்று தீவிர சமூகப்பணிகளில் இறங்கப்போவதாக அண்மையில் அறிவித்ததிலிருந்து அடுத்த முதல்வர் யார், தி.மு.க தலைவர் யார் என்பது குறித்து ஊகங்கள் இந்திய ஊடகங்களில் எழுப்பட்டு வருகின்றன.

நீண்டகாலமாக அழகிரியின் தம்பி ஸ்டாலின் தான் திமுக வில் தீவிரமாக ஈடுபட்டு வந்திருக்கிறார். கடந்த ஆண்டு மே மாதத்தில் அவர் துணை முதலமைச்சராகவும் ஆனார். எனவே அரசியலிலிருந்து ஓய்வு என்றவுடன் அடுத்த முதல்வர் ஸ்டாலின் என்ற முடி வுக்கு பலரும் வந்தனர்.



### அழகிரி எதிர்ப்பு

ஆனால் கருணாநிதியின் மூத்த மகன் அழகிரி மதுரையில் அளித்த ஒரு பேட்டியில், நான் கலைஞரை ஓய்வு பெறவிடமாட்டேன் என்று கூறியிருந்தார்.

ஆனால் அதன் பிறகும் ஒரு முறை ஓய்வு பெற இருப்பதை உறுதிப்படுத்திய கருணாநிதி அண்மையில் நடந்த ஒரு விழாவில் தான் ஓய்வு பெறுவது தனது சொந்த விஷயம் என்றார். கடைசியாக நடந்த திமுகபொதுக்குழுவிலும் புதிய தலைமை பற்றி தீர்மானம் எதுவும் இயற்றப்படவில்லை.

இந்நிலையிலேயே சஞ்சிகை பேட்டியில், அழகிரி, பெரியார், அண்ணாவுக்குப் பிறகு அப்போதும் இப்போதும் எப்போதும் தலைவர் கலைஞர் மட்டுமே எனக்குத் தலைவர்! தலைவர் கலைஞர் இருக்கும்போது மற்றவர்களைப் பற்றி யோசிக்க வேண்டிய அவசியமே இல்லை. இருந்தாலும் தலைவர் கலைஞருக்குப் பிறகு தி.மு.கவில் யாரையுமே நான் தலைவராக ஏற்றுக்கொள்ள மாட்டேன். கலைஞரின் இடத்தை நிரப்பும் தகுதியும் திறமையும் யாருக்கும் இருப்பதாக நான் நிமைக்கவில்லை எனக் கூறியிருக்கிறார்.

### கருணாநிதி கருத்து

பென்னாகரம் தேர்தல் பிரசாரத்திற்கு புறப்பட்டுக்கொண்டிருந்த முதல்வரிடம் அழகிரியின் பேட்டி குறித்து கேட்டபோது, இது குறித்து அழகிரியிடமே கேட்டுக்கொள்ளுங்கள் என்றார். தொடர்ந்து உங்களுக்கு பிறகு யாருக்கும் திறமை இல்லை என்பதுபோல கூறியிருக்கிறாரே என்று நிருபர்கள் கேட்டபோது அவர் எனக்குப் பிறகு என்பது எந்த ஆண்டு முதல் என்று எனக்கே தெரியாது என்று பதிலளித்தார். (2-6)

## மிளகாய் குண்டு

## இந்திய விஞ்ஞானிகள் கண்டுபிடிப்பு

(புதுடில்லி)

தீவிரவாதிகளுக்கு எதிராக பயன்படுத்த உலகிலேயே மிகவும் காரமான அசாம் மிளகாய் பொடியை பயன்படுத்தி கையெறி குண்டு தயாரிக்கப்பட்டு வருகிறது.

இது தொடர்பில் மேலும் தெரியவருவதாவது,

இந்திய இராணுவத்துக்கு இராணுவ ஆராய்ச்சி மற்றும் மேம்பாட்டு மையம் விதவிதமான நவீன ஆயுதங்களை தயாரித்து கொடுத்து வருகிறது. இந்த வகையில் தீவிரவாதிகளுக்கு எதிராக பயன்படுத்த நூதனமான கையெறி குண்டை தயாரிக்கும் முயற்சியில் இதன் விஞ்ஞானிகள் ஈடுபட்டுள்ளனர்.

உலகில் உள்ள மிளகாய்களிலேயே மிகவும் காரமானது ஜொலோகியா மிளகாய் தான். சீனாவில் உள்ள குடை மிளகாய் (கேப்சிகம்) குடும்ப வகையை சேர்ந்த இதன் பூர்வீகம் அசாம் மாநிலம் தான்.

ஜொலோகியா மிளகாயின் கார அளவு 10 இலட்சத்து ஆயிரத்து 304 யூனிட் என்று அளவிடப்பட்டு இருக்கிறது. உலகில் வேறு எந்த மிளகாயும் இவ்வளவு காரம் கிடையாது.

தீவிரவாதிகள் பதுங்கி இருப்பதாக சந்தேகிக்கப்படும் இடங்களில் இந்த மிளகாய் பொடி கையெறி குண்டை வீசினால் அதன் நெடி மற்றும் காரம் தாங்காமல் தீவிரவாதிகள் வெளியே வந்து விடுவார்கள் அல்லது உள்ளேயே மூச்சு முட்டி மயங்கி விழுந்து விடுவார்கள். மற்ற வகையில் உயிருக்கு எந்த பாதிப்பையும் ஏற்படுத்தாது என்று இந்த ஆராய்ச்சியில் ஈடுபட்டுள்ள விஞ்ஞானிகள் தெரிவித்தனர். (2-6)

## கல்கி பகவான் தொடர்பான காட்சிகளை ஒளிபரப்பத் தடை

(சென்னை)

கல்கி பகவான் தொடர்பான காட்சிகளை ஒளிபரப்ப தனியார் தொலைக்காட்சிகளுக்கு சென்னை உயர் நீதிமன்றம் இடைக்காலத் தடை விதித்துள்ளது.

கல்கி பகவானின் மகன் கிருஷ்ணா தாக்கல் செய்த மனு மீது இந்த உத்தரவு பிறப்பிக்கப்பட்டுள்ளது.

அவர் தாக்கல் செய்த மனு விபரம் கல்கி பகவான் மற்றும் எனது குடும்பத்தினர் தொடர்பாக அவதூறு பரப்பும் வகையில் தனியார் தொலைக்காட்சிகள் காட்சிகளை கடந்த இரு நாட்களாக ஒளிபரப்பி வருகின்றன.

எந்தவித ஆதாரமும் இன்றி ஒளிபரப்பப்படும் இந்தச் செய்திகளில் உண்மையில்லை. அவதூறான ஒளிபரப்பால் நானும் என் குடும்பத்தினரும் பாதிக்கப்பட்டுள்ளோம்.

எனவே கல்கி பகவான் தொடர்பான அவதூறான காட்சிகளை ஒளிபரப்புவதற்குத் தடை விதிக்க வேண்டும் என்று மனுவில் கோரப்பட்டது.

நீதிபதி ஜி.ராஜசூர்யா முன்னிலையில் இந்த மனு புதன்கிழமை விசாரணைக்கு வந்தது. மனுவை விசாரித்த பிறகு நீதிபதி பிறப்பித்த உத்தரவு வருமாறு.

கல்கி பகவான் தொடர்பான செய்திகளை வெளியிடலாம். ஆனால், அவதூறான காட்சிகளை ஒளிபரப்பத் தடை விதிக்கப்படுகிறது. மேலும் இந்தக் காட்சிகள் தொடர்பாக கல்கி பகவான் ஆசிரமம் சார்பில் விளக்கமளிக்க வேண்டும்.

மத்திய மாநில அரசுகளும் இது தொடர்பாக மார்ச் 31 ஆம் திகதிக்குள் பதில் அளிக்க வேண்டும் என்று நீதிபதி உத்தரவில் தெரிவித்துள்ளார். (ஓ-6)

## இந்திய கடல் பகுதியில் மீன்பிடித்த இலங்கை மீனவர்கள் 25பேர் விடுதலை

(இராயபுரம்)

இந்திய கடல் பகுதியில் கடந்த ஜனவரி மாதம் 7 ஆம் திகதி இலங்கை மீனவர்கள் 25 பேர் 5 படகுகளில் மீன்பிடித்துக் கொண்டு இருந்தனர்.

அப்போது அங்கு ரோந்து பணியில் ஈடுபட்டு இருந்த கடலோர காவற் படையினர் இந்திய கடல் பகுதியில் அத்துமீறி நுழைந்த 25 பேரையும் சுற்றி வளைத்தனர்.

பின்பு அவர்களை கைது செய்து புதுவண்ணாரப்பேட்டை மீன்பிடித் துறைமுக பொலிஸாரிடம் ஒப்படைத்தனர். அவர்களின் 5 படகுகளும் பறிமுதல் செய்யப்பட்டன. பொலிஸார் அவர்கள் மீது வழக்குப் பதிவு செய்து ஜோர்ஜ் டவுன் 15 ஆவது நீதிமன்றத்தில் ஆஜர்படுத்தி புழல் சிறையில் அடைத்தனர்.

இந்த நிலையில் தமிழக அரசு நல்லெண்ண அடிப்படையில் 25 இலங்கை மீனவர்களையும் விடுதலை செய்ய உத்தரவிட்டது. அதன்படி அவர்கள் அனைவரும் நேற்று முன்தினம் தங்களுடைய 5 படகுகளுடன் இலங்கைக்கு புறப்பட்டனர். (2-6)

## கொல்கத்தா அடுக்குமாடி தீ விபத்தில் பலியானோர் தொகை 24 ஆக உயர்வு

கொல்கத்தா *ஸ்டீபன் கோர்ட்* கட்டட தீ விபத்தில் பலி 24 ஆக உயர்ந்துள்ளது. 29 பேரை காணவில்லை. இந்நிலையில் அக்கட்டத்தின் கடைசி இரண்டு மாடிகள் சட்ட விரோதமாகக் கட்டப்பட்டவை என்று பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

கடந்த செவ்வாய்க்கிழமை மேற்கு வங்க மாநில தலைநகர் கொல்கத்தாவின் இதயப் பகுதியான பார்க் தெருவில் அமைந்துள்ள 150 ஆண்டுகள் பழமையான ஸ்டீபன் கோர்ட் என்ற கட்டடத்தில் பயங்கர தீ விபத்து ஏற்பட்டது.

அக்கட்டடத்தில் வணிகக் கடைகள், வீடுகள், அலுவலகங்கள் ஆகியவை அமைந்திருந்தன. அதனால் ஐந்து மற்றும் ஆறாம் மாடிகளில் நிகழ்ந்த இந்த தீ விபத்தில் பலர் பலியாகியிருக்கலாம் என்று அஞ்சப்பட்டது.

இந்நிலையில் அன்று இரவு முழுவதும் தீயணைப்பு வீரர்கள், கட்டடத்துக்குள் புகுந்து மீட்புப் பணிகளில் ஈடுபட்டனர். மீட்கப்பட்டவர்களில் 20 பேர் படுகாயம் அடைந்தனர்.

அவர்கள் உடனடியாக மருத்துவமனையில் சிகிச்சைக்காக அனுமதிக்கப்பட்டனர். தீயில் கருகி உயிரிழந்த எட்டுப் பேர்களின் உடல்கள் மீட்கப்பட்டன. அவர்களில் ஆறு பேர் உடல்கள் அடையாளம் கண்டுபிடிக்கப்பட்டுள்ளன. இவர்களோடு சேர்த்து இதுவரை 24 பேர் இந்த கொடூரமான தீ விபத்தில் உயிரிழந்துள்ளனர். இருப்பினும் காணாமல் போன 29 பேரின் நிலைமை என்னவென்று தெரியவில்லை. நேற்று முன்தினம் தொடர்ந்து மீட்புப் பணிகள் நடந்தன. எனினும் உடல்கள் எதுவும் கண்டெடுக்கப்படவில்லை என்று தெரிவிக்கப்படுகிறது. (ஓ-6)

## ஏர் உழுவது முதல் அறுவடை வரை விவசாயத்தில் கலக்கும் ஆந்திர பெண்கள்

(நகரி)



ஆந்திராவில் உள்ள கிராமங்களில் 80 சதவீதம் பெண்கள் விவசாயத்தில் ஈடுபட்டுள் ளனர். விவசாய வேலைகளில் ஈடுபடும் ஆண்களின் எண்ணிக்கை வெகுவாக குறைந்து விட்டது. பெண்கள்தான் ஏர் உழுவது முதல் அறுவடை வரை அத்தனை வேலைகளிலும் கலக்கி வருகிறார்கள்.

அதிலும் நிஜாமாபாத் மாவட்டம் அங்கபூர் கிராமத்தில் 90 சதவீதம் பெண்கள் விவசாயிகளாக உள்ளனர். 10% ஆண்கள் தான் விவசாயத்தில் உள்ளனர்.


இங்குள்ள பெண் விவசாயிகள் பயிர்களுக்கு இயற்கையான உரம் போட்டு நல்ல விளைச்சலை பெறுகிறார்கள். என்ன மாதிரியான பயிர்களை விதைப்பது என்று கூட்டாக ஆலோசனை செய்து முடிபு செய்கிறார்கள். இப்படி திட்டமிட்டு விவசாயம் செய்வதால் நல்ல இலாபம் கிடைக்கிறது.

இதுபற்றி விவசாயி சுலோச்சனா கூறும்போது, எங்கள் ஊரில் முழுக்க முழுக்க பெண்கள் தான் விவசாயம் செய்து வருகிறோம். ஒரு காலத்தில் பெண்களால் நிலத்தில் மாடு பூட்டி உழவு செய்ய முடியாது என்று ஆண்கள் கூறி வந்தனர். ஆனால் தற்போது நாங்கள் மிக எளிதாக உழவு செய்கிறோம். அதில் எந்த கஷ்டமும் கிடையாது.

அந்த காலத்தில் பெண்களை பயம் காட்டியே எந்த விவசாய வேலையும் செய்ய விடாமல் தடுத்துள்ளனர். இப்போது ஆந்திர அரசு பெண்களுக்கு நிறைய உதவி செய்து வருவதால் துணிச்சலாக விவசாயத்தில் ஈடுபட்டு வருகிறோம்.

கைநிறைய சம்பாதிக்கிறோம். இங்கு ஆண்களை நம்பி யாரும் இல்லை. இதனால் கணவர்களால் கொடுமைப்படுத்தப்படும் சம்பவங்கள் குறைந்துள்ளது என்றார். (2-6)

# புலம்பெயர்ந்த தமிழ் மக்களின் வாக்குகள் பிரி.அரசாங்கத்தின் ஒரே இலக்கு-முரளிதரன்



(கொழும்பு)

பொதுத்தேர்தலை அடிப்படையாகக் கொண்டே பிரிட்டி பிரதமரும் வெளிநாட்டமைச்சின் செயலாளரும் லண்டனில் இடம்பெற்ற உலகத்தமிழ் பேரவை மாநாட்டில் கலந்து கொண்டனர் என அமைச்சர் விநாயகமூர்த்தி முரளிதரன் தெரிவித்தார்.

சுமார் நாற்பதாயிரம் புலம்பெயர்ந்த தமிழ் மக்கள் பிரிட்டனில் வாக்குரிமை கொண்டவர்களாக உள்ளனர். இவர்களது வாக்குகளை நோக்காகக் கொண்டே பிரிட்டிஷ் அரசாங்கம் தமிழ் மக்களின் மீது தன்னுடைய அனுதாபத்தை காட்டுகிறது என்றும் அவர் மேலும் குறிப்பிட்டார்.

எதிர் வரும் மே மாதம் பிரிட்டனில் நாடாளுமன்றத்தேர்தல் நடைபெறவுள்ளது. தற்போது கோர்டன் பிரவுன் தலைமையிலான தொழிற்கட்சி ஆட்சி செய்கின்றது. (2-6)

# அரச ஊழியரின் சம்பள அதிகரிப்பை தேர்தலுக்கு முன் நடைமுறைப்படுத்தவேண்டும்

## தொழிற்சங்கங்கள் வலியுறுத்து

(கொழும்பு)

ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ அரச ஊழியர்களின் சம்பளத்தை 2500 ரூபாவினால் அதிகரிப்பதாக ஜனாதிபதி தேர்தலுக்கு முன்னர் உறுதியளித்திருந்தார். அந்த உறுதிமொழி இன்று வரையிலும் நிறைவேற்றப்படவில்லை. எனவே அந்த உறுதி மொழியை பொதுத்தேர்தலுக்கு முன்னராவது நிறைவேற்ற வேண்டும் என்று தொழிற்சங்க சம்மேளனம் வலியுறுத்தியுள்ளது.

இது தொடர்பில் தொழிற்சங்க சம்மேளனம் விடுத்துள்ள ஊடக அறிக்கையில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது,

ஜனாதிபதி வழங்கிய உறுதிமொழியின் பிரகாரம் அதிகரிக்கப்பட்ட 2500 ரூபா சம்பள உயர்வு 2010 ஆம் ஆண்டு ஜனவரி மாதம் முதல் வழங்கப்பட்டிருக்கவேண்டும். எனினும் இதுவரையிலும் வழங்கப்பட வில்லை.

வழங்கப்பட்ட உறுதிமொழி நிறைவேற்றப்படாமல் அடுத்த தேர்தலுக்கான உறுதி மொழிகள் கொடுக்கப்படுகின்றன. இதே வேளை சம்பளத்தை அதிகரிப்பது இலகு வில் செய்யக்கூடிய விடயமல்ல என்றும் இது தொடர்பில் மீண்டும் கலந்துரையாட வேண்டும் எனவும் மத்திய வங்கி ஆளுநர் தெரிவித்துள்ளார்.

ஜனாதிபதியின் உறுதிமொழியும் ஆளுநரின் கூற்றும் முன்னுக்கு பின் முரணானதாக இருக்கின்றன. இன்று வாழ்க்கைச் செலவும் பொருட்கள் சேவைகள் கட்டணமும் அதிகரித்துள்ளன.

புத்தாண்டு கொண்டாடத்திற்கு பெருந் தொகையான பணம் தேவைப்படுகின்றது. எனவே அரசாங்கம் இவ்விடயத்தில் கவனம் செலுத்த வேண்டும் என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (2-6)

# யாழ்.மாவட்டத்தில் கடுமையான வெயிலால் வெப்ப நோய்களின் பரம்பல் அதிகரிப்பு

(கொழும்பு)

யாழ்மாவட்டத்தில் கடந்த காலங்களில் இல்லாத அளவுக்கு வெயில் காணப்படுகின்றது. தற்பொழுது பதிவு செய்யப்பட்ட பதிவுகளின் படி யாழ் குடாநாட்டின் வெப்பநிலை 35 பாகை செல்சியஸ்ஸை தாண்டியுள்ளது. இது மேலும் அதிகரித்து செல்லலாம் என அஞ்சப்படுகிறது.

இதன் காரணமாக வெப்ப காலத்தில் பெருமளவில் பரவும் கூவைக்கட்டு, சின்னமுத்து, கொப்பளிப்பான், காய்ச்சல் தடிமன் உள்ளிட்ட நோய்கள் அதிகரித்துக் காணப்படுகின்றன.

மேலும் சிறுவர் சிறுமியர் ஆகக் கூடிய ளவு நோய்களுக்கு, இலக்காகியுள்ளனர். தற்போது முதலாம் தவணைப்பரீட்சைகள் ஆரம்பமாகி நடைபெற்றுவரும் நிலையில் நோய்த் தாக்கங்களுக்கு உள்ளாகிய மாணவர்கள் பலர் பரீட்சைக்குத் தோற்றுவதாக தெரிவிக்கப்படுகிறது. இந்த காலப்பகுதியில் ஆண்டுதோறும் கடும் வரட்சி நிலவிய போதிலும் இந்த வருடம் வெப்ப நிலை வீச்சின் அளவு அதிகரித்துக் கொண்டு செல்வதால் இயல்பு நிலையில் தாக்குப் பிடிக்கக் கூடிய ஏதுநிலை காணப்படவில்லை எனக் கூறப்படுகின்றது.

இதேவேளை தொடர்ந்தும் வெயில் அதிகரித்து காணப்படும் என்றும் ஏப்ரல் மாதம் 4 ஆம் திகதியிலிருந்து 15 ஆம் திகதி வரையிலான காலப்பகுதியில் சூரியன் இலங்கைக்கு நேரேஉச்சம் கொடுப்பதால் வெயிலின் அளவு மேலும் அதிகரிக்கலாம் என்றும் கூறப்படுகின்றது. (2-6)

# இலங்கை அகதிகளை அவுஸ்திரேலியாவுக்கு அழைத்துச் சென்ற கப்பல் தலைவனுக்கு அபராதம்

## இந்தோனேஷிய நீதிமன்றம் விதித்துள்ளது

(கொழும்பு)

இந்தோனேசியா ஊடாக அவுஸ்திரேலியாவுக்கு இலங்கை அகதிகளை கடத்தி சென்றதாக கூறி அந்தக் கப்பல் தலைவனுக்கு இந்தோனேசிய நீதீமன்றம் நேற்று முன்தினம் அபராதம் விதித்துள்ளது.

கடந்த 2009 ஆம் ஆண்டு ஒக்டோபர் மாதம் இலங்கையர்கள் 254 பேரை இந்தோனேசிய கடற்பிராந்தியம் ஊடாக அவுஸ்திரேலியாவுக்கு அழைத்துச் சென்றார் என்று இவர் மீது குற்றம் சாட்டப்பட்டுள்ளது.

இதற்கமைய கப்பல் தலைவன் ஆப்ரிகாம் லோகபேசி நீதிமன்றில் ஆஜர்செய்யப்பட்ட போது 3000 அவுஸ்திரேலிய டொலர்கள் அபராதமாக விதிக்கப்பட்டதுடன் 18 மாதங்கள் நன்னடத்தை காலமாகவும் குறிப்பிடப்பட்டது.

அபராதத் தொகை செலுத்த தவறின் 5 மாதங்கள் சிறைத்தண்டனைக் காலத்தையும் நன் நடத்தை காலத்துக்குள் தவறு இழைத்தால் ஒரு வருடகால சிறைத்தண்டனை வழங்கப்படும் என்றும் தெரிவிக்கப்பட்டது.

இந்தோனேசிய சட்டத்தின்படி சட்ட விரோதமாக ஆட்களை கடத்துவது குற்றமாக கருதப்படுவதில்லை. இந்த நிலையிலேயே குறிப்பிட்ட நபருக்கு குறைந்தபட்ச தண்டனை வழங்கப்படுகின்றது. இதுவரை காலப்பகுதியில் சுமார் 1500 பேரை அவுஸ்திரேலியாவுக்கு கடந்த 10 ஆண்டுகளாக கடத்தி சென்றுள்ளமை கண்டுபிடிக்கப்பட்டுள்ளது. (9-2)


ஈழத் தமிழர்களுக்கு எதிரான இந்திய-இலங்கை அரசுகளின் கூட்டுச் சதியை எதிர்ப்போம்!



யாழ்ப்பாணத் தேர்தல் மாவட்ட
தமிழ்த் தேசிய விடுதலைக்
கூட்டமைப்பு வேட்பாளர்கள்

ந.சிறீகாந்தா -எம்.கே.சிவாஜிலிங்கம்

(முன்னாள்- பாராளுமன்ற உறுப்பினர்கள்)

2

3



1 2 3 4 5 6 7 8 9 10 11 12

தேசியம்-தாயகம்-சுயநிர்ணய உரிமை

X

- தமிழ் ஈழதேசம், சிங்களதேசம் இணைந்த இலங்கை ஒன்றியம் (Union of Ceylon)என்ற கூட்டு இணைப்பாட்சியின் (Confederation) அடிப்படையிலேயே நிரந்தரத் தீர்வு காணப்பட முடியும்.
- 12,000 தமிழீழ விடுதலைப் புலிகள் உட்பட அனைத்து அரசியல் கைதிகளையும் நிபந்தனை இன்றி விடுதலை செய்.
- பயங்கரவாதத் தடைச்சட்டம், அவசரகாலச்சட்டம் ஆகியவற்றை மீளப்பெறு.
- வன்னிப் போரிலும், கிழக்குப் போரிலும் 50,000 தமிழ்மக்கள் மீதான இனப்படுகொலைக்காக சர்வதேச நீதி விசாரணையைக் கோருவோம்.
- சுமார் ஐந்து இலட்சம் அகதிகளின் மீள்குடியேற்றத்தை ஐ.நா.விடம் ஒப்படை.
- உயர்பாதுகாப்பு வலயங்களை முற்றாக நீக்கு.
- சிங்களக் குடியேற்றங்களை உடனடியாக நிறுத்து.
- வடக்கு - கிழக்கு மாகாணங்கள் இணைந்த இடைக்கால தன்னாட்சி அதிகாரசபையை (Interim Self - Governing Authority - ISGA) நிரந்தரத் தீர்வு கிடைக்கும்வரை நிறுவ நடவடிக்கை எடு.
- தமிழர் தாயகத்தில் இராணுவ ஆட்சியை மீளப்பெறு.
- போரில் கொல்லப்பட்டவர்களுக்கும், உடல் ஊனமுற்றவர்களுக்கும் சொத்து அழிவுகளுக்கும் போதியளவு நஷ்ட ஈட்டை வழங்கு.

(சி-4823)

# நாட்டின் பொருளாதார வளர்ச்சிக்கு நிறுத்தல் அளவீட்டு அறிவு அவசியம்!

## கோப்பாய் பிரதேச செயலர் சீ.ஏ.மோகன்ராஸ் உரை

(கோப்பாய்)

நாட்டு மக்கள் அனைவருக்கும் பொருட்களின் நிறை, அளவு தொடர்பில் சரியான விழிப்புணர்வும் அறிவும் காணப்படுகின்ற போது தான் , நாட்டின் பொருளாதார வளர்ச்சி மிகச் சிறப்பான நிலையை அடைய முடியும்.

இவ்வாறு கோப்பாய் பிரதேச செயலர் சீ.ஏ.மோகன்ராஸ் நிறுத்தல் அளவீட்டு திணைக்களத்தினால் நடாத்தப்பட்ட உயர்தர பிரிவு மாணவர்களுக்கான விழிப்புணர்வு அறிவூட்டல் கருத்தரங்கில் உரையாற்றும் போது தெரிவித்தார்.

அவர் மேலும் பேசுகையில்,

கடந்த காலங்களில் நாட்டில் யுத்த சூழல் காணப்பட்ட வேளையில் பொருட்களுக்கு தட்டுப்பாடு நிலவிய போது கிடைத்ததை வாங்குவதே நமது பழக்கமாக, வழக்கமாக இருந்தது.

இதனால் நாம் பொருட்களின் நிறை, அளவு, தரம் தொடர்பில் அதிக அக்கறை செலுத்துவதில்லை. பொருள் கிடைத்தால் போதுமென்ற நிலையே எம்மிடம் காணப்பட்டது.

இதனை சாதகமாகப் பயன்படுத்திக் கொண்டோர் பொருட்களின் நிறை, அளவு தொடர்பில் முறைகேடுகளையும் குளறுபடிகளையும் கையாண்டனர்.

எனவே இந்நிலைமை தொடர்பில் மாணவர்களாகிய எதிர்கால சமூகத்தினர் நிறுத்தல் அளவை சம்பந்தமாக பூரணமான விழிப்புணர்வு அறிவு பெற்றவர்களாக இருப்பார்களேயானால் ஊழல் மோசடிகளுக்கு வாய்ப்புக்கள் இல்லாமல் போவதுடன் நாட்டின் பொருளாதாரமும் மிகச் சிறப்பாக வளர்ச்சியடைய முடியும்.

எனவே இத்தகைய வளர்ச்சி நிலைக்கும் அளவீட்டு மோசடியினால் ஏற்படும் பொருளாதார பாதிப்பு நிலைக்கும் தீர்வு காண நிறுத்தல் அளவை தொடர்பில் மாணவர்களுக்கு தெளிவாக அறிவு வளர இத்தகைய விழிப்புணர்வு கருத்தரங்கு நல்ல களமாக அமையும். இத்தகைய கருத்தரங்குகள் மேலும் விரிவுபடுத்தப்படும்.

இதன் மூலம் நாட்டின் சமூக, பொருளாதார வளர்ச்சியுடன் விஞ்ஞான தொழில்நுட்ப வளர்ச்சி நிலையும் எய்தப்பட்டு சர்வதேச தரத்துக்குநிறை, அளவு, தரம்பேணப்படும் நிலைமை உருவாகுமென்றும் பிரதேச செயலர் மேலும் தெரிவித்தார். (ஓ-ச)

## நல்லூர் பிரதேச செயலகத்தில் மகளிர் தின விழா

(யாழ்ப்பாணம்)

நல்லூர் பிரதேச செயலகத்தின் மகளிர் தின விழா நாளை சனிக்கிழமை மாலை 2 மணிக்கு யா/கொக்குவில் இந்துக் கல் லூரி சுப்பிரமணிய மண்டபத்தில் நல்லூர் பிரதேச செயலகத்தின் நிர்வாக உத்தியோகத்தர் திருமதி. க. நாகராஜா தலைமையில் நடை பெறவுள்ளது.

இந்நிகழ்வில் பிரதம விருந்தினராக யாழ். மாவட்ட மேலதிக அரசாங்க அதிபர் திருமதி ரூபினி வரதலிங்கம் கலந்து சிறப்பிப்பதுடன் சிறப்பு விருந்தினராக நல்லூர் பிரதேச செயலர் பா.செந்தில்நந்தனன், உதவி பிரதேச செயலர் அ.சோதிநாதன் ஆகியோர் கலந்துகொள்ளவுள்ளனர். (6-4)

# மீளக்குடியமர்ந்த மக்களின் வளமான வாழ்வை அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா உறுதிப்படுத்துவார்

## ஆளுநர் சந்திரசிறி

அமைச்சர் டக்ளஸ் தேவானந்தாவின் அயராத முயற்சியால் கடந்த புதன்கிழமை முதற்கட்டமாக நூற்றிப் பத்துப் பேருக்கு கடற்தொழில் சார்ந்த உபகரணங்கள் வழங்கப்படுவதாகவும் இத்தகைய உதவியை உடனடியாக செய்து தந்திருக்கும் அமைச்சர் டக்ளஸ் தேவானந்தாவுக்கு இப்பகுதி கடற்தொழிலாளர்கள் அனைவரும் நன்றிக் கடமைப்பட்டுள்ளதுடன் அவருக்கு கூடிய பட்ச ஆதரவைத் தெரிவிக்க முன்வர வேண்டும் என்று வடமாகாண ஆளுநர் மேஜர் ஜெனரல் ஜி.ஏ. சந்திரசிறி கேட்டுக்கொண்டார்.

இடம்பெயர்ந்த நிலையில் தற்போது மீள் குடியமர்த்தப்படுகின்ற மக்களின் வாழ்க்கை நிலையை உறுதிப்படுத்தும் நோக்கில் அவர்களுக்கான தொழில்சார் உபகரணங்களை வழங்கி வரும் அமைச்சரின் நடவடிக்கையின் ஒரு கட்டமாக கிளிநொச்சி மாவட்டத்தின் பூநகரி பிரதேச கடற்தொழிலா ளர்களுக்கான முதற்கட்ட தொழில்சார் உபகரணங்களை வழங்கும் வைபவம் கடந்த புதன்கிழமை பூநகரி கடற்தொழிலாளர் கூட்டுறவுச் சங்க வளாகத்தில் நடைபெற்ற போதே ஆளுநர் மேற்கண்டவாறு தெரிவித்தா்ா.

மேலும் இங்கு கருத்து தெரிவித்த ஆளுநர் ஜனாதிபதியின் வழிகாட்டலின் கீழ் அமைச்சர் டக்ளஸ் தேவானந்தாவின் பெரும் பங்களிப்புடனும் தலைமையிலும் இந்த உபகரணங்கள் இங்குள்ள கடற்தொழிலாளர்களது இருப்பிடங்களுக்கே கொண்டு வந்து தரப்படுவதாகவும் இடம்பெயர்ந்த நிலையில் மீளக் குடியமர்ந்துள்ள மக்க ளின் எதிர்கால வளமான வாழ்க்கையையும் பாதுகாப்பையும் அமைச்சர் பொறுப்புடன் உறுதிப்படுத்துவார் என்ற நம்பிக்கை தமக்கிருப்பதாகவும் தெரிவித்தார்.

இன்று வழங்கப்படுகின்ற உபகரணங்கள் யாவும் முதற்கட்டமாக வழங்கப்படுவதாகவும் கூடிய விரைவில் இன்றும் பல உதவிகள் மீளக்குடியமர்ந்துள்ள அனைத்து மக்களுக்கும் கிடைக்கும் என்றும் இதற்கான நடவடிக்கைகளை அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா பல்வேறு அமைச்சர்களுடன் தொடர்பு கொண்டு மேற்கொண்டு வருகின்றார். என்றும் ஆளுநர் மேலும் தெரிவித்தார். (ஓ)




# நாட்டின் சகல துறைகளும் பின்னடைவை சந்தித்துள்ளன

## ஐ.தே.க.குற்றச்சாட்டு

(கொழும்பு)

சுகாதாரம் மற்றும் கல்வி உட்பட நாட்டின் சகல துறைகளும் மிகவும் மோசமான நிலையில் பின்னடைவை சந்தித்துள்ளன. ஊடகங்களும் ஊடகவியலாளர்களும் வெளிப்படையாக தாக்கப்படுகின்றனர். வாழ்க்கைச் செலவு அதிகரித்துள்ளமையல் குழந்தைகளுக்கு உணவளிக்க முடியாமல் பெற்றோர் கண்ணீர் விடுகின்றனர்.

இவ்வாறு நாடும் நாட்டு மக்களும் அல்லோலப்படும் போது பொறுப்புக் கூற வேண்டிய ஜனாதிபதி மிகவும் அமைதியாக கையைக் கட்டி வேடிக்கை பார்த்துக்கொண்டிருக்கின்றார் என ஐக்கிய தேசியக் கட்சி குற்றம் சுமத்தியது.

அரச வைத்தியசாலைகளில் மருந்து சீட்டுக்கள் மட்டுமே வழங்கப்படுகின்றன. மருந்துகள் நோயாளிகளுக்கு வழங்கப்படுவதில்லை. வெறும் வார்த்தைகளாய் காணப்படும் இலங்கையின் வளமான எதிர்காலத்திற்கு ஐக்கிய தேசியக் கட்சியினால் மாத்திரமே உயிரூட்ட முடியுமெனவும் அக்கட்சி தெரிவித்துள்ளது.

ஐக்கிய தேசியக் கட்சியின் விஷேட செய்தியாளர் மாநாடு நேற்று முன்தினம் புதன்கிழமை எதிர்க்கட்சித் தலைவர் அலுவலகத்தில் நடைபெற்றபோதே மேற்கண்டவாறு தெரிவிக்கப்பட்டது.

இங்கு உரையாற்றிய ஐக்கிய தேசிய முன்னணியின் நுவரெலியா மாவட்ட வேட்பாளரும் முன்னாள் எம்.பி.யுமான ரேனுகா ஹேரத் மேலும் கூறுகையில்

சமூகத்தினதும் நாட்டின் பொருளாதாரத்தினதும் முதுகெலும்பாக விளங்குவது பெண்களே ஆனால் தற்போதைய அரசாங்கத்தின் ஆட்சியின் கீழ் பல வழிகளிலும் வஞ்சிக்கப்படுகின்றார்கள்.

35 வீதத்தை வீதி அபிவிருத்திப் பணிகளுக்காக நிதி ஒதுக்கும் போது சுகாதாரத்திற்கான செலவில் 32 வீதத்தை குறைக்கின்றனர். அதே போன்றே கல்விக்கான நிதி ஒதுக்கீட்டில் 26 வீதத்தை குறைத்துள்ளனர். இவ்வாறு மக்கள் பொது சேவைகளுக்கான நிதி ஒதுக்கீடுகளை குறைக்கும் போது இலங்கையில் எவ்வாறு கல்வியும் சுகாதாரமும் சிறந்து விளங்கப் போகின்றது.

டெங்கு காய்ச்சலினால் கடந்த மூன்று மாதத்தில் 57 பேர் உயிரிழந்துள்ளனர். எலிக் காய்ச்சலினால் 8 பேரும் பன்றிக்காய்ச்சலினால் 44 பேரும் உயிரிழந்துள்ளனர். சுகாதார அமைச்சர் தனது கையை வளப்படுத்திக் கொள்கின்றாரே தவிர தனது துறை தொடர்பாக கவனம் செலுத்தவில்லை.


நாட்டை அபிவிருத்தி செய்யப்போவதாக கடந்த 14 வருடங்களாக கூறும் ஜனாதிபதியின் அரசாங்கத்தினால் இன்றும் பொது மக்களின் வாழ்க்கை செலவை குறைக்க முடியாமல் போயுள்ளது. 50 தொடக்கம் 60 வீதத்தால் அத்தியாவசியப் பொருட்களின் விலை அதிகரித்துள்ளது. செலவிற்கு ஏற்ற வருமானம் பொது மக்களுக்கு இல்லை.

ஊழல் மோசடிகளை இல்லாதொழித்து அநாவசியமான வரிச் சுமைகளை குறைத்தாலே பொது மக்களுக்கு போதுமான நிவாரணங்களை வழங்க முடியும்.ஆனால் தற்போதைய அரசாங்கம் இதனை ஒரு போதும் செய்யாது என்றார். (2-6)











பாடசாலைகளின் நூலகங்களுக்கான புத்தகங்கள் வழங்கும் நிகழ்வு அண்மையில் ஆளுநரின் யாழ். அலுவலகத்தில் நடைபெற்றது. இந் நிகழ்வில் வடமாகாண ஆளுநர் ஜி.ஏ. சந்திரசிறிக்கு வலிகாம வலயக்கல்விப் பணிப்பாளர் ப. விக்னேஸ்வரன் மாலை அணிவிப்பதையும் ஆளுநர் உரையாற்றுவதையும் பாடசாலை அதிபர்களுக்கு ஆளுநர் புத்தகங்களை கையளிப்பதையும் நிகழ்வில் கலந்து கொண்டவர்களையும் படங்களில் காணலாம். (படங்கள் என். குமார்)

# அயலவரிடம் அன்பு நெறியை வளர்க்க நாம் எம்மை அர்ப்பணிக்க வேண்டும்

## மன்னார் ஆயர்

இடம்பெயர்ந்து வாழும் மக்கள் மத்தியில் நாம் அன்பியத்தை வளர்க்க எம்மையும் அர்ப்பணிக்க வேண்டும். புனித சின்னப்பரைப் போல் எம்மை நாம் வெறுமையாக்கி செப,தப, தானங்களில் ஈடுபட்டு அயலவர்களை அன்பு செய்யவே இந்த தவக்கால தியானம் எம்மை வழிநடத்துகின்றது என மன்னார் மறை மாவட்ட ஆயர் இராயப்பு ஜோசப் ஆண்டகை தெரிவித்தார்.

மன்னார் மறை மாவட்டத்தைச் சார்ந்த மன்னார், வவுனியா, கத்தோலிக்க ஆசிரியர்களுக்கும் மறைக்கல்வி ஆசிரியர்களுக்கும் கடந்த 19,20,21 ஆகிய மூன்று தினங்கள் மடுவில் தியானங்கள் இடம்பெற்றன.

மன்னார் மறைமாவட்ட மறைக்கல்வி இயக்குநர் அருட்பணி ஜெயபாலன் அடிகளாரின் ஏற்பாட்டில் நடைபெற்ற இத் தவக்கால தியானத்தில் 645 ஆசிரியர்கள் கலந்து கொண்டனர்.

இத் தியான நிகழ்வை தமிழ்நாடு தூத்துக்குடி மறை மாவட்ட தூய ஆவி புதுவாழ்வு இயக்க அருட்பணி ஜெரோசீன் அடிகளார் தலைமையில் ஐந்து பேர் கொண்ட மறை போதகர் குழுவினர் நடத்தினர்.

இந்த கத்தோலிக்க மறை ஆசிரியர்கள் மத்தியில் மன்னார் மறை மாவட்ட ஆயர் உரையாற்றுகையில்,

கடந்த 15,16 வருடங்களாக எமது மக்கள் இடம்பெயர்ந்து வாழும் நிலை இருந்து வருகின்ற இவ்வேளையில் நாம் அவர்கள் மட்டில் அன்பியத்தை உருவாக்க வேண்டியவர்களாக இருக்கின்றோம்.

அதுவும் அயலிலுள்ள குடும்பங்களின் மத்தியில் நாம் ஒரே குடும்பமாக வாழ எமக்கு செப, தப, தானம், அவசியம். அதற்காகவே இந்தத் தியானம் மூலம் எமக்கு ஆன்மீக அடித்தளம் போடப்படுகின்றது.

ஆகவே, இதன் மூலம் எம் மத்தியில் ஓர் உறவை ஏற்படுத்திக் கொள்ள வேண்டும். அதற்கு கிறிஸ்து இயேசுவில் முதிர்ச்சி கொள்ள வேண்டும்.

புனித சின்னப்பர் இந்த உலகில் சகல ஆசாபாசங்களையும் குப்பையென கருதி தன்னை வெறுமையாக்கி இறை இயேசுவை பற்றிக் கொண்டது போல் நாமும் மனமாற்றம் அடைந்தவர்களாக இறை அன்பிலும் பிறர் அன்பிலும்வாழ வேண்டும் என தெரிவித்தார். (2-6)

# கம்பஹா மாவட்ட ஐ.தே.மு. வேட்பாளர் ஜெரோம் விக்னேஸ்வரம் மீது தாக்குதல்

## வாகனமும் சேதம்

ஐக்கிய தேசிய முன்னணியின் கம்பஹா மாவட்ட வேட்பாளர் ஜெரோம் விக்னேஸ்வரம் இனந்தெரியாதோரால் தாக்கப்பட்டுள்ளார். வத்தளை ஹுனுப்பிட்டிய பிரதேசத்தில் பிரசார நடவடிக்கையில் ஈடுபட்டிருந்த சமயத்திலேயே இவர் மீது தாக்குதல் நடத்தப்பட்டுள்ளது.

இத் தாக்குதலில் அவரது வாகனம் கடுமையான சேதத்திற்கு உள்ளாகியிருப்பதாகவும் இது தொடர்பில் பொலிஸில் முறையிடப்பட்டுள்ளதாகவும் ஜனநாயக மக்கள் முன்னணியின் செயலாளரும் கொழும்பு மாவட்ட வேட்பாளருமான குமரகுருபரன் தெரிவித்தார்.

இது தொடர்பில் அவர் மேலும் கூறுகையில்,

ஐக்கிய தேசிய முன்னணியில் இணைந்து தேர்தல் களத்தில் குதித்துள்ள எம்மீது தொடர்ந்தும் அரசு தரப்பு ஆதரவாளர்கள் தாக்குதல்களை நடத்தி சிறுபான்மை மக்களின் வாக்குப் பலத்தை வீழ்ச்சியடைய வைப்பதற்கே முயற்சிக்கப்படுகின்றது.

கடந்த சில நாட்களுக்கு முன்னர் எமது முன்னணியின் தலைவர் மனோகணேசன் மீது கண்டியிலும் நாவலப்பிட்டியிலும் தாக்குதல்கள் நடத்தப்பட்டன.

இதனைத் தொடர்ந்து கம்பஹா மாவட்டத்தில் போட்டியிடுகின்ற ஒரேயொரு தமிழ் வேட்பாளர் மீதும் நேற்று முன்தினம் புதன்கிழமை தாக்குதல் நடத்தப்பட்டுள்ளது. இத்தாக்குதலில் அவர் சிறுகாயங்களுக்கும் உள்ளாகியுள்ளார்.

தேர்தலில் போட்டியிடுவது என்பது ஜனநாயக உரிமையாகும். ஆனாலும் இந்த ஜனநாயக உரிமை சட்டத்திற்கு முரணான வகையில் பறித்தெடுக்கப்படுகின்றது. இதனை முற்றாக நிராகரிப்பதுடன் இதற்குக் கடுமையான கண்டனத்தையும் தெரிவித்துக் கொள்கிறோம். (2-6)

# அரசியல் கூட்டங்களுக்காக பொத்துவில் பாடசாலைகள் மூடப்பட்டதாக குற்றச்சாட்டு

(கொழும்பு)

தேர்தல் பிரசாரக் கூட்டங்களை நடத்தும் நோக்கில் பொத்துவில் பிரதேச பாடசாலைகள் மூடப்பட்டதாக குற்றம் சுமத்தப்பட்டுள்ளது. பொத்துவில் தேர்தல் தொகுதியைச் சேர்ந்த பத்து பாடசாலைகளே இவ்வாறு மூடப்பட்டுள்ளன.

ஐக்கிய மக்கள் சுதந்திரக் கூட்டமைப்பு அமைச்சர் ஒருவரினால் நடத்தப்பட்ட பிரசாரக் கூட்டங்களுக்காவே இந்த பாடசாலைகள் மூடப்பட்டுள்ளதாகவும் ஆசிரியர்களுக்கான கல்விக் கருத்தரங்கு என்ற போர்வையில் இந்த கூட்டங்கள் நடத்தப்பட்டதாகத் தெரிவிக்கப்படுகிறது.

இந்த சட்ட விரோத நடவடிக்கை தொடர்பில் ஜனநாயக தேசிய முன்னணி வேட்பாளர் வசந்த பியதிஸ்ஸ தேர்தல் ஆணையாளருக்கு எழுத்து மூலம் அறிவித்துள்ளார்.

அரசியல் நோக்கங்களுக்காக குறித்த பாடசாலைகள் மூடப்பட்டன என திகாமடு மல்ல மாவட்ட தெரிவத்தாட்சி அதிகாரி பண்டார மாபெ ஒப்புக் கொண்டுள்ளார்.

இதற்கமைய இந்த அரசியல் கூட்டங்களில் கலந்து கொண்ட ஆசிரியர்களுக்கு குறித்த நாளுக்கான சம்பளம் வழங்கப்படக் கூடாது என தெரிவத்தாட்சி அதிகாரி உத்தரவு பிறப்பித்துள்ளார்.

எவ்வாறெனினும் கிழக்கு மாகாண அமைச்சர் தமக்கு எதிரான குற்றச்சாட்டுக்களை நிராகரித்துள்ளதுடன் பாடசாலை அபிவிருத்தி தொடர்பான கூட்டமொன்றில் கலந்து கொண்டதாகவும் அதனை அரசியல் பிரசாரக் கூட்டமாக சிலர் பிரசாரம் செய்து வருவதாகவும் தெரிவித்துள்ளார். (2-6)

# தியானத்தை இன்று பலரும் வியாபாரமாக்கி விட்டனர்

## திருவாடுதுறை ஆதீனம் ஆதங்கம்

(இராமேஸ்வரம்)

தியானத்தை இன்று பலரும் வியாபாரமாக்கிவிட்டனர் என திருவாடுதுறை ஆதீனம் சிவப்பிரகாச தேசிக பரமாச்சாரியார் தெரிவித்தார். இராமேஸ்வரம் வந்த அவர் நிருபர்களிடம் கூறியதாவது,

தாய்ப்பாலுக்குப்பின் பசுவின் பாலைத்தான் மக்கள் குடிக்கின்றனர். கோயிலுக்கு தேவையான திருநீறு உட்பட அனைத்துப் பொருட்களும் பசுவிடம் இருந்தே கிடைக்கிறது. இதனால் நாடு முழுவதும் பசுவதை தடை சட்டம் கொண்டு வரவேண்டும்.

தேவாரம், திருவாசகம் நாள்தோறும் படிப்பதால் துன்பங்கள் விலகும். நன்மைகள், அமைதி ஏற்படும்.

எந்த ஆசிரமமாக இருந்தாலும் பெண்கள் தனித்து போகக்கூடாது. ஆசிரமங்களில் நடைபெறும் பல்வேறு பிரச்சினைகளுக்கு சமுதாயமும் ஒரு காரணம்.



மக்கள் தான் விழிப்புடன் இருக்க வேண்டும். உடல், மனரீதியான பயிற்சிகளை செய்தபின் தான் தியானத்திற்கு செல்ல வேண்டும்.

தியானத்தில் மனோசக்தி வரும். இன்று தியானத்தை பலரும் வியாபாரமாக்கி விட்டனர்.

செம்மொழி மாநாட்டில் சைவ, வைணவ பக்தி இலக்கியங்கள் சேர்க்கப்படவில்லை. பெரியபுராணம், நாலாயிர திவ்ய பிரபந்தம் போன்ற ஆன்மீகம் சார்ந்த தமிழ் நூல்களும் செம்மொழி மாநாட்டில் சேர்க்க வேண்டும் என்றார். (ஓ-6)

## யோகர் சுவாமிகள் குருபூசை

(யாழ்ப்பாணம்)

தெல்லிப்பழை ஸ்ரீ துர்க்காதேவி தேவஸ்தானம் நடத்தும் யோகர் சுவாமிகள் குருபூசைத்தின நிகழ்வு இன்று வெள்ளிக்கிழமை முற்பகல் 10 மணிக்கு நல்லூர் ஸ்ரீ துர்க்காதேவி மணிமண்டபத்தில் தேவஸ்தான தலைவர் ஆறு. திருமுருகன் தலைமையில் நடைபெறவுள்ளது.

இந்நிகழ்வில் யாழ். தொழில்நுட்பக் கல்லூரியின் ஓய்வுபெற்ற அதிபரும் பணிப்பாளருமான மு. ஜெயரத்தினம் சிறப்புச் சொற்பொழிவாற்றவுள்ளதுடன் துர்க்காபுரம் மகளிர் இல்லத்தின் நற்சிந்தனை பாடல்களும் இடம்பெறவுள்ளது. (ஓ-4)

# சமுர்த்திக் கொடுப்பனவுகளை அதிகரிக்க நடவடிக்கை—யாப்பா

(கொழும்பு)

வறிய மக்களுக்காக வழங்கப்படும் சமுர்த்தி கொடுப்பனவினை ஆயிரம் ரூபாய் வரை அதிகரிப்பதற்கு அரசாங்கம் நடவடிக்கை எடுத்துள்ளதுடன் சமுர்த்தி அபிவிருத்தி உத்தியோகத்தர்களுக்கு ஓய்வூதியத்தைப் பெற்றுக் கொடுத்து அவர்களையும் அரச ஊழியர்களின் அந்தஸ்திற்கு கொண்டுவரவுள்ளதாகவும் ஊடக துறை அமைச்சர் லக்ஸ்மன் யாப்பா அபேவர்தன தெரிவித்தார்.

அரசாங்க தகவல் திணைக்கள கேட்போர் கூடத்தில் நேற்று முன்தினம் இடம்பெற்ற செய்தியாளர் மாநாட்டின் போதே அவர் இவ்வாறு குறிப்பிட்டார்.

அங்கு அவர் மேலும் கருத்து தெரிவிக்கையில்,

கடந்த காலங்களில் சமுர்த்தி அபிவிருத்தி உத்தியோகத்தர்கள் பாரிய சேவையாற்றி வந்துள்ளார்கள். இருந்த போதிலும் அவர்களுக்கு வழங்கப்பட்டுள்ள நியமனங்களின் படி அவர்களுக்கு ஓய்வூதியம் கிடைப்பதில்லை. ஆனால் அவர்களுடன் நியமனம் பெற்றுக் கொண்ட விவசாய அதிகாரிகளுக்கு அந்த சகல வசதிகளும் உண்டு.

இதனைக் கருத்திற் கொண்ட ஜனாதிபதி சமுர்த்தி அபிவிருத்தி உத்தியோகத்தர்களும் ஏனைய அரச ஊழியர்கள் பெறுகின்ற வசதி வாய்ப்புக்களை பெற வேண்டுமென தீர்மானித்தார். அதனடிப்படையில் எதிர்வரும் ஏப்ரல் 8 ஆம் திகதிக்கு பிறகு சமர்ப்பிக்கப்படும் வரவு செலவு திட்டத்தில் இவ்விடயங்கள் உள்ளடக்கப்படும்.

எனவே தற்போது சேவையிலிருக்கும் 3700 க்கும் அதிகமான சமுர்த்தி அபிவிருத்தி உத்தியோகத்தர்கள் ஏப்ரல் 8 ஆம் திகதிக்கு பிறகு அரச ஊழியர்களின் அந்தஸ்தை பெறுவதுடன் அவர்களுக்கு கிடைக்கின்ற சகல வசதிகளையும் பெற்றுக் கொள்வார்கள்.



கடந்த காலங்களில் சமுர்த்தி நிவாரணம் பெறக்கூடிய நிலையிலிருந்த பலருக்கும் நிவாரணம் பெற்றுக் கொடுக்க முடியவில்லை. காரணம் நாட்டில் கொடிய யுத்தம் காணப்பட்டது.

ஆனால் தற்போது யுத்தம் முடிபுக்கு கொண்டு வரப்பட்டு நாட்டின் பொருளாதாரம் வளர்ச்சியடைந்து வருவதால் அவ்வாறு சமுர்த்தி நிவாரணம் பெறமுடியாமல் போனவர்கள் தொடர்பில் ஆராய்ந்து அவர்களுக்கும் நிவாரணம் பெற்றுக் கொடுப்பதற்கும் அரசாங்கம் நடவடிக்கை எடுத்து வருகிறது.

அதனடிப்படையில் எதிர்காலத்தில் சமுர்த்தி நிவாரணம் பெறுகின்றவர்களின் தொகை அதிகரிக்கப்படலாம் எனவும் அவர் கூறினார். (2-6)

# 2ஆவது இராணுவ நீதிமன்ற நீதிபதிகள் குழு இன்னமும் நியமிக்கப்படவில்லை

## இராணுவ பேச்சாளர் சமரசிங்க

(கொழும்பு)

ஜெனரல் சரத் பொன்சேகாவுக்கு எதிராக முன்வைக்கப்பட்டுள்ள குற்றச்சாட்டுக்கள் தொடர்பில் விசாரணை நடத்துவதற்கான இரண்டாவது இராணுவ நீதிமன்றத்துக்கான நீதிபதிகள் குழு இதுவரையில் நியமிக்கப்படவில்லை என்று இராணுவ பேச்சாளர் மேஜர் ஜெனரல் பிரசாத் சமரசிங்க தெரிவித்தார்.

குறித்த இராணுவ நீதிமன்றத்துக்கான நீதிபதிகள் குழு இன்னும் சில தினங்களில் நியமிக்கப்படும் என்றும் இராணுவ பேச்சாளர் கூறினார்.

தேசிய பாதுகாப்புக்கான ஊடக மத்திய நிலையத்தில் நேற்று முன்தினம் மாலை இடம் பெற்ற விஷேட செய்தியாளர் மாநாட் டின் போது தகவல் வெளியிடுகையிலேயே இராணுவ பேச்சாளர் மேற்கண்டவாறு கூறினார்.

அங்கு அவர் தொடர்ந்தும் கூறியதாவது,

ஜெனரல் சரத் பொன்சேகாவுக்கு எதிரான குற்றச்சாட்டுக்களை விசாரணை செய்வதற்காக இரண்டு இராணுவ நீதிமன்றங்கள் நிறுவப்பட்டுள்ளதுடன் அதில் முதலாவது நீதிமன்ற விசாரணைகள் எதிர்வரும் 6 ஆம் திகதி வரையில் ஒத்தி வைக்கப்பட்டுள்ளன.

இதேவேளை அவருக்கு எதிரான ஏனைய குற்றச்சாட்டுக்கள் தொடர்பில் விசாரணை நடத்துவதற்காக இரண்டாவது இராணுவ நீதிமன்றம் கூடிய நிலையில் முதலாவது இராணுவ நீதிமன்றத்தில் விசாரணை நடத்திய நீதிபதிகள் குழுவே இரண்டாவது நீதிமன்ற விசாரணைக்கெனவும் நியமிக்கப்பட்டிருந்தது.

இந்த நிலையில் வழக்கு விசாரணைகளில் பாதிப்பு ஏற்படுவதற்கும் இரு இராணுவ நீதிமன்றங்களிலும் தீர்ப்பு வழங்கியவர்கள் ஒரே நீதிபதி குழுவினர் என்பதால் அது பக்கச்சார்பானதாக இருக்கும் என்ற குற்றச்சாட்டுக்கள் முன்வைக்கப்படவும் வாய்ப்பு உள்ளது.

இந்தக் குற்றச்சாட்டிலிருந்து விலகிக் கொள்வதற்காகவே இரண்டாவது இராணுவ நீதிமன்ற விசாரணைக்கு பிறிதொரு நீதிபதிகள் குழுவை நியமிப்பது தொடர்பில் கவனம் செலுத்தப்பட்டுள்ளது. இருப்பினும் குறித்த நீதிபதிகள் குழு வினை நியமனம் செய்த ஜனாதிபதியே இது தொடர்பான இறுதித் தீர்மானத்தை எடுக்க வேண்டும்.

அதன் பொருட்டு சம்பந்தப்பட்ட நீதிபதிகள் குழுவினால் ஜனாதிபதிக்கு அறிக்கையொன்று சமர்ப்பிக்கப்பட்டுள்ளது.

இந்நிலையில் இரண்டாவது இராணுவ நீதிமன்றத்துக்கு வேறொரு நீதிபதிகள் குழு நியமிக்கப்பட்டுள்ளது.

இருப்பினும் அந்தக் குழு இதுவரையில் நியமிக்கப்படவில்லை. சில தினங்களில் அக்குழு நியமிக்கப்படும் என்று எதிர்பார்க்கப்படுகிறது. (ஓ-6)

## அடுத்த மாதம் முதல் ரயிலில் பிச்சை எடுக்கத் தடை

அடுத்த மாதம் முதலாம் திகதியிலிருந்து புகையிரதங்களில் பிச்சையெடுப்பது முற்றாகத் தடைசெய்யப்பட்டுள்ளதாக புகையிரத நிலைய வணிக அத்தியட்சகர் விஜய சமரசிங்க தெரிவித்தார்.

அண்மையில் புகையிரதங்களில் பிச்சை எடுக்கும் சிறுவன் ஒருவனை பற்றிய தகவல்கள் வெளிவந்ததைத் தொடர்ந்து சிறுவர்களைக் கடத்தி பிச்சையெடுக்கத் தூண்டும் கும்பல் ஒன்றைப் பற்றிய தகவல்களும் வெளிவந்தன.

பிச்சைக்காரர்கள் புகைவண்டியில் மேற்கொள்ளும் பல்வேறு நடத்தைகள் பற்றியும் இவ்விசாரணைகளில் தெரிய வந்ததையடுத்தே இந்த முடிவு எடுக்கப்பட்டுள்ளதாக தெரியவருகிறது. (ஓ-6)

# கருத்துச் சுதந்திரம், மனித உரிமைகளை பாதுகாக்க வேண்டியது மிகவும் அவசியமானது

## முன்னாள் நீதியரசர் தெரிவிப்பு

மனித உரிமைகளை பாதுகாப்பதன் மூலம் ஜீ.எஸ்.பி. சலுகைத் திட்டத்தை பெற்றுக்கொள்ள முடியும் என முன்னாள் பிரதம நீதியரசர் சரத் என் சில்வா தெரிவித்துள்ளார்.

கருத்துச் சுதந்திரம் மற்றும் மனித உரிமை ஆகியவற்றை பாதுகாக்க வேண்டியது மிகவும் அவசியமானதென சுட்டிக்காட்டியுள்ளார்.

மனித உரிமை மீறல்களுக்கு எதிராக நடவடிக்கை எடுக்கப்பட வேண்டுமென தாம் தொடர்ச்சியாக வலியுறுத்தி வருவதாகவும் தமது பதவிக் காலத்தின் போது மனித உரிமை மீறல்கள் தொடர்பில் அரசாங்கத்திற்கு சாதகமான முறையில் கருத்துக்களை வெளியிடுமாறு சிரேஷ்ட அமைச்சர் ஒருவர் கோரிக்கை விடுத்ததாகவும் அதனை தாம் நிராகரித்ததாகவும் அவர் தெரிவித்தார்.

மேலும் ஜெனரல் சரத் பொன்சேகா கைது செய்யப்பட்ட விதம் சட்டவிரோதமானதென வலியுறுத்தியுள்ளார். (6)

## வாக்கு எண்ணும் நிலையங்களில்


# கண்காணிப்பு பணிகளை மேற்கொள்ள கண்காணிப்பு அமைப்புக்கள் கோரிக்கை

வாக்கு எண்ணும் நிலையங்களில் கண்காணிப்பு நடவடிக்கைகளை மேற்கொள்ள அனுமதியளிக்குமாறு கண்காணிப்பு அமைப்புக்கள் தேர்தல் ஆணையாளரிடம் கோரியுள்ளன.

இதற்கமைய அங்கு தீவிர கண்காணிப்பு நடத்தப்பட வேண்டுமென கண்காணிப்பு அமைப்புக்கள் சுட்டிக்காட்டியுள்ளன.

தேர்தல் முடிவுகள் வெளியிடப்படும் நிலையங்களில் கண்காணிப்பு நடத்தவே தற்போது அனுமதி வழங்கப்பட்டுள்ளதாகவும் வாக்கு எண்ணும் நிலையங்களில் கண்காணிப்பு நடத்த அனுமதியளிக்கப்பட வேண்டுமெனவும் சீ.எம்.ஈ.வீ சுட்டிக்காட்டி யுள்ளது.

எனினும் தமது கோரிக்கைகளுக்கு இதுவரையில் தேர்தல் ஆணையாளர் உரிய பதிலளிக்கவில்லை என குறிப்பிடப்பட்டுள்ளது. (2-6)



மீள்குடியேற்றப்பட்ட மக்களுக்கான உதவுதொகை வழங்கும் நிகழ்வு அண்மையில் கிளிநொச்சி அரசாங்க அதிபர் பணிமனையில் நடைபெற்றது. இந்நிகழ்வில் அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா உரையாற்றுவதையும் வடமாகாண ஆளுநர் ஜீ.ஏ. சந்திரசிறி மற்றும் அமைச்சர் ஆகியோர் மக்களுக்கான உதவுதொகை வழங்குவதையும் நிகழ்வில் கலந்து கொண்டவர்களில் ஒரு தொகுதியினரையும் படங்களில் காணலாம்.

(படங்கள் என். குமார்)

# இலங்கை ஊடகத்துறையினர் மிகவும் கஷ்டமான சூழலில் பணியாற்றுகின்றனர்

## பாப் டாட்ச் வெல் தெரிவிப்பு

பிரிட்டிஷ் ஊடகத்துறையை ஒப்பிட்டு பார்க்கும் போது இலங்கையில் ஊடகத்து றையினர் மிகவும் கஷ்டமான சூழலில் பணி யாற்றுகிறார்கள் என்று பிரிட்டிஷ் பத்திரிகை யாளர்கள் சங்கத்தின் ஆசிரியர்கள் குழு வின் இயக்குநரான பாப் டாட்ச்வெல் கூறு கிறார்.

இலங்கை போன்ற நாடுகளில் தங்களது பணிக்காக செய்தியாளர்கள் துன்புறுத்தப் படுகிறார்கள், கைது செய்யப்படுகிறார்கள். சில வேளைகளில் அதைவிடவும் மோசமாக நடத்தப்படுகிறார்கள் என்றும் கூறும் பாப் டாட்ச் வெல், அதை மனதில் வைத்துதான் உலகம் முழுவதும் உள்ள பத்திரிகையாளர்களி டையே இந்த விருதுக்கு பொருத்தமானவர் யார் என்பதை தேர்தெடுக்கிறோம் என்று பிபிசி யிடம் தெரிவித்தார்.

இலங்கையிலும் உலகின் வேறு பல பகுதிகளிலும் இருக்கும் ஊடகவியலாளர் கள் குறித்து தாங்கள் கவலையடைந்துள்ள தாகவும் பிரிட்டிஷ் பத்திரிகையாளர் சங்கம் தெரிவித்துள்ளது.

அப்படியான ஒரு நிலையில் இருக்கும் ஒரு பத்திரிகையாளருக்கு விருது வழங்குவது மூலம் அந்தந்த நாடுகள் மீது சிறைபடுத் தப்பட்டிருக்கும் ஊடகவியலாளர்களை விடு விக்க ஒரு அழுத்தத்தை ஏற்படுத்துகிறது என்றும் அந்த சங்கம் கூறுகிறது.

இலங்கை ஊடகவியலாளர்கள் பணி யாற்றுவதற்கு ஒரு ஆபத்தான இடம் என்று ஊடக உரிமைகளுக்கான அமைப்புகள் கூறுகின்றன. அரசின் கொள்கைகளை விமர்ச்சிப்பவர்கள் அச்சுறுத்தப்பட்டு துன் புறுத் தப்படுகிறார்கள் என்ற அவை இலங்கை அர சின் மீது குற்றஞ்சாட்டுகின்றன.

கடந்த நான்கு ஆண்டுகளில் இலங்கை யில் 9 ஊடகவியலாளர்கள் கொல்லப்பட்டுள் ளனர் 25 பேருக்கு மேல் தாக்கப்பட்டுள் ளனர். என்று அதிகாரப்பூர்வத் தகவல்கள் கூறுகின்றன.

ஆனால் ஊடகவியலாளர்கள் கொல்லப் படுவது அல்லது தாக்கப்படுவது போன்ற வற்றில் தமக்கு ஏதும் பங்கில்லை என இலங்கை அரசு கூறுகிறது. (ஓ-6)

# வரலாறு காணாத தோல்வியை ஐ.தே.க,ஜே.வி.பி.பெற்றுக்கொள்ளும்

## மைத்திரிபால சிறிசேன தெரிவிப்பு



(கொழும்பு)

ஐக்கிய தேசியக் கட்சியும் ஜே.வி.பி கட்சியும் வரலாறு காணாத தோல் வியைத் தழுவும் என ஸ்ரீலங்கா சுதந்திரக்கட்சி பொதுச் செயலாளர் மைத் திரிபால சிறிசேன தெரிவித்துள்ளார்.

இதேவேளை வரலாற்றில் எந்தவொரு கட்சியும் நாடாளுமன்றத் தேர் தலில் ஈட்டாத மாபெரும் வெற்றியை தமது கட்சி ஈட்டிக்கொள்ளும் எனவும் குறிப்பிட்டுள்ளார்.

மேலும் தற்போது ஐக்கிய தேசியக்கட்சியின் தீவிர ஆதரவாளர்களும் சிரேஸ்ட உறுப்பினர்களும் கிரமமாக ஆளும் கட்சியில் இணைந்து கொள் வதாக அவர் சுட்டிக்காட்டியுள்ளார். (2-6)

# காசநோயை உடனடியாக கட்டுப்படுத்தும் நவீன மருந்து

## அவுஸ்திரேலியாவில் கண்டுபிடிப்பு

காசநோய் ஏற்பட்டால் அதை குணப் படுத் துவது மிகவும் கடினமானது. இதற்கு நீண்ட காலம் மருந்து சாப்பிட வேண்டும். மருந்து சாப்பிட்டாலும் குணமாகாமல் ஏராளமா னோர் உயிரிழந்து விடுகின்றனர்.

ஆனால் இப்போது காசநோயை உடனடி யாக குணப்படுத்தும் மருந்தை அவுஸ்திரே லியா சிட்னி பல்கலைக்கழக விஞ்ஞானிகள் உருவாக்கி உள்ளனர்.

ஒருவர் உடலில் காசநோய் தாக்கி அடுத் தவருக்கு தொற்று ஏற்படுத்தும் நிலைவரு தற்கு முன்பு இந்த மருந்தை சாப்பிட்டால் சில நாட்களில் குணமாகி விடுகிறது. நீண்ட காலம் மருந்து சாப்பிட தேவையில்லை.

இந்த மருந்து தற்போது ஆய்வு நிலை யில் உள்ளது. விரைவில் பயன்பாட்டுக்கு வர இருக்கிறது. உலகம் முழுவதும் 200 கோடி மக்களை காசநோய் தாக்கி இருக்கிறது. 58 நாடுகளில் மோசமான பாதிப்பை ஏற்படுத்தி உள்ளது. இந்த மருந்தால் காசநோய் பெரிய அளவில் தடுக்கப்பட்டு விடும் என்று எதிர் பார்க்கப்படுகிறது. (2-6)

# விருப்பு வாக்குகளின் மூலம் நிராகரிக்கப்படுவோர் நாடாளுமன்றில் நுழைய அனுமதியில்லை

## ஊடக அமைச்சர் தெரிவிப்பு

(கொழும்பு)

விருப்பு வாக்குகளின் அடிப்படையில் நிராகரிக்கப்படும் வேட்பாளர்கள் வேறும் வழி களில் நாடாளுமன்றிற்குள் பிரவேசிக்க அனு மதியளிக்கப்படமாட்டாதென ஊடக அமைச் சர் லக்ஸ்மன் யாப்பா அபேவர்த்தன தெரி வித்துள்ளார்.

குறிப்பாக மக்களினால் நிராகரிக்கப்படும் வேட்பாளர்கள் தேசியப் பட்டியல் ஊடாக நாடாளுமன்றிற்குள் நுழைய காட்டும் முனைப்புக்களுக்கு இடமளிக்கப்படாதென குறிப்பிட்டுள்ளார்.

அரசாங்கத் தகவல் திணைக்களத்தில் நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்பொன் றில் கலந்து கொண்ட போதே அவர் இதனைச் சுட்டிக்காட்டியுள்ளார். இது தொடர்பில் மேலும் தெரிவிக்கும்போது, இம்முறை நாடாளு மன்றத் தேர்தலில் ஐக்கிய மக்கள் சுதந்திரக் கூட்டமைப்பு நேரடியாக மூன்றில் இரண்டு பெரும்பான்மை பலத்தை பெற்றுக்கொள் ளும்.

வேறும் கட்சிகளின் மூலம் தெரிவாகும் நாடாளுமன்ற உறுப்பினர்களை இணைத் துக் கொண்டு ஆட்சியமைக்க வேண்டிய அவசியம் எமக்கில்லை என்றார்.

மேலும் கடந்த காலங்களில் அவசரகாலச் சட்டத்தை நீடிப்பதற்காக தகுதியற்றவர்களி டமும் ஒத்துழைப்பு கோர நேரிட்டது. எதிர் காலத்தில் இவ்வாறான நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டிய அவசியமில்லை என்றார். (2-6)

# சுற்றுலாத்துறை அமைச்சினால் ஹோட்டல், பாடசாலைகளை வடக்கு-கிழக்கில் நிறுவ நடவடிக்கை

(கொழும்பு)

வடக்கு மற்றும் கிழக்கு மாகாணங்களில் ஹோட்டல், பாடசாலைகளை நிறுவ சுற்றுலாத் துறை அமைச்சு நடவடிக்கை எடுத்துள்ளது.

இதற்கமைய இப்பாடசாலைகள் யாழ்ப் பாணம், வவுனியா மற்றும் மட்டக்களப்பு மாவட்டங்களில் நிறுவப்படவுள்ளன. இத னால் பயங்கரவாதத்தினால் பாதிப்படைந்து தொழில் வாய்ப்பற்ற இளைஞர், யுவதிகளுக்கு இப்பாடசாலைகளினூடாக பயிற்சியை பெற்று அதிக வருமானமுள்ள தொழில் வாய்ப்பைப் பெற்றுக்கொள்வதற்கான சந்தர்ப்பம் கிடைக்கு மென அமைச்சின் அறிக்கையொன்றில் தெரி விக்கப்பட்டுள்ளது.

ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷவின் வேண்டு கோளுக்கிணங்க சுற்றுலாத்துறையில் அதி கரித்து வரும் தொழில் வாய்ப்பினைக் கருத் தில் கொண்டு, தேசிய மட்டத்தில் இத்துறை யில் இளைஞர், யுவதிகளுக்கு பயிற்சியளிப் பதற்காக பயிற்சிப் பாடநெறியொன்று அறி முகப்படுத்தப்பட்டுள்ளது.

இப்பயிற்சிப் பாடநெறி தற்போது கொழும்பு, இரத்தினபுரி மாவட்டங்களில் நடத்தப்பட்டு வருவதாக அமைச்சு குறிப்பிட்டுள்ளது. இவற் றைக் கருத்தில் கொண்டு மாகாணம் தோறும் ஹோட்டல், பாடசாலைகளை நிறுவு வதற் கான நடவடிக்கை அமைச்சினால் மேற்கொள் ளப் பட்டுள்ளது. இதனோர் அங்க மாகவே வடக்கு-கிழக்கு மாகாணங்களிலும் இப்பாடசாலை களை நிறுவ நடவடிக்கை எடுக் கப்பட்டுள்ள தாக அமைச்சின் அறிக்கையில் சுட்டிக்காட்டப் பட்டுள்ளது. இன்னும் சில வருடங்களில் சுற்றுலாத்துறையில் அதிகளவி லான வேலை வாய்ப்புக்களை இளைஞர், யுவதிகளுக்கு பெற்றுக்கொடுப்பதற்கான சந்தர்ப்பம் ஏற்படுத் திக் கொடுக்கப்படு மென வும் இலங்கைக்கு சுற்றுலாப் பயணிகளின் எண்ணிக்கையை அதிகரிப்பதற்கான செயற்றிட்டங்கள் முன் னெடுக்கப்பட்டுவருவதாகவும் அமைச்சின் அறிக்கையில் மேலும்குறிப்பிடப்பட்டுள்ளது.

இதேவேளை ஐக்கிய அமெரிக்காவிலிருந்து இலங் கைக்கு வரும் சுற்றுலாப் பயணிகளின் எண்ணிக்கை கடந்த வருடம் ஜனவரி மாதத் தை விடவும் இவ்வருடம் ஜனவரி மாதம் 21வீதத்தால் அதிகரித்துள்ளமை குறிப் பிடத்தக்கது. (ஓ-6)


விசேட அழைப்பிதழ்

யாழ்குடா நாட்டில் உள்ள

A/L 2009

(கடந்த வருடம் பரீட்சை எழுதிய மாணவர்களுக்கும்

& 2010 Batch

இவ்வருடம் பரீட்சை எழுதவிருக்கும் மாணவர்களுக்குமான விசேட அழைப்பிதழ்.

எதிர்வரும் 28ம் திகதி (ஞாயிறு) & 29ம் திகதி (திங்கள்-போயாதினம்) ஆகிய நாட்களில் நடைபெறவிருக்கும் சர்வதேச கல்விக்கண்காட்சியில் கலந்துகொள்ளுமாறு வேண்டப்படுகின்றீர்கள்.

இடம் : St.Patrick's College, Hall.

நேரம் : 10am - 6.00pm (Both day)

Free Entrance - பிரவேசம் இலவசம்

இக்கல்விகண்காட்சியில் 30 மேற்பட்ட தேசிய, சர்வதேச பல்கலைகழகக் கல்லூரிகள், பங்குபற்றி UK, USA, India, Ukraine, Malaysia, Singapore, Australia, New Zealand, Canada, ஆகிய நாடுகளில் தரமான உயர்கல்வியை Medicine (MBBS/MD), Engineering (Civil, Mechanical, Electronics, IT), Management, Journalism, Computer Science, Hotel Management, Etc., ஆகிய துறைகளில் கற்பதற்கான தகவல்களை பெற்றுக்கொள்ளலாம்.

Organized by

SIC Court

734, Hospital Road, Jaffna Tel : 0777 767 818

(சி-4780)



மாபெரும் மலிவு விற்பனை

சித்திரைப் புத்தாண்டு தினத்தை முன்னிட்டு எமது நிறுவனத்தின் மாபெரும் மலிவு விற்பனை 20.03.2010இல் ஆரம்பமாகிறது. சகல விதமான புடைவை வகைகளையும் மிகவும் மலிவான விலையில் பெற்றுக்கொள்ளலாம். உடன் விரையுங்கள்.

இராஜேஸ்வரி ரெக்ஸ்ரைல்ஸ்,

105, மின்சார நிலைய வீதி, யாழ்ப்பாணம்.

(சி-4755)

# ஜானகபெரேரா படுகொலையுடன் தொடர்புடைய சந்தேக நபர்களை விடுதலை செய்யக்கூடாது

## பாதுகாப்பு அமைச்சு

(கொழும்பு)

ஜானக பெரேரா படுகொலைச் சம்பவத்துடன் தொடர்புடைய சந்தேக நபர்களை விடுதலை செய்யக்கூடாது என பாதுகாப்பு அமைச்சு அறிவித்துள்ளது.

வடமத்திய மாகாண எதிர்க்கட்சித் தலைவரும் இராணுவ மேஜருமான ஜானக பெரேரா படுகொலைச் சம்பவத்துடன் தொடர்புடைய சந்தேக நபர்களை விடுதலை செய்வது தொடர்பில் பாதுகாப்பு அமைச்சு எதிர்ப்பை வெளியிட்டுள்ளது.

இந்த தற்கொலைக் குண்டுத் தாக்குதல் சம்பவத்தில் மேஜர் ஜெனரல் ஜானக பெரேரா உள்ளிட்ட 34 பேர் கொல்லப்பட்டதுடன் 100க்கும் மேற்பட்டவர்கள் காயமடைந்தனர்.

இச்சம்பவத்துடன் தொடர்புடையவர்கள் என்ற சந்தேகத்தின் பேரில் கைது செய்யப்பட்டு தடுத்து வைக்கப்பட்டிருந்த எட்டு பேரை விடுதலை செய்யுமாறு நீதவான் தர்ஷிகா விமலசிறி அண்மையில் உத்தரவு பிறப்பித்திருந்தார்.

எனினும் இந்தத் தீர்ப்பு தொடர்பில் மீளாய்வு செய்யப்பட்ட வேண்டுமென தெரிவிக்கப்பட்டுள்ளது.

குறித்த விடுதலைப்புலி சந்தேக நபர்களை விடுதலை செய்வதற்கு முன்னர் விரிவான விசாரணைகள் நடத்தப்பட வேண்டுமென பாதுகாப்பு அமைச்சு சுட்டிக் காட்டியுள்ளது. (2-6)

# முல்லைத்தீவு மாஞ்சோலை வைத்தியசாலை மீளவும் திறந்து வைக்கப்பட்டுள்ளது

(கொழும்பு)

முல்லைத்தீவு மாஞ்சோலையில் உள்ள அரசினர் மாவட்ட வைத்தியசாலை நேற்று மீளவும் திறந்து வைக்கப்பட்டுள்ளது.

வடமாகாண ஆளுநர் மேஜர் ஜெனரல் ஜி.ஏ. சந்திரசிறி இந்த வைத்தியசாலையை மீளவும் திறந்து வைத்துள்ளார்.

வன்னியில் நடைபெற்ற இறுதிக்கட்ட போரின் போது இது முற்றாக சேதத்திற்குள்ளாயிருந்தது.

அத்துடன் இவ்வைத்தியசாலைப் பணியாளர், நோயாளிகள் பலர் தாக்குதல்களில் பலியாகியிருந்தமை குறிப்பிடத்தக்கது.

அதேவேளை தற்போது முல்லைத்தீவின் பட்டினப்பகுதியில் முதன் முதலில் 6 குடும்பங்களைச் சேர்ந்த 16 பேர் மீளக்குடியேறியுள்ளனர்.

அவர்களைத் தவிர கரைத்துறைப்பற்று பிரதேச செயலர் பிரிவில் முல்லைத்தீவு பட்டினம் தவிர்ந்த ஏனைய இடங்களில் இது வரை ஆயிரத்து 334 குடும்பங்கள் மீளக் குடியேறியுள்ளன. (2-6)

# வைத்தியசாலை கட்டணத்தை செலுத்தாத நோயாளி விளக்கமறியலில்

கொழும்பின் முன்னணி வைத்தியசாலை ஒன்றில் பெற்றுக் கொண்ட சிகிச்சைகளுக்காக கட்டணத்தை செலுத்தாத நோயாளி ஒருவரை பொலிஸார் கைது செய்துள்ளனர்.

நீதிமன்றத்தின் உத்தரவின் அடிப்படையில் குறித்த நபர் எதிர்வரும் 30 ஆம் திகதி வரையில் விளக்கமறியலில் வைக்கப்படுவார் எனத் தெரிவிக்கப்படுகிறது.

குறித்த நோயாளி வைத்தியசாலைக் கட்டணமான 8 இலட்சத்து 11 ஆயிரத்து 507 ரூபாவினை செலுத்த வேண்டும் எனவும் குறித்த கட்டணத்தை அவர் செலுத்தத் தவறியுள்ளதாகவும் குறிப்பிடப்படுகிறது.

வைத்தியசாலையின் கணக்காளரினால் பொலிஸ் நிலையத்தில் மேற்கொள்ளப்பட்ட முறைப்பாட்டை அடுத்து குறித்த நபர் கைது செய்யப்பட்டுள்ளார்.

கல்கிஸ்ஸ பகுதியில் அமைந்துள்ள குறித்த வைத்தியசாலையில் கடந்த 15 ஆம் திகதி முதல் 20 ஆம் திகதி வரையில் இரண்டு இருதய சத்திரசிகிச்சைகளை குறித்த நபர் செய்து கொண்டுள்ளார். (ஓ-6)

# வடக்கில் 480 பேர் நிலக்கண்ணி வெடிகளில் சிக்குண்டு காயம்

## இராணுவப் பேச்சாளர் பிரசாத் தகவல்

(கொழும்பு)

வடக்கில் பல்வேறு பிரதேசங்களிலும் புதைக்கப்பட்டுள்ள நிலக்கண்ணி வெடிகளில் சிக்குண்டு சுமார் 480 பொது மக்கள் படுகாயங்களுக்கு உள்ளாகியுள்ளனர் என்று இராணுவப் பேச்சாளர் மேஜர் ஜெனரல் பிரசாத் சமரசிங்க தெரிவித்தார்.

இதேவேளை, யுத்த காலத்தின் போது இடம்பெயர்ந்த முகாம்களில் தங்கவைக்கப்பட்டிருந்த பொது மக்களில் ஒரு இலட்சத்து 83 ஆயிரத்து 219 பேர் அவர்களது சொந்த இடங்களில் மீளக்குடியேற்றப்பட்டு உள்ளனர் என்று தெரிவித்த இராணுவப் பேச்சாளர், சுமார் 54 ஆயிரம் பேர் மாத்திரமே இன்னமும் மீளக் குடியேற்றப்பட வேண்டிய நிலையில் உள்ளனர் என்றும் கூறினார்.

தேசிய பாதுகாப்புக்கான ஊடக மத்திய நிலையத்தில் நேற்று முன்தினம் மாலை இடம்பெற்ற விசேட செய்தியாளர் மாநாட்டின் போது தகவல் வெளியிடுகையிலேயே இராணுவப் பேச்சாளர் மேற்கண்டவாறு கூறினார். அங்கு அவர் தொடர்ந்தும் கூறியதாவது,

வட மாகாணத்திற்கு உட்பட்ட யாழ்ப்பாணம், கிளிநொச்சி, முல்லைத்தீவு, மன்னார், வவுனியா மற்றும் கிழக்கு மாகாணத்திற்கு உட்பட்ட மட்டக்களப்பு போன்ற மாவட்டங்களில் புதைக்கப்பட்டுள்ள நிலக்கண்ணி வெடிகளை அகற்றும் பணிகள் தற்போது தீவிரமாக்கப்பட்டுள்ளன.

இராணுவத்தின் பொறியியல் பிரிவைச் சேர்ந்த வீரர்களே இந்த நிலக்கண்ணி வெடிகளை அகற்றும் நடவடிக்கைகளில் ஈடுபட்டுள்ளனர். அவர்களுடன் இணைந்து செயற்படும் நடவடிக்கையில் சர்வதேச தொண்டு நிறுவனங்கள் ஏழும் இணைந்துள்ளன.

இந்நிலையில், நிலக்கண்ணி வெடிகளை அகற்றிய பிரதேசங்களில் பொது மக்களை மீளக்குடியேற்றும் நடவடிக்கைகள் தற்போது முன்னெடுக்கப்பட்டுள்ளன.

அந்தவகையில் இதுவரையில் 1 இலட்சத்து 83 ஆயிரத்து 219 பேர் மீளக் குடியேற்றப்பட்டுள்ளனர். இந்நிலையில் 84,704 பேர் மீளக்குடியேற்றப்பட வேண்டியுள்ளது.

அத்துடன் முகாம்களில் தங்கவைக்கப்பட்டிருந்தோரில் சுமார் 29 ஆயிரம் பேர் சுய விருப்பின் பேரின் வெளியேறிச் சென்றுள்ளனர்.

அந்த வகையில், சுமார் 54 ஆயிரம் பேர் மாத்திரமே முகாம்களில் தங்கியுள்ளனர். அம்மக்களும் எதிர்வரும் நாட்களில் அவர்களது சொந்த இடங்களில் மீளக் குடியேற்றுவதற்கான நடவடிக்கைகள் முன்னெடுக்கப்படும். (ஓ-6)

# பாராளுமன்றத் தேர்தல் வாக்கு எண்ணுவதில் புதிய நடைமுறை

## 5%இலும் குறைந்தவை எண்ணப்பட மாட்டாது

(கொழும்பு)

பாராளுமன்ற தேர்தலில் ஐந்து வீதத்திற்கு குறைந்தளவான வாக்குகளை பெறுகின்ற அரசியல் கட்சிகள் மற்றும் சுயேட்சைக் குழுக்களின் விருப்பு வாக்குகளை இம்முறை எண்ணாமல் விடுவதற்கு தேர்தல்கள் செயலகம் தீர்மானித்துள்ளது.

இதேவேளை கட்சிகள் மற்றும் சுயேச்சைக் குழுக்களின் வாக்குகள் விருப்பு வாக்குகளை எண்ணுவதில் புதிய நடைமுறையொன்றும் அறிமுகப்படுத்தியுள்ளதாக செயலகம் அறிவித்துள்ளது.

பாராளுமன்ற தேர்தலில் அதிகளவான கட்சிகள் மற்றும் சுயேச்சை குழுக்கள் போட்டியிடுவதனால் வாக்கெண்ணும் நிலையங்களில் கடமையாற்றும் அதிகாரிகள் முகம் கொடுக்கின்ற பிரச்சினைக்கு தீர்வு காணும் வகையிலேயே இந்த புதிய நடைமுறை அறிமுகப்படுத்தப்பட்டுள்ளது.

ஐந்து வீதத்திற்கு குறைந்தளவான வாக்குகளை எண்ணும் போது வாக்கெண்ணும் நிலையத்தில் இடநெருக்கடிகள் ஏற்படுவதுடன் அதிகாரிகளும் பல்வேறு அசௌகரியங்களுக்கு முகம் கொடுக்க வேண்டிய நிலைமை ஏற்பட்டுள்ளது.

இவற்றை தவிர்த்துக்கொள்ளும் நோக்கிலேயே இந்த புதிய நடைமுறை வாக்கெண்ணும் நிலையங்களில் வாக்குகளை எண்ணுவதற்கு இரண்டு பிரிவுகளாக அதிகாரிகள் நியமிக்கப்படவிருக்கின்றனர்.

முதலாவது பிரிவினர் மொத்த வாக்குகளையும் கட்சிகள் மற்றும் சுயேச்சைக் குழுக்களின் வாக்குகளையும் இரண்டாவது பிரிவினர் விருப்பு வாக்குகளையும் எண்ணுவர். வாக்குகளை ஒரே பிரிவினர் எண்ணுவதனால் பல அசௌகரியங்களையும் கஸ்டங்களையும் சந்தித்தனர்.

இந்த புதிய நடைமுறையின் மூலமாக குளறுபடிகளைத் தவிர்த்து விருப்பு வாக்குகளை முறையாகவும் நிதானமாகவும் எண்ண முடியும் என்றும் திணைக்களம் அறிவித்துள்ளது. (ஓ-6)

# பாதுகாப்பு கருதி மூடப்படும் ரஜரட்டை பல்கலைக்கழகம்

ரஜரட்டை பல்கலைக்கழகம் பாதுகாப்பு கருதி மூடப்பட்டுள்ளது. பல்கலைக்கழக உபவேந்தர் தலைமையில் நடைபெற்ற கலந்துரையாடலையடுத்து இந்த நடவடிக்கை எடுக்கப்பட்டதாக பல்கலைக்கழக பணிப்பாளர் தெரிவித்துள்ளார்.

பல்கலைக்கழக மாணவர்கள் மற்றும் மிகிந்தலை கிராமவாசிகளுக்கிடையே ஏற்பட்ட முறுகல் நிலையே பல்கலைக்கழகத்தை மூடுவதற்கான காரணமாகும் எனத் தெரிவிக்கப்படுகின்றது.

அதேவேளை இரு தரப்பினருக்கும் ஏற்பட்ட மோதலில் மூவர் வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர். இந்த சம்பவத்தையடுத்து பாதுகாப்பு கருதி இந் நடவடிக்கை எடுக்கப்பீட்டுள்ளது. (2-6)

# நியாயமான, சுதந்திரமான முறையில் தேர்தல் நடைபெற்றால் ஐ.தே.க. இலகு வெற்றியீட்டும்


## ரோசி சேனநாயக்க

நியாயமானதும் சுதந்திரமானதுமான முறையில் தேர்தல்கள் நடைபெற்றால் ஐக்கிய தேசியக் கட்சி இலகுவான முறையில் தேர்தலில் வெற்றியீட்டுமென மேல் மாகாண சபை எதிர்க்கட்சித் தலைவியும், பொதுத் தேர்தல் வேட்பாளருமான ரோசி சேனாநாயக்க தெரிவித்துள்ளார்.

இதற்கமைய கடந்த ஜனவரி மாதம் 26 ஆம் திகதி நடைபெற்ற ஜனாதிபதித் தேர்தலில் இடம்பெற்றதனைப் போன்று குழறுபடிகள் இடம்பெறாத பட்சத்தில் ஐக்கிய தேசியக் கட்சியின் வெற்றி வாய்ப்பு பிரகாசமாகவே காணப்படுகின்றது என்றும் தெரிவித்தார்.

இது குறித்து அவர் மேலும் தெரிவிக்கையில், ஜனநாயக வழிமுறைகளுக்கு அமைவாக நியாயமான முறையில் தேர்தல்களை நடத்துமாறு ஐக்கிய தேசியக் கட்சித் த[illegible]ர் ரணில் விக்ரமசிங்க கோரிக்கை விடுத்துள்ளார்.

நூற்றுக்கு எண்பது வீதமான மக்கள் ஐக்கிய தேசிய முன்னணிக்கு ஆதரவளித்து வருகின்றனர். ஒருவேளை உணவு வழங்க முடியாது பிள்ளைகளை ஆற்றில் வீசி எறிய வேண்டிய துர்ப்பாக்கிய நிலைமையே தற்போது நாட்டில் நிலவுவதாகவும் அவர் மேலும் தெரிவித்துள்ளார். (2-6)



யுத்த காலத்தின் போது கைவிடப்பட்ட 450 துவிச்சக்கர வண்டிகளை உரிமையாளர்களிடம் மீளளிக்கும் நிகழ்வில் வடமாகாண ஆளுநர் மற்றும் அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா ஆகியோர் பெண்ணொருவரிடம் துவிச்சக்கர வண்டியை கையளிப்பதைப் படத்தில் காணலாம்.

# காளி அம்மனுக்கு பலி கொடுக்க 3 குழந்தைகளை கொன்ற தந்தை

## பாகிஸ்தானில் சம்பவம்

(இஸ்லாமாபாத்)

பாகிஸ்தானின் சிந்து மாகாணத்தில் வசித்த இந்து ஒருவர் காளிக்கு தனது மூன்று குழந்தைகளையும் கழுத்தை அறுத்து பலி கொடுத்து விட்டு தானும் தற்கொலை செய்து கொண்டார்.

பாகிஸ்தானின் சிந்து மாகாணத்தில் உள்ள மிர்புர்காஸ் நகரை அடுத்துள்ள மிர்வா கோர்ஜர்னி என்ற இடத்தில் வசித்து வந்தவர் திகம்தாஸ் மெக்வாரின் பெமோமல் (26).

இந்து குடும்பத்தை சேர்ந்த இவர் தனது தாய், மனைவி , குழந்தைகள் பார்வதி (6), ரெனா(4) ,ஆர்த்தி (1) மற்றும் சகோதரருடன் ஒரே வீட்டில் வசித்து வந்தார்.திகம்தாஸ் காளி அம்மனை தினமும் வணங்கி வந்தார்.

தனது வீட்டின் முதல் மாடியில் சிறிய காளி கோயில் ஒன்றை கட்டி அதற்கு தினமும் பூஜை கள் நடத்தி வந்தார். நேற்று முன்தினம் காலை அவரது மனைவி வெளியே சென்றிருந்தார். அப்போது திகம்தாஸ் குளித்து விட்டு தனது தாயார் மற்றும் உறவினர்களை சந்தித்து காளிக்கு பரிகாரம் செய்ய இருப்பதாக கூறியுள்ளார்.

பின் தனது வீட்டின் முதல் மாடியில் உள்ள காளி கோயிலுக்கு சென்று சாமி கும்பிட்ட அவர் திடீரென ஆவேசமடைந்தவராக தனது மூன்று குழந்தைகளையும் ஒன்றன் பின் ஒன்றாக கழுத்தை அறுத்து கொலை செய்தார். பின்னர் தனது கையின் மணிக் கட்டு பகுதியில் உள்ள நரம்புகளை அறுத்துக் கொண்டு இரத்தம் சொட்ட சொட்ட மயங்கி விழுந்தார். சிறிது நேரத்தில் வெளியே சென்றிருந்த அவரது மனைவி வீடு திரும்பினார். வீட்டின் முதல் மாடிக்கு சென்று பார்த்த அவர் தனது மூன்று குழந்தைகளும் கணவரும் இரத்த வெள்ளத்தில் இறந்து கிடப்பதை கண்டு கதறி அழுதார். அவரது அலறல் சத்தம் கேட்டு ஓடி வந்த அக்கம் பக்கத்தினர் பொலிசுக்கு தகவல் தெரிவித்தனர்.

இச்சம்பவம் அப்பகுதியில் பெரும் பரபரப்பை ஏற்படுத்தியுள்ளது. இது குறித்துதிகம் தாஸின் சகோதரர் முல்சந்த்திடம் கேட்டபோது திகம்தாஸ் ஒரு காளி பக்தன். கோயில் பூசாரி என்று மட்டும் தெரிவித்தார். (2-6)

# விமானத்தை தகர்க்கும் அல்கொய்தா சதி அம்பலம்

சத்திரசிகிச்சை மூலம் மார்பில் வெடிகுண்டை புதைத்து வைத்து விமானங்களை தகர்க்க அல்கொய்தா தீவிரவாதிகள் சதித்திட்டம் தீட்டி இருந்தது தெரியவந்துள்ளது. அல்கொய்தா தீவிரவாதிகள் இப்போது ஏராளமான மனித குண்டுகளை பயன்படுத்த ஏராளமான பெண்களையும் தேர்வு செய்துள்ளனர்.

அவர்களை பல்வேறு வகையான தாக்குதலுக்கு பயன்படுத்த திட்டமிட்டு உள்ளனர். இதில் உடலில் வெடிகுண்டை வைத்து தகர்க்கும் திட்டமும் ஒன்று. பெண் தீவிரவாதிகள் மார்பில்பிளாஸ்டிக்சர்ஜரிசத்திரசிகிச்சை மூலம்குண்டுகளை புதைத்து வைத்து விமானங்களில் தாக்குதல் நடத்த செய்வது அவர்களது முக்கிய திட்டமாகும். அல்கொய்தா இயக்கத்தில் பல டாக்டர்க ளும் இருக்கின்றனர். பாகிஸ்தானில் மலை வாழ் மக்கள் கிராமங்களில் உள்ள அல்கொய் தா முகாமில் இருக்கும் இந்த டாக்டர்கள் சத்திரசிகிச்சை மூலம் மார்பில் குண்டுகளை புதைத்து வைக்கும் பணியில் ஈடுபட்டு வருவதாக இங்கிலாந்து உளவு துறைக்கு தகவல் கிடைத்துள்ளது.

மார்பு அல்லது பின்பு சதை பகுதியில் 5 அவுன்சு உள்ள வெடி மருந்தை பிளாஸ்டிக் குப்பியில் அடைத்து புதைத்து வைத்து விடலாம். இதை ஸ்கேனர் கருவிகளால் கண்டு பிடிக்க முடியாது.

விமானத்தில் செல்லும் போது இந்த குண்டை வெடிக்க செய்தால் விமானத்தில் ஓட்டை விழும் அளவுக்கு தாக்கும் சக்தி இருக்கும். ஓட்டை விழுந்தால் மேற்கொண்டு விமானம் பறக்க முடியாமல் கீழே விழுந்து விடும் இந்த முறை யில் அவர்கள் தாக்குதல் நடத்த திட்டமிட்டுள்ளனர். எனவே இது போன்ற தாக்குதல்களை எப்படி தடுப்பது என்பது குறித்து வல்லுனர்கள் குழு ஆய்வு செய்து வருகின்றது. (ஓ-2-6)

# கென்யாவின் செனட் உறுப்பினர்களில் 50 வீதம் பெண்களாக இருக்க வேண்டும்

## அந்நாட்டு பாராளுமன்ற குழு தெரிவிப்பு

கென்யாவில் நீண்டகாலமாக இழுபறியில் இருந்த புதிய அரசியலமைப்பின் இறுதி வடிவம் பற்றி விவாதித்துவரும் பாராளுமன்றக் குழுவொன்று அங்கு புதிதாக அதிகாரமளிக்கப்பட்டுள்ள செனட் சபைக்குத் தேர்ந்தெடுக்கப்படும் உறுப்பினர்களில் குறைந்தது அரைவாசிப் பேராவது பெண்களாக இருக்க வேண்டுமென்று பரிந்துரை செய்துள்ளது.

இதற்கமைய அங்குள்ள 10 பிராந்தியங்களும் தலா ஒரு ஆண் உறுப்பினரையும் ஒரு பெண் உறுப்பினரையும் செனட் சபைக்கு தெரிவு செய்ய வேண்டுமெனவும் மீதமுள்ள 10 இடங்களும் சிறுபான்மை சமூகங்களால் நிரப்பப்பட வேண்டுமெனவும் அனைத்துக் கட்சி பாராளுமன்றக் குழு தெரிவித்துள்ளது.

அரசியலமைப்பின் சரியான வடிவம் குறித்து நீண்ட இழுபறி நிலவிவரும் பின்னணியில் இந்த வருட இறுதியில் நடைபெறவுள்ள மக்கள் கருத்தறியும் வாக்கெடுப்புக்கு முன்பதாக கென்யாவின் முழுமையான பாராளுமன்ற அங்கீகாரம் அதற்கு கிடைக்க வேண்டியதும் அவசியமா கிறது.(2-6)

# துப்பாக்கிதாரியின் தாக்குதலில் ஐந்து ஈராக்கிய படையினர் பலி

துப்பாக்கிதாரியொருவர் நடத்திய தாக்குதலில் ஐந்து ஈராக்கிய படையினர் கொல்லப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.

ஈராக்கிய தலைநகர் பக்தாத்திற்கு தெற்குப் பகுதியில் ராட்வன்னிய நகரில் சோதனைச் சாவடியில் கடமையில் ஈடுபட்டிருந்த படையினர் மீதே தாக்குதல் நடத்தப்பட்டுள்ளது.

இத்தாக்குதலுடன் தொடர்புடைய சந்தேகத்தின் பேரில் 17 பேர் கைது செய்யப் பட்டுள்ளனர்.

ஈராக்கில் வன்முறைச் சம்பவங்கள் குறைவடைந்துள்ள போதிலும் படைவீரர்கள் மற்றும் காவல்துறையினர் மீதான தாக்குதல்கள் குறைவடையவில்லை எனத் தெரிவிக்கப்படுகிறது.(ஓ-6)

# ஹிட்லர் எழுதிய கடிதம் ரூ.5 இலட்சத்து 75 ஆயிரத்துக்கு ஏலம்

அடோல்ப் ஹிட்லர் எழுதிய கடிதம் ஒன்று 5 இலட்சத்து 75 ஆயிரம் ரூபாய்க்கு ஏலம் விடப்பட்டது. அமெரிக்காவைச் சேர்ந்த கென்னத் ரெண்டல் என்பவர் அந்தக் கடிதத்தை ஏலம் எடுத்தார்.

பிரிட்டன் மற்றும் ஜெர்மனி இடையே உண்மையான நல்லுறவை விரும்புவதாக அடோல்ப் ஹிட்லர் எழுதிய கடிதமே இவ்வாறு ஏலம் விடப்பட்டது.

பிரிட்டன் எதிர்கொண்ட பொருளாதார நெருக்கடி குறித்து கட்டுரை ஒன்றை எழுதுமாறு அந்நாட்டைச் சேர்ந்த பத்திரிகையாளர் செல்பான் டெல்மர் என்பவர் ஹிட்லரிடம் கேட்டிருந்தார்.

அதற்கான தன் பதிலை 1931 ஆம் ஆண்டு செப்டம்பர் 30 ஆம் திகதியிட்ட ஒரு பக்க கடிதம் மூலம் ஜெர்மனியை ஆட்சி செய்த சர்வாதிகாரியான ஹிட்லர் அனுப்பி வைத்தார்.

தட்டச்சுப் பதிவிலான அந்தக் கடிதத்தில் முதலாவது உலகப் போரின் வருத்தமான உணர்வுகளில் இருந்து விடுபட்டு பிரிட்டன் மற்றும் ஜெர்மனி இடையே உண்மையான நல்லுறவை உணர்ந்தால் நான் மிகவும் சந்தோஷமடைவேன் எனத் தெரிவித்திருந்தார்.

இந்தக் கடிதத்தை ஏலம் விட்ட போது அமெரிக்காவைச் சேர்ந்த கென்னத் ரெண் டல் அந்தக் கடிதத்தை 5 இலட்சத்து 75 ஆயிரம் ரூபா வுக்கு ஏலம் எடுத்தார். இவர் மசாசூ செட்ஸ் பகுதியில் அமைந்துள்ள இரண்டாம் உலகப் போர்



அருங் காட்சியகத்தின் உரிமையாளர்.

இந்தக் கடிதத்தை வாங்கியது குறித்து அவர் தெரிவிக்கையில்,

இது மிகவும் முக்கியத்துவம் வாய்ந்த ஏலம். வரலாற்று சிறப்பு மிக்க இந்தக் கடிதத்திற்கு 24 இலட்சம் ரூபா வரை கொடுக்கத் தயாராக இருந்தேன் என்றார். ஹிட்லர் காலத்தில் மிகவும் பிரபலமாக இருந்த பிரிட்டன் நிருபர்களில் ஒருவர் டெல்மர். ஹிட்லரை நேரடியாகப் போட்டி எடுத்த பிரிட்டன் நாட்டைச் சேர்ந்த முதல் நிருபரான இவர் 1932 ஆம் ஆண்டு தேர்தல் பிரசாரத்தின் போது ஹிட்லருடன் விமானத்தில் பயணம் செய்துள்ளார். (6)

# 9 வயதில் திருமணம்; 10 வயதில் விவாகரத்து

## ஏமன் சிறுமியின் அவலம்

ஏமன் நாட்டைச் சேர்ந்த நவுசத் அலி தனது ஒன்பது வயதில் திருமணம் முடித்து 10 வயதில் கணவரால் விவகாரத்து பெற்றுள்ளார்.

தற்போது இவருக்கு 12 வயது. இவர் 9 வயது சிறுமியாக இருந்த போது தனக்கு நேர்ந்த அவலங்களை ஒரு பிரான்ஸ் எழுத்தாளரிடம் தெரிவித்துள்ளார்.

இவரது தந்தைக்கு மொத்தம் 14 குழந்தைகள். வறுமை நிலை. பிள்ளைகளை வைத்துப் பராமரிக்க முடியாத அவர் நவுசத்தை 9 வயதில் சுமார் 30 வயதான ஒருவருக்குத் திருமணம் செய்து கொடுத்தார்.

நவுசத்தின் கணவரோ அவரை பாலியல் கொடுமைகள் செய்து சித்திரவதை செய்து விட்டுப் பின்னர் மறுவருஷமே நவுசத்துக்கு 10 வயதாகும் போது அவரை விவகாரத்து செய்துவிட்டார்.

வாழ்வில் தனக்கு நேர்ந்த அவலங்களையெல்லாம் பிரான்ஸ் எழுத்தாளர் டெல்பினிடம் நவுசத் தெரிவித்தார். டெல்பின் அவற்றைத் தொகுத்துப் பெரிய புத்தகமாக எழுதி வெளியிட்டுள்ளார். இந்தப் புத்தகம் தற்போது அமெரிக்காவில் அமோகமாக விற்பனையாகி வருவதாகத் தெரிவிக்கப்படுகிறது.(2-6)

# அடைக்கலம் தேடும் பின்லேடனின் மகன்



(ரியாத்)

அல்கொய்தா தீவிரவாத அமைப்பின் தலைவர் ஒசாமா பின்லேடனின் மகன் அகதியாக வாழ அடைக்கலம் தேடி வேண்டுகோள் விடுத்துள்ளார்.

பின்லேடனின் குடும்பத்தார் தெஹ்ரானிலிருந்து வெளியேற ஐக்கிய அரபு அமீரகம், கட்டார் ஆகிய நாடுகள் உதவவேண்டும் என் றும் அவர் கோரிக்கை விடுத்துள்ளார்.

சர்வதேச பயங்கரவாதியான ஒசாமா பின்லேடனின் மகன்கள் 2001 ஆம் ஆண்டு முதல் ஈரானிலுள்ள தெஹ்ரானில் வீட்டுக் காவலில் வைக்கப்பட்டுள்ளனர்.

இதில் ஒசாமாவின் மகனான உமர் பின்லேடனின் 2 மகன்களின் குடும்பத்தார் மட்டும் கடந்த 3 மாதங்களில் விடுதலை செய்யப்பட்டு சிரியாவுக்கு அனுப்பப்பட்டனர். மற்றவர்கள் தொடர்ந்து தெஹ்ரான் நகரிலேயே வீட்டுக் காவலில் வைக்கப்பட்டுள்ளனர்.

இந்நிலையில் ஏ.எஃப்.பி செய்தி நிறுவனத்துக்கு பின்லேடனின் மகன் உமர் பின்லேடனிடமிருந்து ஒரு கடிதம் வந்துள்ளது.

அந்தக் கடிதத்தில் அவர் கூறியுள்ளதாவது,

2001 ஆம் ஆண்டு முதல் எங்களின் குடும்பத்தார் வீட்டுக் காவலிலேயே வைக்கப் பட்டுள்ளனர். கடந்த 3 மாதங்களில் என்னுடைய 2 மகன்களை மட்டுமே சிரியாவுக்கு அனுப்ப சம்மதித்தனர். மற்றவர்கள் அனைவரும் இன்னும் வீட்டுக் காவலில் தான் இருக்கின்றனர்.எங்கள் குடும்பத்தாரை வீட்டுக் காவலி லிருந்து வெளியே விட ஈரான் அரசு மறுத்து வருகின்றது. கிழக்கு நாடுகளோ அல்லது மேற்கத்திய நாடுகளோ எங்கள் குடும்பத்தாரைக் காப்பாற்ற முன்வர வேண்டும். அவர் கள் ஒன்றுமறியா அப்பாவிகள்.

எங்கள் குடும்பத்தாரை விடுவித்து ஐக்கிய அரபு அமீரகத்திலோ அல்லது கட்டாரிலோ அகதியாக வாழ ஏற்பாடு செய்யவேண்டும். எங்களுக்கு அடைக்கலம் தர எந்த நாடாவது முன்வர வேண்டும். இவ்வாறு அந்தக் கடிதத்தில் குறிப்பிடப்பட்டுள்ளது. 2001 ஆம் ஆண்டு முதல் ஒசாமாவின் மகன்கள் அவர்களது மனைவிகள் குழந்தைகள் என மொத்தம் 23 பேர் வீட்டுக் காவலில் உள்ளமை குறிப்பிடத் தக்கது. (6)

# லண்டனில் பொது இடங்களில் எச்சில் துப்பினால் அபராதம்

(லண்டன்)

லண்டனில் பான்பராக் உள்ளிட்ட போதைப் பாக்குகளை மென்று பொது இடங்களில் துப்புவோருக்கு 6 ஆயிரம் இந்திய ரூபாய் அபராதம் விதிக்க முடிவெடுக்கப்பட்டுள்ளது.

லண்டனில் வசிக்கும் இந்தியர்கள் தான் பான்பராக் உள்ளிட்ட போதைப் பாக்குகளை மென்று பொது இடங்களில் துப்பி வைப்பதாக புகார் எழுந்தது. இந்தியர்களின் இந்தச் செயலை தடுப்பதற்கு லண்டன் நிர்வாகம் முடிவெடுத்துள்ளது. லண்டனில் இந்தியர்கள் அதிகம் வசிக்கும் பிரெண்ட் நகராட்சி பொது இடங்களில் பான்பராக் எச்சிலை துப்புவோருக்கு எதிராக அதிரடி நடவடிக்கையை உடன் அமுல்படுத்திவிட்டது.

பிரெண்ட் நகராட்சிக்கு உள்பட்ட வெம்ப்லே பகுதியில் எங்கு பார்த்தாலும் பான்பராக் கறையாக உள்ளது. இது பார்ப்பதற்கே அருவருப்பாகவுள்ளது. இந்த நிலை தொடர்ந்தால் நகரின் அழகு கெட்டுவிடும். பின்னர் பிரெண்ட் நகராட்சி என்றாலே சுகாதாரமற்றது என்ற எண்ணம் சுற்றுலாப் பயணிகள் மத்தியில் ஏற்பட்டுவிடும்

எனவே அப்படியொரு நிலை ஏற்படுவதை விரும்பவில்லை. இனிமேல் பொது இடங்களில் யார் எச்சிலை துப்பினாலும் கிரிமினல் குற்றமாகக் கருதப்படும். அவர்களுக்கு ரூ.6 ஆயிரம் அபராதமும் விதிக்கப்படும் என்று அந்நகர கவுன்சிலர் கவின் ஸ்நெடான் தெரிவித்தார். (2-6)

# மீளக்குடியமர்த்தும் பணிகளில் எவ்வித தாமதமும் கிடையாது

## கிளிநொச்சி மாவட்ட அரசாங்க அதிபர் தெரிவிப்பு

(கொழும்பு)

இடம்பெயர்ந்த மக்களை மீளக் குடியமர்த்துவதற்கான பணிகளில் எந்த விதமான தாமதமும் கிடையாதென்றும் மீள்குடியேற்றம் துரிதப்படுத்தப்பட்டுள்ளதாகவும் கிளிநொச்சி மாவட்ட அரசாங்க அதிபர் திருமதி ஆர். கேதீஸ்வரன் தெரிவித்தார்.

கிளிநொச்சிமாவட்டத்தில் எதிர்வரும் 29ஆம் திகதிக்குள் மேலும் 1500 குடும்பங்களை மீளக் குடியமர்த்த நடவடிக்கை எடுக் கப்பட்டுள்ளது. இதற்கமைய தேர்தலுக்குப் பின்னர் மீண்டும் பணிகள் துரிதமாக மேற்கொள்ளப்படும்.

கடந்த நவம்பர் மாதத்திலிருந்து இதுவரை கிளிநொச்சி மாவட்டத்தின் நான்கு பிரதேச செயலாளர் பிரிவுகளிலும் 11ஆயிரத்து 817 குடும்பங்கள் மீளக் குடியமர்த்தப்பட்டுள்ளன. பூநகரி பிரதேச செயலாளர் பிரி வில் மீள் குடியேற்றப் பணிகள் நிறைவு செய்யப்பட்டுள்ளன. கண்ணி வெடிகள் துரிதமாக அகற்றப்பட்டு தொடர்ச்சியாக மக்கள் மீளக்குடியமர்த்தப்பட்டு வருகின்றார் என்றார்.

இடம்பெயர்ந்து மீள் குடியேற மேலும் காத்திருக்கும் மக்கள் எதிர்வரும் ஏப்ரலில் நடைபெறவுள்ள பாராளுமன்ற பொதுத்தேர்தலில் வாக்களிக்க விண்ணப்பித்துள்ளார்கள் அதனால் அவர்கள் தங்கியிருக்கும் நலன்புரி நிலையங்களில் வாக்களிப்பதற்கு விசேட ஏற்பாடுகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன. அவ்வாறானவர்களை சொந்த இடங்களுக்குக் கொண்டு சென்றால் வாக்களிப்பதில் சிக்கலை எதிர்கொள் ளலாம்.

ஆகவே எதிர்வரும் 29ஆம் திகதியுடன் மீள் குடியேற்றத்தை இடைநிறுத்த எண்ணியுள்ளதாகவும் பொதுத் தேர்தலுக்கப் பின்னர் மீள் குடியேற்றப்பணிகள் துரிதப்படுத்தப்படுமென்றும் அரச அதிபர் மேலும் கூறினார்.(2-6)

# அடுத்த சில மாதங்களில் வடகிழக்கில் 4 வர்த்தக வலயங்கள்

(கொழும்பு)

வடக்கு -கிழக்கு மாகாணங்களில் 4 வர்த்தக வலயங்களை அடுத்த சில மாதங்களில் நிறுவவுள்ளதாக கைத்தொழில் அபிவிருத்தி அமைச்சின் மேலதிக செயலாளர் டபிள்யூ. டி.ஜயசிங்க தெரிவித்துள்ளார்.

இதற்கமைய திருகோணமலையில் 50 ஏக்கர் நிலப்பரப்பில் 30 தொழிற்சாலை அமைக்கப்படுமென்றும் மட்டக்களப்பில் 25 ஏக்கர் காணியில் 15 கைத்தொழிற்சாலைகள் அமைக்கப்படவுள்ளதாகவும் அமைச்சின் மேலதிக செயலாளர் டிபிள்யூ.டி.ஜய சிங்க தெரிவித்துள்ளார்.

மேலும் மன்னாரிலும் ஒரு வர்த்தக வலயத்தை நிறுவுவதற்காக வழிகாட்டல்கள் மற்றும் தகவல்கள் வழங்கப்படவுள்ளன.

இதேவேளை யாழ்ப்பாணம் அச்சுவேலிப் பிரதேசத்தில் வர்த்தக வலயம் அமைப்ப தற்குப் பொருத்தமான இடம் தெரிவு செய்யப் படவுள்ளதாகவும் தெரிவித்துள்ளார்.

இதைத் தவிர வட கிழக்கு பிராந்திய சிறு கைத்தொழிலாளர்களுக்கு உதவி வழங்கும் திட்டங்களையும் கைத்தொழில் அபிவிருத்தி அமைச்சு ஆரம்பித்துள்ளது என்றும் இவற்றுக்கான நிதி ஒதுக் கீடுகளை ஐக்கிய நாடுகள் சபை வழங்கவுள்ளதாகவும் மேலும் கூறியுள்ளார்.

(2-6)

# தேர்தல் வன்முறைகளை பொலிஸாருக்கு தெரியப்படுத்தவும் -பொலிஸ்மா அதிபர்

(கொழும்பு)

தேர்தல் வன்முறைகள் தொடர்பான தகவல்களை பொலிஸ் நிலையங்களுக்குப் பெற்றுக்கொடுக்க பொதுமக்கள் தயங்க வேண்டாமெனவும் தேர்தல் காலத்தை முன்னிட்டு நாட்டின் அனைத்து பொலிஸ் நிலையங்களும் உஷார் நிலையில் வைக்கப்பட்டிருப்பதாகவும் தேர்தலுக்குப் பொறுப்பான பிரதி பொலிஸ் மா அதிபர் காமினி நவரட்ண அறிவித்துள்ளார்.

வன்முறைச் சம்பவங்களில் ஈடுபடுவோருக்கு எதிராக கடுமையான சட்ட நடவடிக்கை எடுக்க பொலிஸ் திணைக்களம் தீர்மானித்துள்ளது என்றும் தேர்தல் வன்முறையில் ஈடுபடுவோர் ,ஈடுபட முயற்சிப்போர், ஒத்துழைப்பு வழங்குவோர் உள்ளிட்ட அனைவரும் கட்சி பேதம், பாரபட்சம் எதுவுமின்றி கைது செய்யப்பட்டு சட்டத்தின் முன் நிறுத்தப்படுவரென பிரதி பொலிஸ்மா அதிபர் காமினி நவரட்ண தெரிவித்தார். (2-6)

# இலங்கையின் கடன் தரப்படுத்துதலை கீழிறக்கியுள்ளது பிற்ச் அமைப்பு

(கொழும்பு)

முதலீடுகளை மேற்கொள்வதற்கு ஏற்ற நாடு அல்ல என்ற தரத்திற்கு இலங்கையை பிற்ச் அமைப்பு தரப்படுத்தியுள்ளதாக தெரிவிக்கப்படுகின்றது.

இது தொடர்பீல் மேலும் தெரியவருவதாவது,

வரவு செலவுத்திட்டத்தில் துண்டுவிழும் தொகையை குறைப்பதற்கு இலங்கை அரசு தவறியதை தொடர்ந்து அனைத்துலக நாணயநிதியம் அதன் 2.6. பில்லியன் டொலர் கடன் உதவியை நிறுத்தியுள்ளது. இதனை தொடர்ந்து இலங்கையின் கடன் தரப்படுத்துதலை பிற்ச் அமைப்பு தரமிறக்கியுள்ளது.

போருக்கு பின்னரான அபிவிருத்திகளில் இருந்து பின்தங்கியுள்ளதாக சிங்கப்பூரை தளமாக கொண்ட பிற்ச் அமைப்பின் ஆசிய பிராந்திய பணிப்பாளர் விஜாம் அலிலிங் தெரிவித்துள்ளார்.

அபிவிருத்தி நடவடிக்கைகள் மற்றும் கடன் சுமைகள் போன்ற காரணிகளால் இலங்கையை தரமிறக்கும் நிலைக்கு தாம் தள்ளப்பட்டுள்ளதாகவும் அது சில நிபந்தனைகளை நிறைவேற்றாதுவிட்டால் அனைத்துலக நாணய நிதியத்தின் கடனையும் இழக்க நேரிடலாம் என அவர் தெரிவித்துள்ளார்.

மேலும் நாட்டின் இறைமையை பணயம் வைத்து 500 மில்லியன் டொலர்களை கடனாக பெற இலங்கை திட்டமிட்டுள்ளது. கடந்த ஒக்டோபர் மாதம் பிற்ச் அமைப்பு மேற்கொண்ட இந்த தரப்படுத்தலில் இலங்கைகு எதிரான குறியீடு வழங்கப்பட்ட போதும் தற்போது அது அனுகூலமான (பிளஸ் )குறியீட்டை பெற்றுள்ளது.

எனினும் முதலீடுகளை மேற்கொள்ள ஏற்ற நாடு அல்ல என்ற நிலையில் அது நான்காவது உயர்ந்த நிலையில் உள்ளதாக தெரிவிக்கப்படுகின்றது. (இ-6)


## மாபெரும் பொதுக்கூட்டம்



காலம் :- 26.03.2010 ஆம் திகதி
வெள்ளிக்கிழமை காலை 10.00 மணி
இடம்:- சாவல்கட்டு கடல் தொழிலாளர் கூட்டுறவு சங்க முன்றல்

கௌரவ சமூக சேவைகள் அமைச்சர்
திரு. கே.என். டக்ளஸ் தேவானந்தா அவர்களை
சேவைநலன் பாராட்டி கௌரவிக்கும் விழாவும்
மாபெரும் பொதுக்கூட்டமும்

திரு. பசுபதி சீவரட்ணம் (ஜீவா), E.P.D.P. தேசிய அமைப்பாளர்
திரு. சந்திரகுமார் முருகேசு
ஆகியோரும் கலந்து சிறப்பிக்கவுள்ளனர்.

அனைத்து கடல் தொழிலாளர்களையும் தவறாது சமூகம் தரும்படி கேட்டுக் கொள்கிறோம்.

குறிப்பு:- மகாத்மா சனசமூக நிலையத்திலிருந்து சாவல்கட்டு கடல் தொழிலாளர் கூட்டுறவுச் சங்கத்திற்கு கௌரவ அமைச்சர் அவர்கள் மேளவாத்தியங்கள் சகிதம் ஊர்வலமாக அழைத்துச் செல்லப்படுவார்.

அனுசரணை:-

- சாவல்கட்டு கடல் தொழிலாளர் கூட்டுறவுச் சங்கம்
- மகாத்மா சனசமூக நிலையம்
- சாவல்கட்டு அனைத்து ஆலய பரிபாலன சபையினர்
- வெரிட்சோன் அன்ரன் ஜோன்சன் (ஜீவா) ( E.P.D.P. பொறுப்பாளர், மானிப்பாய்)

விளம்பர அனுசரணை:-

- முருக மூர்த்தி விநாயகர் தேவஸ்தானம், சாவல்கட்டு
- YSS பிளாஸ்ரிக் & மரவள்ள தொழிற்சாலை

(946)



## தமிழ்த் தேசியத்திற்கான மக்கள் முன்னணி
(அகில இலங்கை தமிழ் காங்கிரஸ்)

தபால் மூல வாக்களிப்பு

அன்புள்ள வாக்காளப் பெருமக்களே!
தமிழ் மக்களின் அரசியல் அபிலாசைகளை வலியுறுத்தி
தொடர்ந்தும் உரக்கக் குரல்கொடுக்க
தமிழ்த் தேசியத்திற்கான மக்கள் முன்னணியின்
இளம் வேட்பாளரும் நம்
யாழ்.பல்கலைக்கழக சட்ட மாணவனுமான
விஸ்வலிங்கம் மணிவண்ணன்
வெற்றிபெற வாக்களிப்போம்.

யாழ்.பல்கலைக்கழக மாணவர்கள்

விஸ்வலிங்கம் மணிவண்ணன்
(யாழ்.பல்கலைக்கழக சட்ட மாணவன்)

X

8

இளமை-துடிப்பு
நேர்மை-விவேகம்



(சி/4824)

வாழ்க்கையில் ஏதாவது அதிசயம் நிகழ்த்த வேண்டும் என்று நினைத்தேன். அது இவ்வளவு சீக்கிரம் நடந்து விட்டது. —அம்பானி டாரிகே

வலம்புரி
T.P. 021 567 1530
Web: www.valampurii.com
e-mail: editor@valampurii.com

## பட்டாபிஷேகத்து அயோத்திபோல மீண்டும் யாழ்.பல்கலைக்கழகம்

தமிழ் மக்களின் ஒரே சொத்து கல்வி. இந்த உண்மையைத் தமிழ் மக்கள் நன்குணர்ந்துள்ளனர்.

இலங்கைத் திருநாட்டின் வரலாற்றில் தமிழ் அறிஞர்கள், புத்திஜீவிகள் ஆற்றிய பணியையும் பங்கையும் இந்த மண் மறந்து விட முடியாது.

ஒரு காலத்தில் இந்த நாட்டில் உச்சமான நிர்வாகப்பரப்பெங்கிலும் தமிழர்களே கோலோச்சினர்.

தமிழர்களை விட்டால் நிர்வாகம் செய்ய முடியாதென்னும் நிலைமையில் அவர்களின் கல்விப் புலமும், அறிவியல் விரிபரப்பும் அமைந்திருந்தன என்ற உண்மை நினைவுபடுத்தற்குரியது.

இருந்தும் என்ன செய்வது? நீண்ட கால யுத்தம், அதன் விளைவாக ஏற்பட்ட உயிரிழப்புக்கள், இடப்பெயர்வுகள், சொத்தழிவுகள் எங்கள் இனத்தைப் பிழிந்து சக்கையாக்கின.

இதற்கு மேலாக தமிழனத்தின் மூளைசாலிகளை வெளியேற்றும் பணியையும் யுத்த தாண்டவம் தீவிரமாக்கியது.

இதனால் எங்கள் இனம், எங்கள் மண் தொடர்ந்தும் வேதனையை அனுபவிக்கும் பரிதாபத்திற்கு ஆளாகியது.

இருந்தும் தமிழ் மக்கள் செய்த புண்ணியத்தின் பயனாக யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம் எங்கள் கல்வியின் கருவூலமாக நிமிர்ந்து நின்று தன் பணியைச் செய்து வருகின்றது.

குடாநாட்டில் நடந்த போர் அனர்த்தத்தில் யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம் அனுபவித்த இட்டல், இடைஞ்சல்கள் ஏராளம்.

அந்த இன்னல்களையும் தாங்கி, யாழ். பல்கலைக்கழகம் இயங்குவதனால் தமிழ் மக்களின் இருப்பும், கல்விச் சொத்தும் சேதமின்றி காப்பாற்றப்பட்டதெனலாம்.

ஒருபுறம் குண்டுத் தாக்குதல். மறுபுறம் தமது குடும்பங்களின் இடப்பெயர்வு என்ற துன்பச் சூழமைவிலும் யாழ்ப்பாணத்தின் கல்விக் கலங்கரையாக விளங்கும் யாழ்ப்பாணப் பல்கலைகழகத்தைக் கட்டிக் காத்த அத்தனை உத்தமர்களும் பாராட்டுக்கும், கௌரவத்திற்கும் உரியவர்கள்.

யுத்தத்தின் உக்கிரத்தில் பட்டமளிப்பு விழாவைக் கடந்த சில வருடங்களாக இழந்து போனதன் காரணமாக எங்களிடம் ஏற்பட்ட ஒரு வகையான மனக்கிலேசம் இன்று நடைபெறும் பட்டமளிப்பில் கலைந்து போவது கண்டு மகிழாமல் இருக்க முடியாது.

பட்டமளிப்பு விழாவை இழந்து மஹோற்சவம் இல்லாத ஆலயம்போல் காட்சியளித்த யாழ்ப்பாணப் பல்கலைகழகத்தில் இன்று நடைபெறும் பட்டமளிப்பு விழா இராமருக்குப் பட்டாபிஷேகம் நடந்தபோது அயோத்தி மாநகர் கொண்டிருந்த எழிலையும், இன்பத்தையும் ஒத்ததாகும்.

இடையறுந்த பட்டமளிப்பு விழாவை மீளவும் நடத்தி எங்கள் கல்விக்கு மகுடம் சூட்டும் யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தின் துணைவேந்தர் பேராசிரியர் என்.சண்முகலிங்கன் உள்ளிட்ட அத்தனை பேருக்கும் தமிழ்ச் சமூகம் தனது நன்றிகளையும் போற்றுதல்களையும் தெரிவித்து பட்டம் பெறுவோரை வாழ்த்தி மகிழ்கின்றது.

# ஈழத்துச் சித்தர் பரம்பரையில் யோகர் சுவாமிகள்



எமது மிக கிட்டிய காலத்தே வாழ்ந்து மறைந்த சித்த புருஷர்களில் யோகர்சுவாமி மிக மிக முதன்மையானவர். செல்லப்பா சுவாமியின் நேரடி ஒரே ஒரு சீடர் யோகர் ஆவார். இவர் தனது சீடர்களுக்கு நான்கு மகாவாக்கியங்களை உபதேசித்தார். அவையாவன,

ஒரு பொல்லாப்பும் இல்லை.
எப்போதோ முடிந்த காரியம்.
நாம் அறியோம்.
முழுவதும் உண்மை.

மாவிட்டபுரத்திலே சைவ வேளாள குலத்தே அம்பலவாணர், சின்னாச்சிக்கு மகனாக பிறந்தவரே யோகர் சுவாமி. 8 வயதில் தாயை இழந்தார். 8ஆம் வகுப்புவளரை ஆங்கிலம் கற்றார் .ஒரு நாள் சிவனொளி பாதமலைக்குச் சென்ற போது அங்கே தனது மனதை இயற்கையிடம் பறிகொடுத்ததனால் சுயமாக சிந்தித்து பேசத் தொடங்கினார். இரணைமடுவில் பண்டகசாலை பாதுகாவலராக உத்தியோகத்தில் இருந்தார். மாவிட்டபுரம், கீரிமலை என மாறி மாறி இருப்பார். நல்லூருக்கும் நடையிலேயே வருவார். அப்போது செல்லப்பாவின் கண்ணில் பட்டார். குருநாதரின் அனுபவத்தை யோகர் கூறும் போது.

''*கருத்தில் நினைந்துருகிக் கைகூப்புந்தொண்டர் வருத்த மெலாம் தீர்க்கும் வடிவேல்....*'' என்றார். சுவாமிக்கு மதத்தின் பேரால் சண்டையிடுவது பிடிக்காது.

அவர் இவை அனைத்துக்கும் அப்பாற்பட்டவர். சுவாமியின் உபதேசங்களை எல்லோருக்கும் பரப்ப வேண்டும் என இறைவன் விரும்பியதற்கு இணங்க 'சிவதொண்டன் என இருக்கட்டும் என்று கூறி 1935 ஆம் ஆண்டு மார்கழி 1ஆவது இதழ் வெளிவந்தது. இவர் பலவிதமான சித்திகள் உடையவராக காணப்பட்டார். திருமுறைகள் ஒழுங்காக ஓதுதல், சித்தாந்த சாஸ்திர வகுப்புகளை நடாத்துதல், சைவ சமய பரிபாலனம் செய்தல் போன்றவற்றில் ஈடுபட்டார். மேலும் யாழில் நீதிபதியாக இருந்த அக்பர் என்பவர் நீதிமன்ற அலுவலைத் தொடங்குமுன் ஒவ்வொரு தடவையும் யோகர் சுவா மிகளிடம் சென்று ஆசீர் பெறுவார்.

யோகர் சுவாமிகள் யாழ்ப்


**இன்று யோகர்சுவாமிகளின் குருபூசை தினமாகும்**

பாண சைவ அன்பருக்கும் தமிழ் நாடு, மலேசியா, சிங்கப்பூர் வாழும் தமிழ் அன்பர்களுக்கு ஒளி விளக்காக இருந்து வந்தார். ''ஒழுக்கம் விழுப்பம் தரலால் ஒழுக்கம் உயிரினும் ஓம்பப்படும்'' இதை அடியொற்றி யோகர் ''ஒழுக்கம் உயிரினும் சிறந்தது. ஒழுக்கமுடையார் எல்லா முடையார்'' என்றார். தவத்திலே மேம்பட்டவரைகூட இந்தி ரியங்கள் இழந்து செல்கின்றன. ஆதலால் அதைவெல்ல "சிவத்தியானம்" செய்க. அதனால் மட்டும் புலனை தன் வசப் படுத்தலாம். இதை ஒரு செய்யுளில்,

'ஒழுக்கம் விழுப்பந்தரும் தம்பிமாரே
ஓம் என்று சிந்தை செய்வீர் தம்பிமாரே.
அழுக்காறவா வெகுளி தம்பிமாரே
ஆன்மாவை பந்திக்கும் தம்பி மாரே
வழுக்கி விழுந்தாலும் தம்பி மாரே
மலரடியை சிந்தை செய்வீர் தம்பிமாரே' என்று கூறியுள்ளார்.

யோகர் சுவாமிகளது பழுத்த உள்ளத்தே இறைவன் குடிகொண்டு இருந்தார். அவர் *நமது உயிருக்குயிராய் இருப்பவர் கடவுளே ஆகையால் நாம் அவரின் உடமை* இவ்வாறு நாமும் சிவநாமத்தை உச்சரித்து வீண் பாவங்களைச் செய்யாது தவிர்த்து பஞ்சபுலன்களையும் ஒடுக்கி வாழ்ந்து வந்தால் முக்தி கிட்டும் என யோகர் சுவாமி எமக்குகாட்டிய நெறியாகும்.

*கு. கோபிராஜ்.*
*சண்டிலிப்பாய்.*



# அறிந்து கொள்ள வேண்டிய ஆன்மீகத் தகவல்கள்

## கோயிலில் கொடியேற்றுவது ஏன்?

திருவிழாவின் போது கோயிலில் கொடியேற்றுவதற்கு முப்பத்து முக்கோடி தேவர்கள் , கின்னரர்கள் , கிம்புருடர்கள் ஆகியோரை சுலோகம் சொல்லி வரழைப்பார்கள். கொடியேற்றும்போது தரிசனம் செய்து கொண்டால் எல்லா தேவர்களாலும் அருள் பெற்று நினைத்த காரியங்கள் வெற்றியாகவே நடைபெறும்.

கொடி ஏற்றிய பின் ஆலயத்தைச் சுற்றி எட்டுத்திசைகளிலும் உள்ள திக்பாலகர்களுக்கு காலை , மாலை இரண்டு வேளையும் அஸ்திர தேவரை பல்லக்கில் வைத்து சுற்றி வரும்போது ஒவ்வொரு திக்பாலகருக்கும் அவரவர்களுக்குள்ள மந்திரங்களாலும், திருத்தங்களாலும், இராகங்களாலும், தாளங்களாலும் சந்தோசமடையச் செய்வார்கள்.

இதனால் நாட்டில் விஷக்காய்ச்சல் ,வாந்திபேதி , அம்மை போன்ற கொடிய நோய்கள் உண்டாகாமல் இருப்பதற்கும் உற்சவகாலங்களில் துர்தேவதைகளால் இடையூறு இல்லாமல் உற்சவம் சிறப்பாக நடைபெற திக்பாலகர்கள் அருளும் கிடைக்கும்.

# வெள்ளி நற்சிந்தனை பக்தியின் மொழி தமிழ் 116

தோழமை என்பது எல்லோருக்கும் இன்றியமையாதது. இன்பத்தையும் துன்பத்தையும் பகிர்ந்து கொள்வதற்கும் ஒரு தோழமை தேவை. ஒத்தவயதுடையவர் தோழமையுடன் பழகுவது இயல்பாகும். ஆனால் சுந்தரமூர்த்தி நாயனார் இறைவனோடு தோழமை பூண்டு பாடல்கள் பாடியதைப் பார்க்கும் போது சற்று வேறுபட்ட நிலையாக இருப்பதை உணரலாம். பாடல்களில் சுந்தரருடைய மனநிலை இறைவனோடு மிக நெருக்கமான தோழமையுடன் இருந்ததை உணர்த்துகிறது.

இறைவனும் அடியாரும் இப்படி இருக்க முடியுமா என்ற ஐயம் தோன்றும் வகையில் சுந்தரர் பாடியுள்ளார். இறைவன் தோற்றத்தையும் அருட்குணங்களையும் பற்றிக் கேள்விகள் கேட்பதாகப் பாடல்கள் பாடப்பட்டுள்ளன. மண்டையோடு கொண்டு ஊரெல்லாந்திரிந்து என்ன செய்கிறீர்? நீரொரு பித்தரோ? என்று துணிந்து கேள்விகளைக் கேட்கிறார். அவரது பாடல் உரையாடல் அமைப்பில் இறைவனோடு அச்சம் கூச்சம் இன்றி உரையாடுவது போலுள்ளது. அவருடைய கேள்விகளுள் எல்லாம் உச்சமான கேள்வியாகச் செந்தமிழ்த் திறம் வல்லிரோ? என்னும் கேள்வி அமைந்துள்ளது. உலகத்திலுள்ள எல்லாவற்றையும் படைத்துக்காக்கும் பரம்பொருளின் செந்தமிழறிவைப்பற்றி ஐயம் கொண்டவராகச் சுந்தரர் காணப்படுகிறார்.

கையிலே பாம்பைத் தாங்கியிருப்பதால் பலிதரமாட்டோம் என இறைவனுக்குச் சுந்தரர் கூறுவது தோழமையுணர்வு காரணமாகவேயாகும். பல கேள்விகளைக் கேட்டபோதும் இறைவன் திருத்தலச் சிறப்பைப் பாடுவதற்குச் சுந்தரர் மறக்கவில்லை. இளமைப் பருவத்தராக இருந்தமையால் இயற்கைக் காட்சிகளையும் ரசிப்பதில் ஆர்வமுடையவராகச் சுந்தரர் விளங்குகிறார். அதனால் சம்பந்தரைப் போலவே கோயிற் சூழலைப் பாடல்களில் பதிவு செய்துள்ளார். குளிர்மையான பசுமையான சோலைகளடர்ந்த திருப்பைஞ்சீலி என்னும் திருத்தலம் பற்றிப்பாடும் போது இயற்கையழகிலே ஆழ்ந்துப் போய்ப்பாடுகிறார். அங்குள்ள சோலைகளிலே கந்தம் நாறுவதாகக் குறிப்பிட்டுள்ளார். அழகிய தோற்றமுடைய சுந்தரருக்கு நறுமணத்திரவியங்களிலும் அதீத விருப்பம் இருந்தது. இறைவனிடம் ஒரு சமயம் "கந்தமுதல் ஆடையாபரணம் பண்டாரத்தே எனக்குப் பணித்தருளவேண்டும்" எனவும் விண்ணப்பம் செய்துள்ளார்.

அடுத்து இறைவனுடைய மேனியழகிலே வசப்பட்டு ஒரு கேள்வி கேட்கிறார். "அந்தி வானமுமேனியோ சொலும் ஆரணிய விடங்கரே" என்னும் அடி இதனை நன்கு உணர்த்து

**கலாநிதி மனோன்மணி சண்முகதாஸ்**

கின்றது. சிவனின் திருமேனியழகில் வசப்பட்டு நின்றோர் பலர். ஒவ்வொருவரும் தமது கற்பனை ஆற்றலுக்கு ஏற்ற வகையில் மேனியை உவமித்துப்பாடியுள்ளனர். அப்பர் "பவளம் போல் மேனி" என்று குறிப்பிட்டுள்ளார். மணிவாசகர் "செந்தாமரைக் காடனையமேனி" எனப் பாடியுள்ளார். காரைக்காலம்மையர் "காலையே போன்றிலங்கும் மேனி" எனப் பரவசப்பட்டுப் பாடியுள்ளார். எனவே இறைவனின் மேனியழகு எல்லோரையும் கவர்வது மட்டுமன்றி அவரவர் ரசனைக்கேற்ப மாறுபட்ட வண்ணமாக இருப்பதையும் உணர முடிகிறது. சுந்தரருடைய இப்பாடல் இறைவன் கோலத்தின் வண்ணத்தையும் வடிவையும் எம்கண்முன்னே கொணர்ந்து நிறுத்துகிறது.

"செந்தமிழ்த்திறம் வல்லிரோ செங்கண் அரவம் உன்
கையிலாடவே
வந்து நிற்கும் இதன் கொலோ பலி மாற்ற மாட்டோ
மிடகிலோம்
பைந்தண் மாமலர் உந்து சோலைகள் கந்தநாறு பைஞ்
ஞலியீர்
அந்தி வானமும் மேனியோ சொலும் ஆரணிய விடங்கரே"

# இந்தியா வருமாறு இராமதாஸ் விடுத்த அழைப்பை கூட்டமைப்பு தலைமை நிராகரித்தது ஏன்?

## சித்தங்கேணி கூட்டத்தில் சிவாஜிலிங்கம் கேள்வி



நடந்து முடிந்த போரில் விடுதலைப் புலிகள் தொடர்ந்து பின்னடைவுகளை சந்தித்துக் கொண்டிருந்த போது கூட்டமைப்பின் தலைவர்கள் இந்திய அரசாங்கத்தின் நிகழ்ச்சி நிரலுக்குள் சிக்கி அதற்கு அமைவாக செயற்பட ஆரம்பித்தனர். இதன் விளைவே இப்பொழுது தமிழ்த் தேசிய கூட்டமைப்பு பிளவுபடுவதற்கு காரணமாகும்.

இவ்வாறு சித்தங்கேணியில் நடைபெற்ற தமிழ்த் தேசிய விடுதலைக் கூட்டமைப்பின் தேர்தல் பிரசாரக் கூட்டத்தில் உரையாற்றிய அதன் செயலாளர் நாயகமும் வேட்பாளருமாகிய எம்.கே. சிவாஜிலிங்கம் தெரிவித்தார்.

எஸ்.குகதாஸ் தலைமையில் நடைபெற்ற இக்கூட்டத்தில் தொடர்ந்து பேசுகையில் சிவாஜிலிங்கம் தெரிவித்தாவது,

2008 கார்த்திகை மாதத்தில் யாழ்ப்பாணத்தில் நிசா புயல் அடித்த நேரத்தில் தமிழ் நாட்டில் அரசியல் புயல் அடித்துக் கொண்டிருந்தது. ஈழத் தமிழருக்கு ஆதரவாக முழுத்தமிழ் நாடும் எழுந்து குரல் கொடுத்து நின்றது. அப்போது இந்தியாவுக்கு வருமாறு தமிழ்த் தேசிய கூட்டமைப்பின் இருப்பதிரெண்டு எம்பிக்களுக்கும் பாட்டாளி மக்கள் கட்சித் தலைவர் டாக்டர் ராமதாஸ் அழைப்பு விடுத்தார்.

கூட்டமைப்பு எம்.பிக்கள் சென்னைக்கு வந்தால் அனைவரையும் புதுடெல்லிக்கு விமானம் மூலம் அழைத்துச் சென்று தங்க வைத்து இந்திய பிரதமர் மன்மோகன் சிங், காங்கிரஸ் கட்சித் தலைவி சோனியா காந்தி மற்றும் பல்வேறு எதிர்க் கட்சிகளின் தலைவர்களோடு சந்திப்புக்கு ஏற்பாடு செய்வதாக அவர் தெரிவித்தார்.

இந்த சந்திப்புக்களின் ஊடாக ஈழத்தமிழர் பிரச்சினையில் இந்தியாவில் ஓர் பொதுவான தேசியக் கொள்கையை ஏற்படுத்தி இலங்கையில் யுத்த நிறுத்தம் ஒன்றைக் கொண்டு வர முடியும் என்றும் அவர் கூறினார்.

யுத்த நிறுத்தத்தை தொடர்ந்து அரசியல் பேச்சுவார்த்தைகளை ஆரம்பிக்க முடியும் என்றும் அவர் கருதினார்.

ஆனால் கூட்டமைப்பின் தலைவர் சம்பந்தனுக்கு டாக்டர் இராமதாஸ் நேரடியாக மின்னஞ்சல் மூலம் விடுத்த அந்த அழைப்பு நிராகரிக்கப்பட்டது. மரியாதைக்கு கூட பதில் அனுப்பப்படவில்லை.

இந்திய அரசாங்கத்தை எந்த விதத்திலும் சங்கடப்படுத்த கூட்டமைப்பு தலைமை விரும்பாததே இதற்கு காரணமாகும்.

ஆனால் அதே பிரமுகர்கள் அடுத்த வருடம் 2009 இல் சித்திரை மாதத்தில் போரின் இறுதிக் கட்டத்தில் இந்திய அரசாங்கத்தின் அழைப்பை ஏற்று புதுடெல்லி போனார்கள். வெளியுறவுச் செயலாளர் சிவசங்கர் மேனன், பாதுகாப்பு ஆலோசகர் நாராயணன் ஆகியோருடன் பேசினார்கள்.

பெரும்பான்மையான கூட்டமைப்பு பாராளுமன்ற உறுப்பினர்களின் முடிவுக்கு மாறாகவே இந்தப் பேச்சுவார்த்தை நடந்தது. யுத்த நிறுத்தத்தை இந்தியா கொண்டு வந்தால் மாத்திரமே இந்திய அரசாங்கத்துடன் பேச்சுவார்த்தை என்ற நிலைப்பாட்டை புறக்கணித்து கூட்டமைப்புத் தலைமை நடந்து கொண்டது. இந்திய அரசாங்கத்தைதிருப்திப் படுத்தவே இந்த நடவடிக்கை எடுக்கப்பட்டது.

எமது மக்களின் உயிர்கள் சம்பந்தப்பட்ட பிரச்சினையில் இந்திய அரசாங்கத்தின் நலன்களுக்கே கூட்டமைப்பு தலைமை முன்னுரிமை கொடுத்தது.

இப்பொழுதுங்கூட இந்திய அரசாங்கத்தின் கருத்துக்களுக்கு அமைவாகவே கூட்டமைப்பின் வேட்பாளர் பட்டியல் தயாரிக்கப்பட்டுள்ளது.

தேர்தலுக்கு பின்னர் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷவும் இந்திய அரசாங்கமும் இணைந்து ஓர் தீர்வுத்திட்டத்தை முன்வைக்கப் போகின்றார்கள். தமிழ் மக்களின் நீண்ட கால அரசியல் அபிலாசைகளுக்கு இதில்இடமிருக்கப் போவதில்லை இந்த நிலையில் இந்த தீர்வுத் திட்டத்தை ஏற்க கூடியவர்களே கூட்டமைப்பினால் வேட்பாளர்களாக நிறுத்தப்பட்டுள்ளனர். பிரச்சினை தரக் கூடியவர்கள் அடையாளம் காணப்பட்டு ஒதுக்கப்பட்டுள்ளனர். கூட்டமைப்பு பிளவுபட்டதுக்கு இந்த நிலைமை தான் காரணமாகும்.

இதற்கான பொறுப்பை கூட்டமைப்பின் தலைவர்களாக- சர்வாதிகாரமான முறையில் செயற்பட்டு வரும் சம்பந்தன், சுரேஸ் பிரேமச்சந்திரன், சேனாதிராசா குழுவினரே ஏற்றுக் கொண்டதாக வேண்டும் என்றார்.

இக்கூட்டத்தில் தமிழ்த் தேசிய விடுதலைக் கூட்டமைப்பின் தலைவர் ந.சிறீகாந்தா மற்றும் வேட்பாளர்கள் ஏ.எஸ். செல்வநேசன், அ.தவநாதன், சட்டத் தரணி கனக. நமநாதன், த.யூலிதயான் ஆகியோரும் உரையாற்றினார். (ந)

# தமிழ் மக்களின் துன்பதுயரங்கள் தீர்வதற்கு ஆட்சி மாற்றம் என்பது அவசியமாகும்

## ஐ.தே.க. வேட்பாளர் எஸ்.ஸ்ரீகஜன் உரை



யுத்தத்தின் போதும் யுத்தத்தின் பின்னரும் தமிழ் மக்கள் சொல்லொணா துயரங்களை அனுபவித்து வருகின்றனர். தமிழ் மக்களின் துன்ப துயரங்கள் நீங்க வேண்டுமானால் ஆட்சி மாற்றம் அவசியமாகும். ஐக்கிய தேசியகட்சியில் மகேஸ்வரன் அணியில் போட்டியிடும் எமக்கு குடாநாட்டு மக்கள் ஆணை வழங்கினால் தென் பகுதியில் ஆட்சி மாற்றம் ஏற்படுவது நிச்சயமாகும். இவ்வாறு ஐக்கிய தேசியக் கட்சியின் யாழ் .மாவட்ட வேட்ப்பாளரும் ஊடக வியலாளருமான எஸ். ஸ்ரீகஜன் தெரிவித்தார்.

நாவாலியில் இடம்பெற்ற பிரசாரக்கூட்டத்தில் உரையாற்றிய அவர் மேலும் கூறியதாவது,

அமரர் மகேஸ்வரன் குடாநாட்டு மக்களுக்கு அளப்பரிய சேவைகளை யாற்றியுள்ளார். தமிழ்மக்கள் கைது செய்யப்பட்ட போதும் கடத்தப்பட்டு காணாமல் போன போதும் அவர் குரல் கொடுத்தார். பாராளுமன்றத்தை போராட்டக் களமாக மாற்றி னார். அவசரகால சட்டத்தை எதிர்த்தார். ஐக்கிய தேசியக்கட்சியினூடாக பாராளுமன்றம் சென்ற போதும் அவர் சுயாதீனமாகவே செயற்பட்டார்.

யுத்தத்தின் போது தமிழ் மக்கள் கொல்லப்பட்டபோதும் படுகாயமடைந்த போதும் கடந்த பொதுத் தேர்தலின் மூலம்தெரிவு செய்யப்பட்ட தமிழ் பாராளுமன்ற உறுப்பினர்கள் எவரும் இந்த மக்களுக்காக குரல் கொடுக்கவில்லை. மகேஸ்வரன் மட்டும் அன்று உயிருடன் இருந்திருந்தால் போராடியிருப்பார். பாராளுமன்றத்தை போராட்டகளமாக மாற்றியிருப்பார். ஆனால் அவரின் உயிர் பறிக்கப்பட்டமையினால் தமிழ் மக்களுக்காக குரல் கொடுக்க எவரும் இருக்கவில்லை அவர் செய்த பணிகளை முன்னெடுத்துச் செல்வதற் காகவே திருமதி. விஜயகலா மகேஸ்வரன் இந்த முறை தேர்தலில் போட்டியிடுகின்றார்.

அவரை தேசிய பட்டியல் மூலம் பாராளுமன்றம் வருமாறு கட்சியின் தலைமை அழைத்திருந்த போதிலும் அதனை அவர் ஏற்றுக் கொள்ளவில்லை. சொந்த மக்கள் மத்தியில் சொந்த மண்ணில் போட்டியிட்டு வெற்றி பெற வேண்டும் என்றே அவர் எண்ணியிருந்தார். இதனால் அவர் தற்போது உங்கள் முன்னிலையில் வந்துள்ளார்.

மீள்குடியேற்றம் என்ற பெயரில் வன்னியிலிருந்து இடம் பெயர்ந்த மக்கள் நடுத்தெருவில் விடப்பட்டுள்ளனர். மீள்குடியேறிய மக்களுக்கு அடிப்படை வசதிகள் எதுவும் செய்து கொடுக்கப்படவில்லை யுத்தத்தின் போதும் பின்னரும் சரணடைந்த மற்றும் கைதான இளைஞர், யுவதிகள் புணர்வாழ்வு என்ற பெயரில் அடைக்கப்பட்டுள்ளனர். அகதி முகாம்களில் மக்கள் தொடர்ந்தும் கஷ்டப் படுகின்றனர்.

எனவே இந்தப் பிரச்சனைகளுக்கெல்லாம் தீர்வு ஏற்பட வேண்டுமாயின் ஆட்சி மாற்றம் என்பது அவசியமாகும். எனவே குடாநாட்டு மக்கள் சிந்தித்து வாக்களக்க வேண்டும். 2005 ஆம் ஆண்டு ஜனாதிபதித் தேர்தலில் விட்ட தவறினை குடாநாட்டு மக்கள் இந்த முறைவிடாது செயற்பட வேண்டும் என ஸ்ரீகஜன் கேட்டுக் கொண்டார். (ந)




பொதுத் தேர்தல்-2010

# உறுதியான, புனிதமான கூட்டமைப்பை மக்கள் முன்னே மீட்டுத்தருவோம்

## கலாநிதி கெனடி விஜயரட்ணம் உரை

**கடந்த ஞாயிற்றுக்கிழமை மாலுசந்தி மைக்கேல் விளையாட்டு மைதானத்தில் நடைபெற்ற தமிழ்த் தேசி யத்திற்கான மக்கள் முன்னணியின் தேர்தல் பிரசாரக் கூட்டத்தில் உரையாற்றிய அக்கட்சியின் வேட்பாளரான கலாநிதி கெனடி விஜய ரட்ணம் தெரிவித்த கருத்துக்கள்,**



நாம் இனத்தின் விடிவுக்காக இந்தியாவின் ஒத்துழைப்பை எதிர்பார்க்கிறோம். அதே போல் அவர்களுக்கு ஒத்துழைப்பு வழங்கவும் தயாராக இருக்கிறோம். ஆனால், கூட்டமைப்புத் தலைமைகள் சிலர் இந்திய நலன்களின் முழுநேர முகவர்களாக செயல்படுவதை அனுமதிக்க முடியாது. ஏனெனில் எம் மக்களின் தேசிய நலன்கள் முதன்மைப்படுத்தப்பட வேண்டும்.

இனிமேலும் நாம் எடுப்பார் கைப்பிள்ளைகளாக இருக்க முடியாது. கூட்டமைப்பை உருவாக்குவதில் முன்னின்று உழைத்தவன் என்ற வகையிலும் நாட்டுப் பற்றாளர் நடேசன், மாமனிதர் சிவராம் போன்றவர்களின் பணியைத் தொடர்பவன் என்ற வகையிலும் கூட்டமைப்புத் தலைமையின் கொள்கைப் பிரள்வை கைகட்டிப் பார்த்துக் கொண்டிருக்க முடியாது.

ஒற்றுமை என்பது தமிழ்த் தேசத்தின் ஆன்ம வேட்கையாகும். 2001 இல் கூட்டமைப்பு உருவாக்கத்தின் மூலம் நாம் அதற்கு ஓர் உருவம் கொடுத்தோம். 2010 இல் இன்னும் அதிக ஒற்றுமைக்கான தேவையுள்ளது இதை நாம் நன்கு அறிவோம்.

தறிகெட்ட தலைமைகளை அகற்றி மீண்டும் ஓர் உறுதியான, புனிதமான கூட்டமைப்பை சிந்தாமல் சிதறாமல், மக்கள் முன்னே மீட்டுத் தருவோம். தமிழ் அரசியலில் உள்ள சகல தரப்புக்களுடனும் கலந்து பேசி கொள்கைப் பிறளானவர்களை ஒன்றிணைத்து புதிய ஒற்றுமையை உருவாக்குவோம் இதை நிறைவேற்ற தமிழ் மக்கள் எமக்கு ஆணை வழங்க வேண்டும்.

# பெங்களூர் அணியை வீழ்த்தியது டில்லி அணி

ஜாதவ்வின் சிறப்பான ஆட்டத்தின் மூலம் டில்லி டேர் டேவில்ஸ் அணி 17 ஓட்டங்கள் வித்தியாசத்தில் பெங்களூர் றோயல் சலஞ்ஜர்ஸ் அணியை வீழ்த்தியது.

இந்தியாவில் நடைபெற்று வரும் இந்தியன் பிரிமியர் லீக் (ஐ.பி.எல்.) அமைப்பின் மூன்றாவது இருபது-20 கிரிக்கெட் தொடரில் நேற்று பெங்களூரில் நடைபெற்ற லீக் சுற்றின் 20ஆவது போட்டியில் காம்பீர் தலைமையிலான டில்லி டேர்டேவில்ஸ் அணியும் கும்ளே தலைமையிலான பெங்களூர் றோயல் சலஞ்ஜர்ஸ் அணியும் மோதின.

இப் போட்டியில் நாணயச்சுழற்சியில் வெற்றி பெற்ற பெங்களூர் றோயல் சலஞ் ஜர்ஸ் அணித்தலைவர் கும்ளே முதலில் களத்தடுப்பைத் தீர்மானித்தார்.

இதனடிப்படையில் முதலில் துடுப்பெடுத்தாடிய டில்லி டேர்வில்ஸ் அணி யாதவ், டி வில்லியர்ஸின் சிறப்பான ஆட்டத்தின் மூலம் 20 ஓவர்களில் 4 விக்கெட்டுக்களையிழந்து 183 ஓட்டங்களைக் குவித்தது.

இதில் யாதவ் ஆட்டமிழக்காமல் 29 பந்துகளில் (5 பவுண்டரிகள், 2 சிக்ஸர்கள் அடங்கலாக) 50 ஓட்டங்களையும் ஏ.பி.டி.வில்லியர்ஸ் 35 பந்துகளில் (3 பவுண்டரிகள் அடங்கலாக) 45 ஓட்டங்களையும் வோர்னர் 14 பந்துகளில் (3 பவுண்டரிகள், 2 சிக்ஸர்கள் அடங்கலாக) 33 ஓட்டங்களையும் எடுத்தனர்.

பந்துவீச்சில் ஸ்ரையன், விணேய்குமார் ஆகியோர் தலா ஒரு விக்கெட்டை வீழ்த்தினர். பதிலுக்கு 20 ஓவர்களில் 184 ஓட்டங்களை எடுத்தால் வெற்றி என்ற இலக்குடன் துடுப்பெடுத்தாடிய பெங்களூர் றோயல் சலஞ்ஜர்ஸ் அணி 20 ஓவர்கள் நிறைவில் 9 விக்கெட்டுக்களையுமிழந்து 166 ஓட்டங்களை மாத்திரமெடுத்து 17 ஓட்டங்கள் வித்தியாசத்தில் தோல்வியடைந்தது.

இதில் பாண்டி 29 பந்துகளில் (4 பவுண்டரிகள், ஒரு சிக்ஸர்கள் அடங்கலாக) 39 ஓட்டங்களையும் விராட் ஹோலி 23 பந்துகளில் (4 பவுண்டரிகள், ஒரு சிக்ஸர் அடங்கலாக) 38 ஓட்டங்களையும் ஜக் கலிஸ் 27 ஓட்டங்களையும் எடுத்தனர். பந்துவீச்சில் அமித் மிஷ்ரா, மைக்டொனால்ட் ஆகியோர் தலா ஒரு விக்கெட்டையும் சாய்த்தனர்.

இப்போட்டியில் டில்லி டேர்டேவில்ஸ் அணியின் வெற்றிக்கு சகல துறையிலும் ஜொலித்த யாதவ் ஆட்டநாயகனாகத் தெரிவானார். இவ் வெற்றியின் மூலம் டில்லி டேர்டே வில்ஸ் அணி தான் விளையாடிய 6ஆவது போட்டியில் 3 ஆவது வெற்றியைப் பெற்று 6 புள்ளிகளை எடுத்துள்ளது. இதேவேளை பெங்களூர் றோயல் சலஞ் ஜர்ஸ் அணி தான் விளையாடிய 6ஆவது போட்டியில் 2 ஆவது தோல்வியைச் சந்தித்தது.

# சென்னை அதிர்ச்சி; மும்பை மகிழ்ச்சி

டெண்டுல்கர்-டவான் ஜோடியின் அதிரடியில் மும்பை இந்தியன்ஸ் அணி 5 விக்கெட் வித்தியாசத்தில் சென்னை சுப்பர் கிங்ஸ் அணியை வீழ்த்தியது.

இந்தியாவில் நடைபெற்று வரும் இந்தியன் பிரமியர் லீக் (ஐ.பி.எல்.) அமைப்பின் மூன்றாவது இருபது-20 கிரிக்கெட் தொடரில் நேற்று மும்பையில் நடைபெற்ற லீக் சுற்றின் 21ஆவது போட்டியில் தோனி தலைமையிலான சென்னை சுப்பர் கிங்ஸ் அணியும் டெண்டுல்கர் தலைமையிலான மும்பை இந்தியன்ஸ் அணியும் மோதின.

இப் போட்டியில் நாணயச்சுழற்சியில் வெற்றி பெற்ற மும்பை இந்தியன்ஸ் அணித் தலைவர் டெண்டுல்கர் முதலில் களத்தடுப்பை தீர்மானித்தார். இதனடிப்படையில் முதலில் துடுப்பெடுத்தாடிய சென்னை சுப்பர் கிங்ஸ் அணி ரெய்னா-பத்ரிநாத் ஜோடியின் அதிரடியில் 20 ஓவர்கள் நிறைவில் 2 விக்கெட்டுக்களையிழந்து 180 ஓட்டங்களை குவித்தது.

இதில் சுரேஸ் ரெய்னா 52 பந்துகளில் (7 பவுண்டரிகள், 3 சிக்ஸர்கள் அடங்கலாக) 83 ஓட்டங்களையும் சுப்பிரமணியம் பத்ரிநாத் 45 பந்துகளில் (6 பவுண்டரிகள் அடங்கலாக) 55 ஓட்டங்களையும் ஆட்டமிழக்காமல் குவித்து 3 ஆவது விக்கெட்டுக்காக 142 ஓட்டங்களை இணைப்பாட்டமாக எடுத்தனர். பந்துவீச்சில் மைக்லரன், ஹர்பஜன் சிங் ஆகியோர் தலா ஒரு விக்கெட்டை சாய்த்தனர். பதிலுக்கு 20 ஓவர்களில் 181 ஓட்டங்களை எடுத்தால் வெற்றி என்ற இலக்குடன் துடுப்பெடுத்தாடிய மும்பை இந்தியன்ஸ் அணி டவான்-டெண்டுல்கர் ஜோடியின் அதிரடியில் 19 ஓவர்களில் 5 விக்கெட்டுக்களையிழந்து 181 ஓட்டங்களை குவித்து 5 விக்கெட்டுக்கள் வித்தியாசத்தில் வெற்றிபெற்றது.

இதில் அணித்தலைவர் சச்சின் டெண்டுல்கர் 52 பந்துகளில் (8 பவுண்டரிகள், ஒரு சிக்ஸர் அடங்கலாக) 72 ஓட்டங்களையும் டவான் 34 பந்துகளில் (5 பவுண்டரிகள், 3 சிக்ஸர்கள் அடங்கலாக) 56 ஓட்டங்களையும் பொல்லார்ட் 20, பிரவோ ஆட்டமிழக்காமல் 11 ஓட்டங்களைக்குவித்தனர்.

பந்துவீச்சில் முத்தையா முரளிதரன் 2 விக்கெட்டுக்களையும் பாலாஜி, ஜோகிந்தர் சர்மா மற்றும் ஜகதி ஆகியோர் தலா ஒரு விக்கெட்டையும் சாய்த்தனர் இவ் வெற்றியின் மூலம் மும்பை இந்தியன்ஸ் அணி தான் விளையாடிய 5ஆவது போட்டியில் 4 ஆவது வெற்றியைப்பெற்று 8 புள்ளிகளுடன் முதலிடத்திலுள்ளது. இதேவேளை சென்னை சுப்பர்கிங்ஸ் அணி தான் விளையாடிய 6ஆவது போட்டியில் 4 ஆவது தோல்வியைச் சந்தித்தது.

# திலீபனின் நினைவுத் தூபி இடிப்பு பண்பாட்டுப் படுகொலைக்கு ஒப்பானது

## த.தே.கூட்டமைப்பின் வேட்பாளர் ஐங்கரநேசன் ஆதங்கம்

நல்லூரில் பருத்தித்துறை வீதியில் அமைந்துள்ள தியாகி திலீபனின் நினைவுத் தூபி நேற்று முன்தினம் நள்ளிரவு வேளையில் இனந்தெரியாத நபர்கள் சிலரால் இடித்து நிர்மூலமாக்கப்பட்டுள்ளது.

தற்போது பொதுத்தேர்தல் நெருங்கிக் கொண்டு இருக்கும் சந்தர்ப்பத்தில் இந்தச் சம்பவத்தில் ஈடுபட்டவர்களின் அரசியல் நலன்களுக்குத் திலீபனின் சிலை பெருந் தடையாக அல்லது அச்சுறுத்தலாக விளங்கி இருக்கவேண்டும். இதனைத் தாங்க முடியாத சக்திகளே இந்தப் பண்பாட்டுக் கொலையில் ஈடுபட்டுள்ளார்கள். ஆனால் நினைவுத்தூபிகளை அழிப்பதன் மூலம் மக்கள் மனங்களில் இருந்து ஒருபோதும் நினைவுகளை அகற்றி விட முடியாது.

இவ்வாறு தமிழர் தேசிய கூட்டமைப்பின் வேட்பாளர் பொ.ஐங்கரநேசன் விடுத்த செய்திக் குறிப்பில் தெரிவித்துள்ளார். அதில் அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது,

திலீபனின் தூபி உடைப்புச் சம்பவத்தில் ஈடு பட்டவர்கள், திலீபன் போன்ற போராளிகளின் இலட்சியத்தையும் போராட்ட மார்க்கத்தையும் புரிந்து கொள்ள மறுப்பவர்கள் ஆவர்.

இவர்கள் திலீபன் போன்றவர்களுக்கும் சமூகத்தில் இடம் உண்டு என்பதை ஏற்கத் துணிச்சல் அற்ற பேர்வழிகள் ஆவர்.

இத் தகைய சக்திகளின் அதிகார ஆதிக்கம் அரசியல் கலா சாரமாகவே பரிணாமம் பெற்றுவிட்டது.

போர்க்காலங்களில் கூட வாரலாற்றுச் சிறப்பு மிக்க அமைவிடங்கள், சின்னங்கள், கோயில்கள், பாடசாலைகள் மற்றும் வைத்தியசாலைகள் யாவும் பாதுகாக்கப்படவேண்டும் என்ற நாகரிக மரபு உண்டு.

இதுவரையான உலக அனுபவம் இதைத்தான் வெளிப்படுத்துகின்றது.

இலங்கையில் எல்லாளனுக்கும் துட்டகை முனுவுக்கும் இடையிலான மோதலில்கூட எல்லாளன் இறந்த போது துட்டகைமுனு எல்லாள னுக்கு உரிய மரியாதை கொடுத்து உடலை அடக்கம் செய்ததாகவே எமக்கு வர லாறுகற்பிக்கின்றது.

ஆனால், இந்த மரபு பின்னர்வந்த பௌத்த சிங்கள தலைமைகளிடம் அறவே இல்லாமல் போய்விட்டது.

போர் வெறுப்புத்தன்மையைக் கடைப் பிடிக்கவேண்டிய சக்திகள் தம்மை போரியல் வெறியுள்ளவர்களாகவே அடையாளம் காட்டுகின்றனர்.

இவை சமாதானம், அகிம்சை சுட்டும் வாழ்புல நெறிகளுக்கு எதிரானவை. திலீபன் போன்ற குறியீடுகள் உணர்த்திய அரசியல் மார்க்க முறைகள் தீவிரமாக முன்னெடுக்கப்பட வேண்டிய காலத்தில், திலீபன் எதை எதிர்த்து நின்றாரோ அந்த அரசியல் வழி மூலம் திலீபனின் தூபி உடைப்பு நிகழ்த்தப்பட்ட பண்பாட்டுக் கொலை கண்டிக்கத்தக்கது. இவ்வாறு தெரிவித்தார். (ந)


பாராளுமன்றப் பொதுத் தேர்தல்-2010





த.நிரோஷன் 5



திரு.சண்முகநாதன் மனோகரன் 10
(முதன்மை வேட்பாளர்)



கா.டனிஸ்குமார் 2

மக்கள் எல்லோரும் தடையின்றி தவறாது வாக்களிக்க வாருங்கள்

உங்கள் பிள்ளைகளுக்கு ஒரு சந்தர்ப்பம் தாருங்கள்

சுயேட்சைக்குழு-02 X

எமது குழுவிற்கு ஆதரவு நல்கி மூக்குக்கண்ணாடி சின்னத்திற்கு வாக்களியுங்கள் (671)



IBM Computers for Sale
@
UNI - COMPUTER WAREHOUSE

Original IBM Think Center (With Lock)

Intel Pentium IV 3.20 GHZ
1 GB Ram 80 GB HD
CRT Monitor DVD Rom

IBM Full Set :- Rs.27500/= !!!
(இச் சலுகை இன்று தொடக்கம் ஞாயிற்றுக் கிழமை வரை மட்டுமே)

Internet Browsing Center களுக்கும் அரச, தனியார் நிறுவனங்களுக்கும் உயர் கல்வி கற்கும் மாணவர்களுக்கும் மிகவும் உகந்தது !!!

IBM System மட்டும் Rs.20000/= இன்றே முந்துங்கள் !!!

IBM கணனி என்றால் No - 1 தரம் என்பது உலகறிந்த விடயம் !!!
அனேக அரச மற்றும் தனியார் நிறுவனங்களில் விரும்பி பாவிக்கப்படுவது!!!
நீடிக்க பாவனைக்காலம் மிகக்குறைந்த மின்சாரத்தில் இயங்க கூடியது !!!

விபரங்களுக்கு :- UNI - ICT CAMPUS
No - 83, Palaly Road,
Kantharmadam, Jaffna.
T.P No : - 021 - 321 - 6433 / 0777 110862



பாராட்டி வாழ்த்துகின்றோம்

எமது கல்வி நிறுவனத்தில் விரிவுரையாளர்களாகச் சேவையாற்றும்



இவ் இருவரும் யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தினால் வழங்கப்படும் 25 ஆவது பட்டமளிப்பு விழாவில் முறையே தமிழில் முதுகலைமாணி, சைவசித்தாந்தத்தில் முதுகலைமாணி பட்டங்களைப் பெற்று பெருமை அடைகிறார்கள். இவர்கள் மேன்மேலும் உயர்வடைந்து வாழ்வில் வளம் பெற வாழ்த்துகின்றோம்.



திரு.கந்தையா தர்மராசா S.L.T.E.S.-III
(யாழ். கல்வியியற் கல்லூரி விரிவுரையாளர்)
Sp. Trd, B.A, PGDE, M.Ed, M.A (Tamil)

திருமதி சுதமதி நடராசா S.L.T.S.-I
(ஆசிரியர்-சாவ.மகளிர் கல்லூரி)
B.A (Hons), PGDE, M.Ed, M.A

NEW DEGREE COLLEGE
(யாழ். பேராதனைப் பல்கலைக்கழக வெளிவாரிக்கற்கை நிலையம், தென்மராட்சி)
சங்கத்தானை சாவகச்சேரி

-இயக்குநர், விரிவுரையாளர்கள், மாணவர்கள்

இவர்களுடன் முதுகலைமாணி(M.A) பட்டம் பெறும் ஏனைய தென்மராட்சி பிரதேச கல்வியுலக உறவுகளான
திரு.ச.மார்க்கண்டு, திரு.க.சின்னத்துரை, திருமதி பாலாம்பிகை சிவகுமாரன்,
திரு.பொ.வல்லிபுரநாதன், திரு.சி.சுந்தரமூர்த்தி, திரு.வீ.மகேந்திரகுமார்,
திரு.க.ஈஸ்வரன், திருமதி K.சிவலோஜினி, வே.ஞானசம்பந்தன்
ஆகியோரும் வாழ்வில் உயர்வுகள் பல பெற வேண்டி வாழ்த்துகின்றேன்.

திரு.வே.உதயகுமார் இயக்குநர்,
NEW DEGREE COLLEGE
சங்கத்தானை, சாவகச்சேரி.
(அ-4784)



பாராட்டி வாழ்த்துகின்றோம்



யாழ்ப்பாண பல்கலைக் கழகத்தில் இன்று 25 ஆவது பட்டமளிப்புவிழாவில் சிறப்பு கலைமாணி B.A.(Hons-Sociology) பட்டம் பெறும் Mr.செ.குகன் அவர்களை பல்கலையும் பெற்று பற்பல பட்டங்கள் பெற்று பல்லாண்டு காலம் வாழ வாழ்த்துகின்றோம்.

வாழ்த்துவோர்:-
பெற்றோர், அண்ணன்மார், அக்காமார், மைத்துனன், மைத்துனிமார், பெறாமக்கள்.

ஆஸ்பத்திரி வீதி, கோண்டாவில் கிழக்கு.
(959)

நகர சபை, யாழ்ப்பாணம்,



# சாவகச்சேரியில் ஐவர் கைது

(வடமராட்சி)

தேர்தல் சுவரொட்டிகளை ஒட்டிய ஐவர் நேற்று இரவு 10.30 மணியளவில் சாவகச்சேரி நகர பஸ் நிலையப் பகுதியில் வைத்து கடமையில் ஈடுபட்டிருந்த பொலிஸாரினால் கைது செய்யப்பட்டுள்ளனர்.

இவர்களில் பல்கலைக்கழக மாணவர்கள், உயர் தர மாணவர்கள் இருவர், நிறுவனம் ஒன்றில் பணியாற்றும் ஊழியர் என தெரிவிக்கப்படுகின்றது.

இவர்கள் அகில இலங்கை தமிழ்க் காங்கிரஸ் கட்சிக்கு ஆதரவான சுவரொட்டிகளை ஒட்டிக் கொண்டிருந்ததாகக் கூறப்படுகின்றது. (ச-3,24)

# ஓமந்தையில் மூவர் கைது

(ஓமந்தை)

ஓமந்தையில் பொலிஸாரினால் மூன்று பேர் கைது செய்யப்பட்டுள்ளனர். வவுனியா-ஓமந்தையில் படையினரின் சோதனைச் சாவடியில் பாரவூர்தியில் சென்ற மூவர் பொலிஸாரினால் கைது செய்யப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்படுகின்றது.

தென்னிலங்கையிலிருந்து யாழ்ப்பாணத்திற்குப் பாரவூர்தியில் வந்த இவர்கள் பாரவூர்தியில் ஆயுதங்கள் வைத்திருந்தார்கள் என்ற காரணத்தினால் கைது செய்யப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது. (ச-5)

## ஜே.வி.பி...

கத்திற்கு எதிராக சதித் திட்டம் தீட்டினார்கள் என்ற குற்றச்சாட்டைச் சுமத்தி அரசாங்கத்திற்குச் சவாலாக இருக்கும் எதிர்க்கட்சிகளின் செயற்பாட்டாளர்களை ஒடுக்கும் நடவடிக்கையில் அரசாங்கம் ஈடுபட்டுள்ளது என அநுரகுமார திஸநாயக்க கூறியுள்ளார்.

குற்றப் புலனாய்வுத் திணைக்களத்தின் விசாரணைகளின் பின்னர் அவர் இதனைக் கூறியுள்ளார். அரசாங்கத்திற்கு விரோதமாக இடம்பெற்ற சூழ்ச்சி குறித்து வாக்கு மூலம் ஒன்றைப் பெற்றுக் கொள்ளும் தேவையிருப்பதாக அறிவிக்கப்பட்டதையடுத்து நேற்று முற்பகல் 9 மணியளவில் அநுரகுமார திஸநாயக்க குற்றப் புலனாய்வுத் திணைக்களத்துக்குச் சென்றதுடன் அவரிடம் ஒன்றரை மணிநேரம் விசாரணை நடத்தப்பட்டுள்ளது.(ச-5)

# இராணுவ சிவில் அமைப்பின் முறைப்பாட்டுப் பெட்டி

(யாழ்ப்பாணம்)

பொதுமக்களின் நலன்களைப் பேணும் முகமாக யாழ்.பாதுகாப்புப் படையின் தலைமைச் செயலக குடியியல் பிரிவினரால் (சிவில்) யாழ்.போதனா வைத்தியசாலையின் வாசலில் முறைப்பாட்டுப் பெட்டி ஒன்றினைப் பொருத்தியுள்ளனர்.

அம் முறைப்பாட்டு பெட்டியிலுள்ள அறிவித்தலின்படி யாழ்.மக்களின் அரசியல், சமூக, பொருளாதார, பண்பாட்டு நிலைமைகளைக் கருத்தில் கொண்டு பொதுமக்களுக்கும் அரசாங்கத்திற்குமிடையே ஓர் உறவுப் பாலமாகக் குடியியற் பிரிவு செயற்படவிருப்பதாகவும் இராணுவ உதவியின் மீள் ஒருமைப்பாட்டினை ஏற்படுத்தும் முகமாக மக்களின் ஆலோசனைக் கருத்துக்கள், முன்மொழிவுகளை இப் பெட்டியில் எழுத்து மூலம் தெரிவிக்கலாம் எனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (ச-30)

## முல்லைத்...

செய்யப்பட்ட நிலையில் அவர்களுக்கு வைத்திய சேவைகள் தேவைப்படுவதனால் இந்த வைத்தியசாலை திறந்து வைக்கப்பட்டுள்ளது.

இந்தப் பகுதிக்கான பேருந்து சேவைகளும் ஆரம்ப சுகாதார நிலைகளும் பூர்த்தியாக்கப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டது.

மீளக் குடியமர்ந்த மக்கள் நாளாந்தத் தேவைகளை நிறைவு செய்து கொள்வதில் பல சிரமங்களை அனுபவிக்கின்றார்கள். அவர்களைச் சுதந்திரமாக அவர்களது உறவினர்கள் சென்று பார்க்க முடிவதில்லை எனவும் கூறப்பட்டுள்ளது.

அத்தோடு அக்கராயன், ஸ்கந்தபுரம், வன்னேரிக்குளம் போன்ற பகுதிகளிலும் மக்கள் மீளக்குடியேற்றத்திற்காக அழைத்துச் செல்லப்பட்டுள்ளனர். (ச-5)

## ஐ.நா...

பட்டுள்ளது.

குறித்த விசேட பிரதிநிதியின் பெயர் குறிப்பிடாத போதிலும் இலங்கைக்கான விசேட பிரதிநிதி யசூசி அகாஷியே இவ்வாறு தமக்கு விடுக்கப்பட்ட கோரிக்கையை நிராகரித்திருக்கலாம் என ராஜதந்திர வட்டாரத் தகவல்கள் தெரிவிக்கின்றன. (ச-5)

# மதிய நேர உணவினை உட்கொண்ட 100 மாணவர்கள் வைத்தியசாலையில்

மட்டக்களப்பு இலுப்பைச்சேனைப் பாடசாலையில் மதிய நேர உணவினை உட்கொண்ட மாணவர்கள் உடல் நலக்குறைவினால் பாதிக்கப்பட்டு வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

மதிய நேரம் உணவினை உட்கொண்டவர்கள் வாந்தி, தலைச்சுற்று மற்றும் மயக்கம் ஏற்பட்ட நிலையிலேயே குறித்த மாணவர்கள் நேற்று மாலையில் வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார்கள்.

உடல் நலக் குறைவினால் நூற்றுக்கும் மேற்பட்ட மாணவர்கள் சிகிச்சையின் பொருட்டு அனுமதிக்கப்பட்டுள்ளார்கள்.

மதிய உணவினை உட்கொண்ட மாணவர்கள் நீரருந்திய பின்னரே இவ்வாறு மயக்கம் அடைந்தனர். உலக உணவுத் திட்டத்தின் கீழ் மட்டக்களப்பு மாவட்டத்தில் சில பாடசாலைகளுக்கு மதிய உணவு வழங்கப்பட்டு வருகின்றமை குறிப்பிடத்தக்கது.

மாணவர்களுக்கு உணவினை சமைக்கும் நபர்களிடையே ஏற்பட்ட முரண்பாடான கருத்துக்களையடுத்தே உணவில் நஞ்சு கலக்கப்பட்டிருக்கலாம் என சந்தேகிக்கப்படுகின்றது.

உணவினைச் சமைத்து பின் விலகிக் கொண்ட நபர் ஒருவரைக் கைது செய்து விசாரணைகளை மேற்கொண்டு வருவதாகப் பொலிஸார் தெரிவித்தனர். (ச-9)

## சுத்தமான...

சேகாவை அவரது நெருங்கிய உறவினர்கள் பார்வையிடச் செல்ல முடியும் என நீதிமன்றம் தீர்ப்பு வழங்கியிருந்தது. இந்த உறவினர்களின் பெயர்ப் பட்டியலை சட்டமா அதிபர் திணைக்களம் கோரியிருந்த நிலையில் சில வாரங்களுக்கு முன்னர் அந்தப் பட்டியல் வழங்கப்பட்டது.

எனினும் இந்தப் பட்டியலில் உள்ள உறவினரும் இதுவரை அவரைச் சந்திக்க அனுமதிக்கப்படவில்லை. அனோமா பொன்சேகா மதிய மற்றும் இரவு நேர உணவைக் கொண்டு செல்வதைக் குறைத்து, தேர்தல் பிரசாரப் பணிகளில் இருந்து அவரை ஓரங்கட்டி சரத் பொன்சேகாவின் தேர்தல் பிரசாரத்தைச் சீர்குலைப்பதே அரசாங்கத்தின் நோக்கமாகும்.

அனோமா பொன்சேகா நேற்று முன்தினம் சரத் பொன்சேகாவைச் சந்திக்கச் சென்றபோது அவர் உடல் நிலை பாதிக்கப்பட்டுள்ளமை குறித்து எமக்கு அறிவித்தார்.

அவர் சுவாசிக்கச் சிரமப்படுவதுடன் இருமல் நோயினாலும் பீடிக்கப்பட்டுள்ளார். சரத் பொன்சேகா நாட்டுக்குச் சுதந்திரத்தைப் பெற்றுத் தந்த நபர். அவர் இல்லாவிட்டால் யுத்தத்தை முடிபுக்குக் கொண்டு வந்திருக்க முடியாது என்றார். (ச-5)

## ஆலோசனைக்...

செயற்பட்டு வருகின்றனர் என ஐ.நா.செயலாளர் நாயகம்.பான் கீ மூன் தெரிவித்துள்ளார்.

இந்தக் குழுவைத் தெரிவு செய்வது தொடர்பான இறுதிப் பணிகள் நடைபெற்று வருகின்றன. இது தொடர்பில் இலங்கை அரசுடன் பேச்சுக்கள் மேற்கொள்வதற்கு ஐ.நாவின் அரசியல் விவகாரங்களுக்கான பிரதிநிதி லியாம் பொஸ்கோ விரைவில் இலங்கைக்கு வருவார் என அவர் மேலும் தெரிவித்துள்ளார்.

ஆனால் இலங்கையில் கடந்த வருடம் நடைபெற்ற போரில் ஏற்பட்ட மனித அவலங்களுக்கு ஐ.நாவின் பிரதிநிதி விஜய் நம்பியாரும் உடந்தையாக இருந்தவர் என ஐ.நாவின் ஊடக அமைப்பான இன்னர் சிற்றி பிரஸ் தெரிவித்துள்ளது. (ச-5)

## 25 ஆவது...

இப் பட்டமளிப்பு விழாவில் கலாநிதி, முதுகலைமாணி, இளமாணி, பட்டப்பின் டிப்ளோமா ஆகிய பட்டங்கள் மாணவர்களுக்கு வழங்கப்படவுள்ளன.

சுமார் ஐந்து வருட கால இடைவெளியின் பின் பட்டமளிப்பு விழா நடைபெறவுள்ளமை குறிப்பிடத்தக்கது.

இதேவேளை இப் பட்டமளிப்பு விழாவில் சமுதாய பிரதேச திட்டமிடல், தொல்லியல் ஆகியவற்றுக்கான பட்டங்கள் இன்றுமுதல் முறையாக வழங்கப்படவுள்ளது.

இதேவேளை இப் பட்டமளிப்பு விழா சிறப்புற நடைபெற முன்னாள் துணைவேந்தர் பேராசிரியர் பொ.பாலசுந்தரம்பிள்ளை வாழ்த்துத் தெரிவித்துள்ளார்.

இவரது பதவிக் காலத்தில் ஆறு பட்டமளிப்பு விழாக்கள் நடைபெற்றமை குறிப்பிடத்தக்கது. (ச-5)

## நாடாளு...

அண்மையில் ஆளும் கட்சியில் இணைந்து கொண்ட ஜோன்ஸ்டன் பெர்னாண்டோ மற்றும் இந்திக்க பண்டாரநாயக்க ஆகியோர் தமது அமைச்சுப் பதவிகளை இழக்க மாட்டார்கள் எனத் தெரிவிக்கப்படுகின்றது.

சட்ட மாஅதிபரின் ஆலோசனையின் அடிப்படையில் இந்தத் தீர்மானம் எடுக்கப்பட்டுள்ளது.

எதிர்வரும் தேர்தல்கள் வரையில் குறித்த இருவரும் ஆளும் கட்சியில் அமைச்சர்களாக செயற்படுவார்கள் எனப் பீரிஸ் மேலும் தெரிவித்தார். (எ-1)

திருமணங்கள் சொர்க்கத்தில் நிச்சயிக்கப்படுகின்றது
ஆனால் திருமண அழைப்பிதழ்களோ மதி கலர்ஸில் நிச்சயிக்கப்படுகின்றது.
உங்கள் இல்லங்களில் நடைபெற இருக்கின்ற மங்கலகரமான நிகழ்வுகளுக்கு ...
திருமண அழைப்பிதழ் காட்சியறை
மதிகலர்ஸ் பிறிண்டர்ஸ்
இந்தியாவில் இருந்து இறக்குமதி செய்யப்பட்ட 200க்கு மேற்பட்ட பல வர்ண புத்தம்புதிய டிசைன்களுடன் 15 ரூபா முதல் 35 ரூபா வரை விசேட கழிவுடன் எமது காட்சியறையில் உங்களுக்காக ...
அழைப்பிதழ்
MATHI COLOURS PRINTERS
Wedding Card Show Room
15/2B, முருகேசர் லேன், நல்லூர், (முத்திரைச்சந்தி) யாழ்ப்பாணம்.
தொ.இல : 021 2229285, 0777 222524

NEW SCIENCE HALL & COLLEGE
2012 Batch
Mechanics
சனி, ஞாயிறு - 12.45 - 2.00.
ஆரம்பம் - 27.03.2010
By: R. குகன்
(950)







இப்பத்திரிகை வலம்புரி அன்.கோஸ்தாபனத்தாரால் இல.3,2 ஆம் ஒழுங்கை, பிறவுண் றோட், யாழ்ப்பாணம் என்னும் முகவரியிலுள்ள அவர்களது அச்சகத்தில் 26.03.2010 இல் அச்சிட்டு வெளியிடப்பட்டது.